**RAJA & CO SOLICITORS**
We provide following Legal Services:
Conveyancing:
Buying and Selling
Houses, Flats & Business
- Criminal Cases
- Civil Litigation
- Family
- Immigration

TOOTING
10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG
Tel: 020 8772 4900

COLLIERS WOOD
2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ
Tel: 020 8543 4974

We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family

BILINGUAL FORTNIGHTLY
# ஒரு பேப்பர்
ORU PAPER
FREE
PAPER - 08 ♦ ISSUE - 172 ♦ FRIDAY 22 JUNE 2012

**LONDON ACCIDENT CLAIMS LIMITED**
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
- தனிநபர் அனர்த்த நஸ்ட ஈடு (Neck, Back & Shoulder Pain)
- வாகனப் பிரதியீடு = வாடகை வாகனம் (Terms & Conditions Apply)
- புனர் நிர்மாணம் அல்லது வாகன இழப்புக்களுக்கான பூரண நஸ்ட ஈட்டுத்தொகை முதலில்

NO WIN NO FEE
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM




**UK VISA SERVICE**
உங்கள் சகலவிதமான குடிவரவு தேவைகட்கும் தொடர்பு கொள்ளுங்கள்
- மேன்முறையீடுகள்
- அரசியல் அடைக்கலம்
- EEA Applications
- Human Rights Applications

20 Years Experience in Immigration
Kulendran Immigration Law Chambers
We Open Seven Days
Kulendran (KILC)
T: 0208 542 8222
M: 07769 185 592
F: 0208 542 8666

விடுமுறையோ அல்லது உத்தியோகப் பயணமோ நியாயமான விலையில் விமானச்சீட்டுகளை பெற்றிட நம்பிக்கையான தமிழ் நிறுவனம்
BRITISH AIRWAYS Preferred Partner
www.flyplaces.co.uk
**Flyplaces** Worldwide Travel & Tours

COLOMBO FROM £169 +TAXES
CHENNAI FROM £189 +TAXES
TORONTO FROM £199 +TAXES

EXPRESS VISA SERVICES
இலங்கை,இந்தியா மேலும் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றுவர விசா எடுத்துத்தரப்படும்.
மேலதிக தகவல்களுக்கு எமது CROYDON அல்லது HAYES கிளைகளை நாடுங்கள்
IATA
We accept all major debit & credit cards
Note: All fares mention above are low season, excluding taxes/ terms & conditions apply.
இன்றே தொடர்புகொள்ளுங்கள்
020 8866 3311

UKல் அகதி அந்தஸ்த்து தொடர்பான உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருப்பின் அல்லது நீண்ட காலமாக முடிவு இன்றி இருப்பின் தற்போதைய Home Office இன் புதிய சட்ட விதிகளுக்கு இணங்க அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் வதிவிட உரிமை உங்களுக்குப் பெற்றுத்தரப்படும்.
BBC, Ch 4இல் எமது Official Interview ஒளிபரப்பானது
கைது செய்தல், தடுத்து வைத்தல், நாட்டுக்குத் திருப்பி அனுப்புதல் போன்ற விடயங்களில் எமது சிறந்த அனுபவமுள்ள சட்டத்தரணிகள் குழாமின் மூலம் ஆலோசனை பெற்றுக் கொள்ளலாம்
தமிழ் சிங்களம் மொழிகள் மூலம் ஆலோசனை
**Vincent Solicitors**
07870 763 570 / 020 8574 0666
11-13, South Road, Southall UB1 1SU (ஹிமாலயா தியேட்டருக்கு எதிராக)

குழந்தைப் பாக்கியம் கிடைக்காதோர்
வாழ்க்கைக்கு ஒளியூட்டுங்கள்!
நீங்கள் 35 வயதுக்குள் இருந்தால் கருமுட்டை தானம் செய்து அதற்கீடாக '£750'ஐ அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுங்கள்
குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள திறமையான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
**HARLEY STREET FERTILITY CLINIC**
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

**UK Visa from INDIA**
Our office in Chennai can process:
- Domestic Worker Visas • Visit Visas
- Dependant Visas • Student Visas

Contact UK Immigration specialists
Poul & Minnaa
044 4261 3698
New no 88 old no 150, 1st floor, Dharma Towers, Nelson Manickam road, Choolaimedu Chennai 94

**Are you an overstayer in the UK or a failed asylum seeker?**
If so you may be eligible to apply for a Visa under the Human rights Act.
Contact Immigration law experts
Paul John & Co Solicitors
020 8215 1205
- Free initial advice session (if you bring this advertisement)
- Legal Aid available for eligible clients

We process all UK Visa applications
Paul John & Co SOLICITORS
115a The Grove, Stratford, London, E15 1EN
www.pauljohnandco.co.uk
We are authorized and regulated by the SRA

Semi-Automatic
இடியப்பப்பொறி
2 Years World Wide Warranty
1 இல் 5 பல்தொழிற்பாடுகள்
- 1:50 நெம்புத் தொழில்நுட்பம்
- தானியங்கிச் சுழல்தட்டு
- திடமான நிலைப்படுத்தல்

பல நாடுகளில் கடைகளிலும் இணையத்தளம் ஊடாக உலகெங்கிலும் கிடைக்கப்பெறுகின்றது
0044 (0) 20 3239 3442
Email: info@oritha.com, www.oritha.com
Oritha live your way

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# HARISH TRAVELS

**உலகின் எப்பாகத்திற்கும் விமானச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய தமிழர் நிறுவனம்**

*Best Deals to Colombo.......*

| SriLankan | KUWAIT AIRWAYS الخطوط الجوية الكويتية | QATAR AIRWAYS القطرية | الطيران العماني OMAN AIR |
|---|---|---|---|
| £345 + Tax | £250 + Tax | £220 + Tax | £205 + Tax |

**Call 02085502000, 07940999455**

Seats available for July / August

---

# இயேசு அழைக்கிறார்

பாவக்கட்டா? சாப தோஷமா?
கவலையா? கண்ணீரா? வியாதியா?

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும் – யோவான் 16:20
தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை – லூக்கா 1:37

இதோ ! சீக்கிரமாய் வரப்போகின்ற இறைவன் இயேசுவை ஆராதிக்க வாருங்கள்.

துதி ஆராதனை ஞாயிறு காலை **10:00** | தொடர்ந்து சிறுவர் பாடசாலையும் நடைபெறும்

இடம்: GLORY CHURCH OF GOD ~ U.K.
1,George Lane, Lewisham, London SE13 6HQ,
(Near Lewisham Hospital and Behind the Ealam Shop)

**Bus:** 47, 54, 75, 136, 185, 208
**Station:** Catford, Lewisham,
**DLR:** Lewisham

Contact: **Pr.Robert Bhaskharan**
Tel:**020 8695 1510 | 077 3761 2352**
Email: glorychurchofgod@yahoo.co.uk, robert_bhaskharan@yahoo.co.uk

---

பிரியமானவர்களே...
**"உங்கள் துக்கம் சந்தோசமாய் மாறும்"**

இந்த தேசத்தில் உன் உள்ளம் எதை குறித்து கலங்குகிறது?

- கணவனின் குடி பழக்கத்தினால் நோகடிக்கப்படுகிறாயா?
- குழந்தையின் உடல் உள நிலையை குறித்து கலங்குகிறாயா?
- மரணத்திற்கேதுவான நோயா?
- கடன் தொல்லையா?
- பில்லி சூனியமா?
- பிள்ளைகளை குறித்து பாரமா?
- மன அழுத்தமா?
- கணவன் மனைவிக்கிடையில் பிரச்சனையா?
- திருமணமாகி குழந்தைகள் இல்லை என்று கலங்குகிறாயா?

*அருள்நாதர் இயேசு சொல்கிறார்:*
*"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே என்னிடத்தில் (இயேசு) எல்லோரும் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."*
*வாருங்கள் ஜெபிப்போம் இயேசுவின் நாமத்தில் ஜெயம் பெறுவோம்.*

**ஞாயிறு ஆராதனை நடை பெறும் இடம்:**
19-21 Bellingham Estate, Bellingham,
Catford, Lewisham. SE6 3BX
**நேரம் 2. 30 pm**
[Near **Bellingham station**]
[Bus Stop **Catford Bus Garage** ]
[**Bus route no**: 47,54,136, 171 ,199, 208, 320]

தொடர்புகளுக்கு: **நல்ல சமாரியன் தேவ சபை**
**Bro. Edmond**
**Mob: 07877 977 086 Tel: 020 8691 2705**

---

# KALVIKOODAM TUITION CENTRE

கல்விக்கூடம் Excellence in Learning

**லண்டன் வாழ் இலங்கைத் தமிழருக்கு ஓர் இனியசெய்தி.....!!!**

FREE BASIC TAMIL LESSONS

TAMIL LESSONS
BEGINNERS
INTERMEDIATE
ADVANCED
£5/hr

MATHS
ENGLISH
SCIENCE
£10/hr per subject

தமிழ்மொழியை கற்க ஓர் சிறந்த இடத்தினை தேடிக்கொண்டிருக்கும் உங்களுக்காக ஓர் **கல்விக்கூடம்**

தமிழ்மொழி மட்டுமின்றி கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் போன்ற இன்னும் பல பாடங்களை ஒரே கூரையில் கற்க நாடவேண்டிய ஒரே இடம்.

## 'கல்விக்கூடம்'

edexcel
advancing learning, changing lives

IGCSE தமிழ்மொழிப் பரீட்சையை எமது அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை நிலையத்தினூடாக வெளி-வாரியாகத் தோற்றவும் முடியும்.

**பிரதி ஞாயிறு தோறும்**
10.00 மணிமுதல் – மாலை 08.00 மணிவரை நடைபெறும்.

– தொடர்புகளுக்கு –
**020 8090 3366**
**07738 056 950**
**www.kalvikoodam.co.uk**

**Harrow Branch**
167, Imperial Drive
Harrow, HA2 7HD

**Wembley Branch**
24-28, London Road,
Wembley, HA9 7EX

**Edgware Branch**
2, Turner Road,
Edgware HA8 6BJ

---

# UK COOL
AND SHOP FITTING

168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

UK COOL & SHOP FITTING LTD

**REFRIGERATION**
Air Condition
Fridge
Freezer
Cold Room (New & Used)
Repairing & Installation

**SHOP FITTING**
Shelving
Flooring
Ceiling
Lighting & Wiring
Counter
CCTV Cameras
Shop Front & Shutter

**BUILDING WORK**
Roofing
Extension

**MOVING & DEVILERY**

**7 Days 24 HRS services & Repair**

URGENT REPAIR? CALL:07951854057

**1 YEAR PARTS & LABOUR WARRANTY**

UK COOL & SHOP FITTING LTD

---

# Shop Unit Tolet

TO LET

**Tolworth Broadway இல்**
**புடவைக் கடை போடுவதற்கான**
**ஒரு Unit வாடகைக்கு உண்டு**
**£ 5000 Deposit**
**£ 750 Rent**
**(Including Rates and Bills)**

**தொடர்புகளுக்கு: Surrey Pawnbrokers**

**94, TOLWORTH BROADWAY, TOLWORTH, SURREY, KT6 7HT**

**T: 0208 399 9176 M: 07947 579 682**

---

# SURREY PAWNBROKERS

## உங்கள் நகை அடைவில் உள்ளதா ?

### அதி கூடிய வட்டியா ?

நாம் நேரில் வந்து உங்கள் நகைகளை மீட்டு குறைந்த வட்டியில் (3.5%) மீள் அடைவு செய்து தரப்படும். உங்கள் நகைகளுக்கு பிரித்தானியாவில் அங்கீகாரமும், உத்தரவாதமும் பெற்ற ஒரே தமிழ் நிறுவனம் **SURREY PAWNBROKERS**

- நகை அடைவும் மீள் அடைவு சேவையும்
- பழைய புதிய நகைகள் கொள்வனவு செய்யப்படும்
- வங்கிக் கணக்கு இல்லாதோருக்கு காசோலை மாற்றுதல்
- நாணய மாற்று சேவை

**தொடர்புகளுக்கு: Surrey Pawnbrokers**

**94, TOLWORTH BROADWAY, TOLWORTH,SURREY, KT6 7HT**

**T: 0208 399 9176 M: 07947 579 682**

# பூராயம்




## மக்கள் குழம்புகிறார்கள்

போர் பின்னடைவு பெற்றுமக்களில் பலர் அல்லலுறும் சூழலைப் பயன்படுத்தி சொத்துச் சேர்க்க முனையும் கயவர்களைக் கண்டு மக்கள் குழம்பாமல் என்ன செய்வது? எங்கள் அரசியல் தலைமைப் பீடங்கள் மகிந்தருக்கப் பயந்து வாலைச் சுருட்டிக் கொண்டு இருக்கையில் குழம்பாமல் என்ன செய்வது? துணிவும் வீரமும் உறுதியும் அத்துடன் விவேகமும் கொண்ட தலைவன் ஒருவன் வருவான். எங்கள் போராட்டம் தொடரும். காரணம் சூழல் அப்படி உள்ளது. காலகட்டம்தான் தலைவனை உருவாக்குவது என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும்.

*கஜன்*

## கனபேரைக் காணேல்ல....

கன காலமா **ஒரு பேப்பர்** வாசிச்சு வாறன் வர வர பேப்பரில் தொடர்ந்து எழுதுற கனபேரைக் காணக்கிடைக்குதில்ல... அதுவும் கிட்டடியில பொன். அம்பலத்தார் எழுத வந்தபிறகு கன பேரைக் காணேல்ல...

நிண்ட வெள்ளத்தை வந்த வெள்ளம் அடிச்சுக்கொண்டு போன மாதிரி கடைசிப் பேப்பரில பொன். அம்பலத்தாரையும் காணேல்ல வழமையாய் எழுதுற சேயோன், இரவி, பாவை ஜெயபாலன் ஆகியோரையும் காணக் கிடைக்கேல்ல என்ன நடக்குது உங்க ?

*மின்னஞ்சலில் வந்த கடிதம்*

## தினேசுக்கு கொலிடே கூடிப்போச்சு..

ஜீரிவி தொலைக்காட்சியில் வெளிச்சம் நிகழ்ச்சி தினேஸ் அவர்கள் இல்லாமல் நல்லாவே இல்லை. அவர் விடுமுறையில் போயிருக்கிறதாகவும் இண்டைக்கு வாறார் நாளைக்கு வாறார் என்று அறிவித்தார்கள். திரும்ப ஒன்று இரண்டு நாள் வந்தார் பிற்பாடு அவரை காணவில்லை. அவையளுக்கு போன் அடித்துக் கேட்டால் திரும்ப கொலிடே போயிருக்கிறார் ஒரு கிழமையில் வருவார் என்று சொல்கிறார்கள். ஜீ.ரி.வி. எங்கடை தேசிய ஊடகம் என்றபடியால் பார்த்து பாராமல் கொலிடே கொடுக்கிறார்கள் போல் தெரிகிறது. இருந்தாலும் தினேசுக்கு கொலிடே கூடிப்போயிட்டுது.

*சிவதர்சினி*

## அடையாளங்களைப் பாதுக்காப்போம்!

தமிழீழ தேசியக் கொடியை கண்டால் எனக்கு நித்திரை வராது என்றோ அதைப்பார்த்தால் எனக்கு இரத்த அழுத்தம் கூடுகிறது என்றோ சிங்களவர்களையும், அவர்களது ஒட்டுப் படைகளையும் தவிர வேறெவராவது கூறியதாக எனக்குத் தெரியவில்லை. பிரித்தானிய மகாராணி கூட இவ்வாறு சொல்லவில்லை. இப்படியிருக்க சிலர் தமிழர்களுக்கு ஏன் இந்த கொடிவிவகாரம் பிரச்சனையாக இருக்கிறது என்று எனக்கு விளங்கவில்லை.

*போல் ரவிந்திரன்*

## தமிழீழ விளையாட்டு வீரர்களுக்கு வாழ்த்துக்கள்!

ஆசிரியருக்கு,

நீண்ட காலமாக கனவு கண்ட ஒரு முன்னேற்றகரமான முன்னெடுப்பு விளையாட்டுத் துறையில் வீரியநடை போட தமிழீழ அணி வீவா சுற்றுக்கிண்ணம் போட்டியில் கலந்து கொண்டுள்ள நிழல் படங்களை **ஒரு பேப்பர்** ல் பிரசுரித்தமைக்கு நன்றி. இதுபோன்ற நிகழ்வுகளை எமது இளைஞர்கள் உலக அரங்கில் அரங்கேற்ற வேண்டும். ஈழத் தமிழ் மக்களின் அடையாளம் உலகம் பூராக பரவ புலம் பெயர் தமிழ் மக்களின் ஆதரவு பெருக வேண்டுமென்பதே தணியாத ஆசை

*உமா மகாலிங்கம்*

## நல்லூர் கொடியேறப் போகிறது

விரைவில் பிளேன் சீட்டுக்களை வாங்குங்கள். கடைசிவரை இருந்தால் விலை கூடிவிடும். 2009ல் இறந்தவர்களைப் பற்றிக் கவலைப் படாதீர்கள். அது அவர்கள் விதி. நீங்கள் நல்லூர் போங்கள். முருகன் உங்களைக் காப்பாற்றுவான். உரிமை பற்றி யாரும் பேசினால் கவலைப் படாதீர்கள். அதுபற்றி நீங்கள் கவலைப் படாதீர்கள்.

*சீலன்*

## தென்னாபிரிக்க பிரகடனம் வெளிக்கு வருவது எப்போது?

தமிழ் தேசியக் கூட்டமைப்பு, நாடு கடந்த அரசாங்கம், உலகத்தமிழர் பேரவை ஆகியவை இணைந்து ஒரு நாலு அம்சங்கள் அடங்கிய பிரகடனத்தை வெளியிட முனைகின்றனவாம். அவ்வாறு ஒன்றை வெளியிடுமாறு பிளேக் மாமா வற்புறுத்தி வருகிறாராம். ஆனால் பிளேக் மாமா சொல்லிறபடி ஒரு பிரகடனத்தை தயாரித்தால் மக்கள் முன் தலைகாட்ட முடியாது என்பதால் இவர்கள் தயக்கம் காட்டுகிறார்களாம்.

*செபமாலை அன்ரனிதாசன்*

## நாடுகடந்த அரசாங்கமா? ஆன்மீக சபையா?

கனடாவில் யாகம் நடாத்தின நாடு கடந்த அரசாங்கம் இப்போ மற்ற நாடுகளிலும் பிரார்த்தனைகள் நடாத்தவிருக்கிறதாம். பேசாமல் இதை ஒரு ஆன்மீக சபையாக மாற்றினால் என்ன? இப்ப கோர்பரேட் சாமியார்களுக்குதான் நல்ல வருமானம் கிடைக்கிறதாம். ஆகையால் நாடுகடந்த அரசாங்கம் வேறேதும் திட்டங்கள் வைத்திருந்தால் அதற்கான நிதியை இதிலிருந்து எடுக்கலாம்.

*மு.சுகுணேஸ்வரன்*

## வாசுகி அக்கா போல் வேண்டும்

அண்மையில் ஜீ.ரி.வி. நிகழ்ச்சி ஒன்றில் வாசுகி முருகதாஸ் அக்கா தான் தமிழ்மக்களின் உரிமைக்காக தனது உயிரைக் கொடுக்கத்தயாராக இருப்பதாக, முன்னுக்கு நின்று போராட முன்வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். சட்ட அறிஞரான அவரது முன்மாதிரியை நாங்கள் எல்லோரும் கடைப்பிடிப்போமானால் எமது இனத்துக்கு விரைவில் விடுதலை கிடைக்கும் என்று நம்புகிறேன்.

*அழகானந்தன்*

## யார் அந்த மந்தி?

கடந்த **ஒரு பேப்பர்** பூராயத்தில், ஈஸ்ட் ஹாம் பகுதியில் இருக்கிற ஐயர் ஒருவர் மகிந்தவிற்கு மலர்மாலை அணிவித்ததாக எழுதியிருந்தது. யார் அவர் என்ற விபரங்கள் விளப்பமாக இல்லை. தயவு செய்து விபரமாக வெளியிடுவீர்களா? வர வர ஐயர்மார் காசு கிடைக்கிறது என்பதற்காக மந்திக்கும் மாலையிடத் தயாராக இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

*மனோகரன்*

## இலங்கை சென்றேன்

அண்மையில் இலங்கை சென்றேன். இலங்கை ராணுவவீரர்கள் நல்ல முறையில் பழகுகிறார்கள். அப்படியானால் 2009ல் நடந்த விதத்திற்கு காரணம் என்ன? அது தான் அரசியல். அவர்கள் அரசியல்தான் எம்மையும் எம்மினத்தையும் நசுக்கிறது. கோத்தபாயா, விமல் வீரவன்ச ஏதோ உறுமய, இந்தக் கயவர்களின் பல்லுப் பிடுங்கப் படும் வரை எமக்கு நிம்மதி ஏது.

*ரமணன்*

**ஒரு பேப்பர்** *தொடர்பான உங்கள் கருத்துக்களுக்கு.....*
**Tel : 020 7043 4314**

# கோத்தபாயவும் மகாஜனக் கல்லூரியும்....

## (MAHAJANA OLD STUDENTS ASSOCIATION - UK)

24-02-2012 அன்று தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியில் புதிதாகக் கட்டப்பட்ட ஒரு மூன்று மாடி கட்டிடமும் பார்வையாளர் அரங்கமும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் போர்க்குற்றவாளியுமான கோத்தபாயவால் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையில் முன்னணி செல்வந்தர்களில் ஒருவரான கந்தையா பாலேந்திரா (கென் பாலேந்திரா), தெல்லிப்பளையில் பன்னாலை எனும் ஊரைச் சேர்ந்த இவர் தனது தந்தையின் நினைவாக கல்லூரிக்காக ஒரு கட்டடம் அமைத்துக் கொடுக்க விரும்பினார். அந்தப் பொறுப்பை கோத்தபாய மூலம் 32 இலட்சம் செலவில் இராணுவத்தை வைத்து இக்கட்டிடத்தைக் கட்டி முடித்தார். இக் கட்டிடத்திற்கு அம்பலவாணர் கந்தையா எனும் பெயரே வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் சிலர் கதையை திசை திருப்பி இக் கட்டடங்களை சிறிலங்கா இராணுவம் தங்கள செலவில் கட்டிக்கொடுத்ததாக கதை கட்டினார்கள். ஒரு நிமிடம் யோசித்து பாருங்கள் இராணுவம் கட்டி இருந்தால் இக்கட்டிடத்திற்கு சிங்களப் பெயர் அல்லவா சூட்டி இருப்பார்கள். தன் சொந்த வியாபார நலன்களுக்காக மகாஜன மாதாவை விற்ற பி(ப)ணம் திண்ணியான பாலேந்திராவின் செய்கை மகாஜனக் கல்லூரிக்கு தலை குனிவை ஏற்படுத்தி உள்ளது.

இக் கட்டிடத்தை கோத்தபாயா தான் திறந்து வைக்க வேண்டும் என்று இவரின் நண்பர்களான கொழும்பு, கனடா மற்றும் பிரித்தானியா பழைய மாணவர் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் இருபத்தைந்து ஆண்டுகளாக தங்கள் பதவிகளை கட்டிப்பிடித்துக்கொண்டு இருக்கும் (தமிழ்) உறுப்பினர்களும் விரும்பினார்கள். அவர்களது விருப்பப்படியே கோத்தபாயவால் இக் கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டன.

மகாஜன OSA UK கூட்டங்களிலும் சரி நிகழ்வுகளிலும் சரி தாயகத்தில் யுத்தத்தால் உயிர் இறந்தவர்களுக்காக ஒருநிமிட மௌன அஞ்சலி செலுத்துவார்கள். இவை யாவும் போலி வேடமா? இது எல்லாம் கண் துடைப்புக்காகவா நடாத்தப்படுகிறது? குழந்தையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டி விடுகின்றார்களா இந்தப் பச்சோந்திகள்?

ஒரு தேசிய இனத்தையே குழந்தைகள், வயது போனவர்கள் என்று கூடப் பார்க்காமல் அழித்தொழித்த இந்தப் போர்க்குற்றவாளியை அழைத்து தாயகத்தில் இதுவரை ஓரிடமும் நடைபெறாத ஒரு நிகழ்வாக இது இடம் பெற்றது பெருத்த மனவருத்தத்தை தருகிறது.

மகாஜனா பழைய மாணவர் சங்கத்தில் இருக்கும் முக்கிய பிரமுகர்கள் அடிக்கடி கொழும்பு சென்று இந்த அரசியல் வாதிகளை சந்தித்து மது அருந்தி கூடிக்குலாவி விட்டு வருவார்கள். தங்களின் சொந்தத் தேவைகளுக்காக இதனைச் செய்தாலும் மகாஜனாக் கல்லூரியை இதற்குள் இழுத்து அதன் மகிமையை கேவலப்படுத்த வேண்டுமா?

மேற்படி திறப்பு விழாவுக்கும் தமக்கும் தொடர்பும் இல்லை என்றால் இவ்வருட OSA நிகழ்வுகளை இரத்து செய்து எதிர்பினைக் காட்டியிருக்கலாம். ஆனால், இவர்களோ இது எங்களின் 25 வது ஆண்டு அதனால் இன்னும் பெரிதாக விழாக்களை செய்கின்றார்கள். தங்களின் பெயருக்கும் பதவிக்குமாக இவ்விழாக்களைச் செய்கிறார்களே தவிர, பாடசாலையின் நலனுக்காக அல்லது என்பது தெளிவு.

ஐ.நா.வின் முன்னும் பாராளுமன்றத்தின் முன்னும் நின்று தமிழர்களுக்காக நியாயம் கேட்ட இளம் சந்ததியினர் சற்று சிந்தித்து பாருங்கள்? நீங்கள் எப்படி இவர்களின் நிகழ்வுகளில் உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், மற்று விளையாட்டு நிகழ்வுகளிலும் பங்கு பற்றுவீர்கள்? 22-07-2012 இல் நடைபெறும் OSA SPORTS DAY இல் கலந்து இன்னும் பணம் சேர்த்து போர்க்குற்றவாளி கோத்தபாயவுக்கும் இனவாத சிங்கள இராணுவத்தினருக்கும் கொடுக்கப் போகிறீர்களா? அல்லது இப்படிப்பட்ட ஒரு சங்கத்தின் நிகழ்வுகளை புறக்கணிப்பீர்களா? மனசாட்சி உள்ள எந்த மனிதர் யாரும் இவர்களின் நிகழ்வுகளில் கலந்து கொள்வார்களா?

*பெயர் குறிப்பிட விரும்பாத மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவன்*

*(மின்னஞ்சலில் வந்த இக்கடிதத்தில் பெயர் விபரம் தரப்பட்டிருந்தது)*

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400




Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
0207 099 2400

➡ESOL with Citizenship
▪ British Passport/ Naturalisation
▪ Indefinite Leave to Remain

➡International ESOL Diploma (A1,A2,B1,B2,C1,C2)
▪ Student Visa / Extension Test
▪ Spouse Visa / Extension Test
▪ Work Permit / Extension Test

▪ Courses from £200
▪ Successfully trained over 35,000 students
▪ Certificates within 20 days
▪ Multilingual staff
▪ City & Guilds approved centre

National Centres

BIRMINGHAM
7 Washington Street
Birmingham
B1 1JR
01216339919

SHEFFIELD
Sorby House
42 Spital Hill, Sheffield
S4 7LG
01143034303

LEICESTER
Imperial House
St Nicholas Circle, Leicester
LE1 4LF
01163260248

LUTON
169 A, Dunstable Road
Luton.
Beds – LU1 1BW
01582723123

SLOUGH
18-24 Stoke Road
Slough, Berkshire
SL2 5AG
01753722056

NEWCASTLE
51-52 Victoria Avenue
Whitley Bay,Tyne & Wear
Newcastle Upon Tyne – NE26 2BA
01912525265

FREE INITIAL ASSESMENT

London Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Camden, Holloway.

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, JUNE 22, 2012, ISSUE 172

## இனப்படுகொலையின் இன்னொரு வடிவமே நில ஆக்கிரமிப்பு

இலங்கைத் தீவு பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுபட்ட நாளிலிருந்து தீவின் வடக்கு கிழக்கு பகுதியின் இன விகிதாசாரத்தை மாற்றும் நடவடிக்கைகளை மாறி மாறிவரும் சிங்கள இனவாத அரசாங்கங்கள் மேற்கொண்டு வருகின்றன. ஆரம்பத்தில் கிழக்கில் கல்லோயா திட்டத்தின் மூலமும், பின்னர் மகாவலி நதி நீட்சித் திட்டத்தின் மூலமும் சிங்களக் குடியேற்றங்கள் ஈழத்தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகப்பகுதிகளில் நடைபெற்றன. வடக்கு கிழக்குக்கு இடையில் பூகோள ரீதியிலான இணைப்பை தடுக்கும் வகையில் மணலாறு பிரதேசத்தில் திட்டமிட்டு நடாத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் இராணுவ நோக்கத்திலானவை என்பதனை சிறிலங்கா அரசாங்க தரப்பிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

விடுதலைப்போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், சிறிலங்கா இராணுவத்தினால் உயர்பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டதனால் தமது வாழ்விடங்களிலிருந்து மக்கள் இடம்பெயர நேர்ந்தது. இருப்பினும் இக்கால கட்டத்தில், சிறிலங்கா அரசினால் சிங்கள் மக்களை குடியேற்றும் திட்டமிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அமைதிக்காலத்திலும் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டன.

விடுதலைப்புலிகள் யுத்தத்தில் வெற்றி கொள்ளப்பட்டதன் பின்னரான நிலமை முற்றாக மாறிவிட்டது, இன்று கேட்பதற்கு யாரும் இல்லாத ஒரு நிலையில் தமது விருப்பத்திற்கேற்ப, நிலங்கள் பறிக்கப்படுவதும், இராணுவக் கிராமங்கள் அமைக்கப்படுவதும், ஒரு காலனித்தவ காலத்து நிலஆக்கிரமிக்கு ஒப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தீவின் இதரபாகங்களில் காணி தட்டுப்பாடு ஏற்பட்டு நிலமற்றவர்கள் வடக்கு கிழக்குப் பகுதிகளில் குடியேற்றப்படுகிறார்கள் எனில் மனிதாபிமான அடிப்படையில் இந்நடவடிக்கைகளை பொறுத்துக் கொள்ள முடியும். ஆனால் தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை முற்றாக மறுதலிக்கக் கூடியவகையிலேயே இக் குடியேற்றங்கள் நடைபெற்று வருகின்றன. இதனை உறுதி செய்யும் வகையில், பிபிசியுடனான நேர்காணல் ஒன்றில், கோத்தாபாய இராஜபக்ச வடக்கு தமிழர்களின் பிரதேசம் என்பதனை ஏற்றுக் கொளள முடியாது எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது பற்றி நிறையவே போதிக்கும் மேற்குலக சக்திகள், நிரந்தரப் பகையுணர்வை ஏற்படுத்தும் இத்தகைய நடவடிக்கைகளை கண்டு கொள்ள மாட்டார்களா?

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*போன பேப்பரிலை இனப்படுகொலையாளி மகிந்தவிற்கு எதிரான மக்களின்ரை போராட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆக்கங்களை பிரசுரிச்சதற்கு பலரும் எங்களுக்கு நன்றி சொன்னார்கள்.*
*இதுக்குபோய் நீங்கள் எங்களுக்கு நன்றியொன்றும் சொல்லத் தேவையில்லை. எங்கட சனத்தின்ரை விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்திறதுக்குத்தான் நாங்கள் பேப்பர் அடிக்கிறமே தவிர, வேறை ஏதாவது தத்துவத்தை படிப்பிக்க நாங்கள் பேப்பர் அடிக்க வெளிக்கிடயில்லை. அதாலைதான் இத்தினை இடர்பாடுகளுக்கிடையிலும் எட்டாவது வருசத்தை கடந்து நிற்கிறம்.*

*கடந்த எட்டு வருசங்களாக எங்கடை ஆசிரியர் குழுவில் இருந்து எங்களோடு உறவாடிய இரவியண்ணா (இரவி அருணாசலம்) ஜூன் மாதத்திலிருந்து ஒரு பேப்பரின் ஆசிரியர் குழுவிலிருந்து விலகியுள்ளார். நீண்ட கால ஊடக அனுபவம் கொண்ட அவர் ஒரு பேப்பரின் வளர்ச்சியில் நிறையவே பங்களிப்புச் செய்திருக்கிறார். கடந்த சில மாதங்களாகவே ஒரு பேப்பரின் ஆசிரியர் குழுவின் பொதுவான சிந்தனைப் போக்கு அவருக்கு உடன்பாடனதாக இருக்கேல்லை. ஆனபடியால் அவர் இந்த முடிவினை எடுத்திருக்கிறார். இருந்தாலும் தற்சமயம் விடுமுறையிலிருக்கும் அவர் தொடர்ந்தும் ஒரு பேப்பரில் எழுதுவதாக சொல்லியிருக்கிறார். கடந்த பல வருசங்களாக அவர் எங்களுக்கு சொன்ன ஆலோசனைகளுக்கும், அவரின்ரை பங்களிப்புக்கும் இந்த இடத்தில் நன்றியை சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்.*

*சாத்திரி எழுதிவரும் 'கிணறு வெட்டக் கிழம்பிய பூதம்' தொடர் இந்தப் பேப்பருடன் முடிவடைகிறது. இலகுவான மொழியிலை எழுதப்பட்ட இந்தத் தொடரை எழுதுவதற்கான ஆவணங்களைச் சேர்ப்பதிலும், அது தொடர்புடைய ஆட்களைத் தேடிக் கதைப்பதிலும் அவர் பட்ட கஸ்ரம் அவருக்குத்தான் தெரியும். உண்மைகள் வெளிவர வேணும் என்ற ஒரே ஒரு காரணத்திற்காவே அவர் இந்த தொடரை எழுதியிருந்தார். இருந்தாலும் இதில் சம்பந்தப்பட்ட ஒரிருவரை அவரால் தொடர்பு கொள்ள முடியாமல் போய்விட்டது. அவையளும் தங்கட பக்க நியாயத்தையும் சொல்லியிருந்தால் இந்த தொடர் முழுமையானதாக இருந்திருக்கும். இதுபோன்ற இன்னொரு சம்பத் தொடரை எழுதுவதற்கான ஆயத்தங்களை செய்து வருகிறார் அதற்கான ஆதாரங்கள் முழுமையாகக் கிடைத்ததும் அதை எழுத தொடங்குவார்.*

***ஒரு பேப்பர்** இன் அட்டையில் பிரபலங்களை பிரசுரிக்கிறதில்லை என்பதனை அறிவியள். சமூகத்தில் அன்றாடம் நடக்கிற விடயங்களிலிருந்துதான் நாங்கள் படங்களை எடுத்து பிரசுரிக்கிறோம். உங்களிடமும் இதுபோன்ற படங்கள் இருந்தால் எங்களுக்கு அனுப்பி வையுங்கள் நல்லாயிருந்தால் பிரசுரிப்பம். படங்கள் பதிப்பகத்திற்கான தரத்தில் இருக்க வேணும் எண்டது அவசியம்.*

*மீண்டும் சந்திப்பம்....*

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

# Sri Lanka: The Meaning Of Victory



By: By Meenakshi Ganguly

'After 30 years we now see the dawn that will take us to a golden age of the future,' declared Sri Lankan President Mahinda Rajapaksa as he presided over the third Victory Day celebration on May 20. Over 12,000 personnel participated in the parade of military and police equipment used to defeat the rebel Liberation Tigers of Tamil Eelam (LTTE) in 2009 after a three-decade long war.

A golden future will need more than triumphalist statements of victory. The cost of the war to Sri Lankan society was huge. More than 100,000 civilians died in the long conflict and nearly 40,000 in the final months. According to the government, over 24,000 Sri Lankan soldiers lost their lives and many more were wounded or maimed. Over half a million Sri Lankans were forced to flee their homes, either because of the fighting or ethnic cleansing. Many more moved to other countries, including India.

Both government forces and the LTTE were responsible for countless abuses for which virtually no one has been punished. Targeted killings and LTTE suicide bombs were frequent. The authorities arbitrarily arrested thousands of men and women. Many suffered torture, including sexual assault, and often languished for years in prisons across the country, detained without trial under the draconian Prevention of Terrorism Act. Thousands more disappeared in what may have been enforced, and this happens even now. Recently, hundreds of Sri Lankans, mostly women, turned up to search for their missing or detained relatives at the places listed by the government that could provide information. Most of them were turned away, disappointed.

The government refuses to face up to the human consequences of its military operations in the war's final months. Sri Lankan forces committed indiscriminate shelling into populated areas, summary executions of prisoners, and other war crimes.

India has been encouraging Sri Lanka to address this disturbing legacy. Its role in Sri Lanka has been difficult, having intervened with an unsuccessful peacekeeping force in 1987-90, and enduring the LTTE's assassination of former Prime Minister Rajiv Gandhi 20 years ago. All these led India to back Sri Lanka's military efforts against the LTTE.

With the end of the war, New Delhi pushed for reconciliation among ethnic communities, the rebuilding of shattered lives, and a government investigation into allegations of war crimes. As a result of international pressure, Sri Lanka has grudgingly made some cosmetic gestures towards these ends, but justice and reconciliation still remain a pipe dream, particularly for families who suffered abuses from both sides.

Those that expected India, as an emerging global leader with a seat in both the UN Security Council and the Human Rights Council, to demand greater accountability in Sri Lanka, were disappointed when it provided development assistance for reconstruction efforts without insisting that the government take credible steps to address these concerns.

Colombo was taken aback when India chose to support a resolution at the Human Rights Council calling for Sri Lanka to act on the recommendations of its Lessons Learnt and Reconciliation Commission.

The Rajapaksa government responded by criticising political parties in Tamil Nadu and other opposition members who had called for support for the US-led resolution and even threatened India over its own domestic human rights record.

Sri Lanka would do better if it would understand why even its closest supporters are expressing disapproval. The Sri Lankan military, which has retained a large presence in the northern areas formerly held by the LTTE, continues its abusive behaviour towards ethnic Tamil civilians, as well as former combatants and their families. Disappearances are reported even now. Women, who approach soldiers seeking news of loved ones, who have vanished, or to protect those in custody, have been known to be coerced into providing sexual favours.

Local activists, who have been the target of government harassment, threats and worse, bravely carry out their work and report about the grim situation.

India has continued its efforts at encouraging reconciliation. A 12-member parliamentary delegation was recently in Sri Lanka and emphasised yet again the need to ensure that Tamils, after decades of war, can enjoy peace that provides "equality, dignity, justice and self-respect". However, the government has persisted in its suspicion and has been demonising the Tamil community.

For a golden future, every Sri Lankan must believe that there will be a fair society in which there is justice and accountability for all.

India retains a major influence in Sri Lanka. It should insist that the government takes steps to ensure justice for all Sri Lankans from all communities. Two years ago, a UN panel of experts called for an independent international mechanism to monitor the government's accountability process and investigate allegations of war crimes from all sides – and India should support this. For a golden future, every Sri Lankan must believe that there will be a fair society in which there is justice and accountability for all.

*Meenakshi Ganguly is director (South Asia), Human Rights Watch.*

# தமிழ் ஊடகவியலாளர்கள் மீது வீசப்படும் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள்

தமிழச்சமூகத்தில், ஜனநாயகம், கருத்துச் சுதந்திரம், வெளிப்படைத்தன்மையை பேணுதல் என்ற சொற்கள் புழக்கத்தில் இருந்தாலும், நடை முறையில் இவை இன்னமும் அந்நியப்பட்ட விடயங்களாகவே இருக்கின்றது. கருத்துகளை வெளிப்படையாக பிரசுரித்து வருவதனால் ஒரு பேப்பர் கூட பல சந்தர்ப்பங்களில் அவதூறுகளுக்கு உள்ளாகியிருக்கிறது. அவற்றை எமது வாசகர்களின் பலத்துடன் எதிர்கொண்டிருக்கிறோம் அநாமதேயங்களால் நடாத்தப்படும் இணையதளங்களில் பிரசுரிக்கப்டும் விடயங்கள் பற்றி நாம் அக்கறை கொள்வதில்லை. ஆனால் தமிழ் அலைந்துழல்வு சமூகத்தில் தன்னையும் ஒரு குறிப்பிடத்தக்க ஆளுமை எனக் கருதும் திரு. ஐ.தி. சம்பந்தன் அவர்களால் அனுப்பட்ட மின்னஞ்சல் ஒன்றை உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

ஐ.தி.சம்பந்தன் தாயகத்தில் தமிழ்த் தொழிலாளர் கூட்டணி எனும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தொழிற்சங்கத்தின் செயலாளராக இருந்தவர். இப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் லண்டன் கிளையின் உதவிச் செயலாளராக இருக்கிறார். ஒரு பேப்பர் இல் சில கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியில் அமைச்சராக இருந்த திரு. மகேஸ்வரனுக்கு செயலாளாரக இருந்தார் என்கிற மற்றொரு பக்கமும் அவருக்கு இருக்கிறது.

கடந்த ஒரு பேப்பர் இல் திரு. இதயச்சந்திரன் எழுதிய "இராஜதந்திர சம்பந்தன்" என்ற கட்டுரையின் எதிர்வினையாக தனது காழ்ப்பை கொட்டி தீர்க்க இந்த மின்னஞ்சலை அனுப்பியிருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், சில ஊடகவியலாளர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ள அவரது மின்னஞ்சலில் திரு. இதயச்சந்திரன்பற்றிகீழ்க்கண்டவாறுகுறிப்பிட்பட்டுள்ளது.

*"இவர் இன்று புலனாய்வுக் குழுக்களின் வலையில் சிக்குண்டு தகவல்களைக் கொடுக்கும் ஊடகவியலாளர் எனப்பலராலும் கருதப்படுகிறார். தேசியத் தலைவலர் பிரபாகரனுடன் நெருக்கமாகப் பழகி வந்த கே.பியை புலனாய்வுத் துறைகள் எவ்வாறு பயன்படுத்தி அழிக்க வழிவகுத்தார் என்பது எல்லோரும் அறிந்ததே.*

*இலண்டனில் உள்ள விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களுடனும் மற்றும் தமிழ் அமைப்புக்களுடனும் நெருக்கமாகப் பழகி நட்பை வளர்த்து வரும் ஊடகவியலாளர் ஒருவர் புலனாய்வுத் துறைக்குத் தேவைப்பட்டது. முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் பின் தமிழர்களையும் தமிழ் அமைப்புக்களையும் பிளவுபடுத்துவதற்கு இந்தப் புலனாய்வுப் பிரிவினருக்கு இதயச்சந்திரன் இரையாகிப் போனவர் என்பது இன்று தெரிய வந்துள்ளது. முள்ளிவாய்க்காலின் பின் தாயகத்தில் தேர்தலில்ப் போட்டியிட்ட தமிழத் தேசியக் கூட்டமைப்பை இரண்டாகப் பிளவுபடுத்த இலண்டனில் இருந்து செயற்பட்ட இதயச்சந்திரனின் புலனாய்வுப் பணி எல்லோரும் அறிந்ததே.*

*அத் தேர்தலில் திரு.சம்பந்தனை திருகோணமலையிலும் திரு. மாவை சேனாதிராஜா, திரு. பிரேமச்சந்திரன் ஆகிய இருவரை யாழ்ப்பாணத்திலும் தோற்கடிப்பதற்காக இதயச்சந்திரன் தீவிர பிரச்சாரம் செய்து தோல்வி கண்டவர். நாடு கடந்த தமிழீழ அரசை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தியானந்தமூத்தியுடன் இணைந்து இரண்டாகப் பிளவுபடுத்தியவரும் இதே இதயச்சந்திரனே. இன்று பலம் பெற்று வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைபைப்பிளவுபடுத்தும் பொறுப்பை இதயச்சந்திரன் ஏற்றிருப்பதாக அறியக்கிடக்கிறது. ஊடகவியலாளரின் மரபுக்கு அப்பாற்பட்டு அநாகரீகமாக எழுதும் ஒரு கேவலமான எழுத்தாளர்."*

எதுவித ஆதாரமுமில்லாமல் "எல்லோரும் அறிந்ததே" என பொதுப்படையாக எழுதியிருக்கும் ஐ.தி.சம்பந்தனுடன் விவாதிப்பதில் ஏதாவது அர்த்தம் இருப்பதாகத் தெரியவில்லை. அதே சமயம் அவரது எழுத்தினைப் படிக்கும் போது அவர் சீரான மனநலத்துடன் உள்ளாரா என்ற ஐயம் எழாமலில்லை. திரு. இதயச்சந்திரன் மீது தமிழத் தேசியக் கூட்டமைப்பு தொடர்பில் மோசமான குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் அவர் அவ்வமைப்பின் பிரித்தானியக் கிளையைச் சேர்ந்தவர் என்ற வகையில் இது தொடர்பாக அக்கட்சி விளக்கமளிக்க வேண்டும். ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்துள்ளதாகக அடிக்கடி ஞாபகப்படுத்தும் கூட்டமைப்பினர் இவ்விடயத்தில் விரைந்து செயற்படுவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

**ஊடகவியலாளர்களுக்கு தமது தார்மீக ஆதரவினை வழங்கவேண்டியது சமூகப்பொறுப்புடைய அனைவரினதும் கடமையாக அமைகிறது.**

இதே பாணியில் இன்னொரு ஊடகவியலாளரான திரு. தினேஸ்குமார் மீது ஒரு அநாமதேய இணையதளம் ஒன்று அவதூறான செய்தியை பரப்பியுள்ளது. குறித்த இணையதளம் அச்செய்தியினை அகற்றிவிட்டது என்பதனால் அவ்விபரங்களை இங்கு வெளியிடுவதனைத் தவிர்த்துள்ளோம். திரு. தினேஸ்குமார் இதுவரை பணியாற்றிவந்த ஊடகத்திலிருந்து அவர் வெளியேறியுள்ளமையினால் அச்சம்பவத்தை தொடர்புபடுத்தி அவர் மீதான தாக்குதல்கள் நடாத்தப்படுவதனை அனுமதிக்க முடியாது.இவ்வாறான செயற்பாடுகள் ஊடக சுதந்திரத்திற்கும், சனநாயகத்திறக்கும் விடப்படுகின்ற அச்சுறுத்தல்களாகவே எடுத்துக் கொள்ள வேண்டியுள்து. இவ்விடயத்தில் ஊடகவியலாளர்களுக்கு தமது தார்மீக ஆதரவினை வழங்கவேண்டியது சமூகப் பொறுப்புடைய அனைவரினதும் கடமையாக அமைகிறது.

ஒரு பேப்பர்

# Cuba Hosted Sri Lanka Pres/War Criminal



By: Ron Ridenour

"Cuban President Receives Counterpart from Sri Lanka" read the Prensa Latina headline of June 17. The agency reported that the four-day official visit by President Mahinda Rajapaksa was at the invitation of President Raul Castro.

> I am certain that if Che Guevara were around he would rant and rave, and that is what I ask all solidarity supporters of Cuba to do.

Does this mean that the "honored guest"—widely known to be one of the world's most brutal government leaders, responsible for tens of thousands of deaths of the Tamil people, who is also selling much of his country to foreign multi-nationals corporations, and whose main export partner is the United States—is made of the same stuff as his "counterpart"?

"Cuba is acting immorally and in contradiction to its long-time solidarity with the oppressed and exploited peoples of the world," I wrote in "Cuba outvoted at "UN Human Rights Council over Sri Lanka-Tamils".

There is ample evidence that Sri Lankan governments have long been discriminating against, oppressing and murdering Tamils. Besides physical violence, the government has passed laws making Tamils second-class citizens.

They are denied equal access to education and employment; their religions and language are not on an equal footing with Sinhalese and their aggressiv version of Buddhism. My recent book, "Tamil Nation in Sri Lanka", outlines this sordid history.

So, why is the Cuban government supporting this and the previous Sinhalese chauvinist governments? Havana Times offers some answers in "Will Sri Lanka Tamils get justice from the UN?"

The foreign politics of the Cuban government is based, in large part and understandably so, on its rancor with the United States for its permanent intrusion in Cuban affairs as well as that of many other peoples and governments who do not buckle under its domination.

Recently, the US has leveled complaints that the Sri Lanka government overstepped its right to destroy the guerrilla organization Liberation Tigers for Tamil Eelam (LTTE) by bombing civilians.

Most of the 47 governments on the Human Rights Council, including six Latin American governments, agreed.

This is not to be construed as an offering of applause to the world's greatest terrorist state, for the US makes this "human rights" gesture for its own hypocritical geo-political reasons, which the writing above explains.

Since the US-UK axis makes an insignificant complaint about this, Cuba's government, in a knee jerk fashion, is all the more enthusiastic about being chummy with a government that systematically eliminates Tamils in a genocidal pattern.

By so reacting, Cuba has turned its back on its own solidarity principles of standing beside all oppressed and exploited peoples.

As a long-time supporter of the Cuban revolution—since my first demonstration, which took place in April 1961 in front of a US federal building as the Yankees invaded Cuba at the Bay of Pigs, and through to working for Prensa Latina and Editorial José Martí in the 1980s-90s, and with hundreds of articles and six books on Cuba to my credit—I am sickened by the Cuban government's hypocritical support of Rajapaksa and his family regime and, consequently, the immoral acceptance of the genocide against a minority people.

> "Cuba is acting immorally and in contradiction to its long-time solidarity with the oppressed and exploited peoples of the world," I wrote in "Cuba outvoted at "UN Human Rights Council over Sri Lanka-Tamils".

I am certain that if Che Guevara were around he would rant and rave, and that is what I ask all solidarity supporters of Cuba to do.

*Courtesy: Havana Times*

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon.................. 020 8150 9950

Meera Arnold & Co
Southgate................ 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: ORU PAPER
Bank: HSBC
A/C: 61429035
S/C: 40-33-09

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பிரான்ஸ்
சிறி

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சுகன்யா

விளம்பரம்
சோபனா - அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூரன் - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா- சாரங்கன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
சோபனா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

*'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# என்னங்கடா நடக்குது இஞ்சை..?

அண்மையில் நாடுகடந்த தமிழீழ அரசின் வெளி விவகார மற்றும் அரசியல் துறை மாண்புமிகு அமைச்சர், திரு. தயாபரன் தணிகாசலம் அவர்களிற்கு அதே அரசின் உறுப்பினர் திறந்த மடல் புகழ் ஜெய்சங்கர் முருகய்யா என்பவர் மாண்பு மிகு அமைச்சர் தயாபரன்மீது சில குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஒரு திறந்..........த மடல் ஒன்றினை இணையத்தளம் ஒன்றினூடாக எழுதி பரபரப்பினை ஏற்படுத்தியிருந்தார். அது சம்பந்தமாக ***ஒரு பேப்பர்*** சார்பாக மேலும் சில விபரங்களை கேட்டறிந்து பேப்பரில்வெளியிடலாமென நினைத்து ஜெய்சங்கரிற்கு அவரது வீட்டிற்கு தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தி, வணக்கம் ஐயா நான் சாத்திரி கதைக்கிறன் கிட்டடியிலை நீங்கள் தயாபரனிற்கு எழுதிய கடிதம் சம்பந்தமாக ***ஒரு பேப்பர்*** சார்பாக உங்களிட்டை சில விடயங்கள் கேட்டு அதை ஒரு பேப்பர் மூலம் சனங்களுக்கு தெரியப்படுத்த விரும்புறன் எண்டதும் தான் மனுசன் பதறியவராய் சாத்திரியா? ஒரு பேப்பரா? எப்பிடி உங்களுக்கு என்ரை வீட்டு நம்பர் கிடைச்சு? எண்டார். ஐயா நம்பர் எடுக்கிறதெல்லாம் சின்ன பிரச்சனை உங்கடை திறந்த மடல் பற்றி அறிந்து கொள்ள விரும்பிறம் எண்டதும். அது பற்றி எதுவும் சொல்ல விரும்பேல்லை தயவு செய்து இனி இந்த நம்பருக்கு போன் அடிக்காதையுங்கோ என்றவர் அடிச்சு வைச்சிட்டார்.

என்னடா இது திறந்த மடல் எல்லாம் எழுதிறார் போனடிச்சால்இப்பிடிபூட்டிக்கொண்டுஇருக்கிறாரே எண்டு நினைச்சு போட்டு அடுத்ததாய் நம்மடை வெளி விவகாரஅமைச்சர் தயாபரனிற்கு போனடிச்சன். அவரிட்டை ஐயா அமைச்சரே வணக்கம் உங்களிட்டை ***ஒரு பேப்பர்*** சார்பாக சில கேள்விகள் கேட்கலாமா?எண்டன் எதைப்பற்றி என்றார். ஜெய்சங்கர்எழுதியகதம்தொடர்பாகஎண்டால் nocomments எண்டவர் வேறை எதைப்பற்றியெண்டாலும் கேளுங்கோ இப்ப எனக்கு நேரமில்லை-யெண்டார்.

இப்ப அவசரமில்லை நான் மின்னஞ்சலிலை கேள்விகளை போட்டு விடுறன் நீங்கள் ஆற அமர இருந்து படிச்சு அதற்கான பதில்களை எழுதுங்கோ என்று விட்டு மனிசனை எதுக்கு கரைச்சல் படுத்துவான் எண்டு நினைச்சு....

◆ லண்டனில் மகிந்தவிற்கு எதிராக மக்கள் தன்னெழுச்சியாக நடாத்திய போராட்டங்கள் பற்றிய உங்களது கருத்து?

◆ போராட்டங்கள் நடைபெறுவது பற்றிய அறிவித்தல்களை வெளியிட சில தமிழ் ஊடகங்கள் தயக்கம் காட்டியதாக அறிகிறோம்.. (ஜி.ரி.வி உட்பட) அதே தொலைக்காட்சியில் நீங்களும் ஆர்ப்பாட்டங்கள் பற்றிய நிகழ்வுகளை மாற்றி மாற்றி தகவல்களை வழங்கியது ஏன்?

◆ நாடுகடந்த அரசாங்கத்தில் அமைச்சராக இருக்கும் நீங்கள் ஒரு ஊடகத்தில் பொறுப்பான பதவியிலிருக்கிறீர்கள். இது ஊடக சுதந்திரத்தை பாதிக்கும் நடவடிக்கை என்பது பலரது கருத்து, இது பற்றி ...

◆ நாடுகடந்த அரசாங்கத்தில் சமீபத்தில் ஏற்பட்ட குழப்பங்கள், சபாநாயகர் பொன் பாலராஜன் பதவி துறக்க முற்பட்டமை. போன்றவற்றின் பின்னணியில் நீங்கள் இருப்பதாகவும், ஒரு குழுநிலை வாதியாக உங்களை சிலர் கருதுவதுபற்றியும் என்ன குறிப்பிட விரும்புகிறீர்கள்?

◆ நாடு கடந்த அரசாங்கம் கனடாவில் உருத்திரா மகா யாகம் என்கிற பெயரில் யாகம் செய்தது பற்றி ..

◆ நாடு கடந்த அரசு தொடங்கப்பட்டு மூன்று ஆண்டுகளாகியும் வெறும் அறிக்கைகள் மட்டுமே வெளியிட்டுக்கொண்டிருக்கின்றது உருப்படியாக எவ்வித நடவடிக்கைகள் எதையும் ஆக்கபூர்வமாக செய்யவில்லையென்கிற ஒரு ஆதங்கம்? அனைவரிடமும் உள்ளது எந்த செயற்பாடுகளும் இல்லாது முடங்கிப் போயிருப்பதற்கு காரணம் என்ன?

எண்டு குத்து மதிப்பாய் சில கேள்வியளை அனுப்பிப் போட்டு இரண்டு நாளாய் பதில் ஏதாவது வந்திருக்கா எண்டு மின்னஞ்சல் பெட்டியை திறந்து பாத்தபடி இருந்தன் ஒண்டையும் காணேல்லை அதுக்கு பிறகு அவருக்கு போனடிச்சு ஐயா உங்கடை பதில் ஒண்டையும் காணேல்லை உங்களுக்கு தட்டச்சு செய்ய கயிற்ரமாயிருந்தால் போனிலை பதிலை சொல்லுங்கோ நான் தட்டுறன் எண்டதும். அவர் சொன்னார் உங்கடை கேள்வியள் இரண்டு விதமா நான் பிரிச்சு பாக்கிறன் ஒண்டு நான் வேலை செய்யிற G.T.V பற்றியது. அதற்கு நான் நினைச்சபடி பதில் சொல்லமுடியாது அதற்கு பதில் தாறதுக்கு G.T.V நிருவாகத்திடம் அனுமதி கேட்டிருக்கிறன் அவையளின்ரை அனுமதி கிடைச்சதும் பதில் தரலாமெண்டார்.. நானும் விடேல்லை அப்ப அடுத்த கேள்வியள்.எண்டதும் மற்றது நாடு கடந்த அரசு பற்றிய கேள்விகளிற்கு எங்கடை அரசாங்கத்திட்டை அனுமதி கேட்டிருக்கிறன் அவர்கள் அனுமதி தந்ததும் அதற்கான பதிலை தரலாமெண்டார். நல்லவேளை நான் அவரிட்டை உங்கடை பெயர்தானே தயாபரன் எண்டு கேக்கேல்லை கேட்டிருந்தால் அந்த பெயரை எனது தந்தையார் தணிகாசலம்தான் எனக்கு வைத்தார் எனவே அவரிடம் அனுமதி கேட்டிருக்கிறேன் அவரின் அனுமதி கடைத்தும் பதில் தருகிறேன் எண்டு சொல்லியிருப்பாரோ?? என்னமோ. அரசியல் வாதியானதுமே எப்பிடியெல்லாம் யோசிக்கிறாங்கள் எண்டுதான் தெரியேல்லை..

ஆனால் ***ஒரு பேப்பர்*** சார்பாக கேட்கப்பட்ட கேள்விகளிற்கு பதில் வராததால் வெறும் கேள்விகளை மட்டுமே பிரசுரிக்கிறோம். ஒருத்தரிட்டை பேட்டியெடுக்கப்போய் வெறும் கேள்வியனை மட்டுமே பிரசுரிக்கும் கேணைப்பயலுகள் எண்டு நீங்கள் ***ஒரு பேப்பர்*** காரரை நினைக்கலாம் என்ன செய்ய? ஆனால் மாண்பு மிகு அமைச்சர் தயாபரன் அவர்கள் தனக்கான அனுமதி கிடைத்ததும் இவற்றிக்கான பதில்களை ***ஒரு பேப்பர்*** மின்னஞ்சலிற்கு அல்லது தட்டச்சு செய்ய முடியாவிட்டால் கையால் எழுதி கடித உறையிலிட்டு மறக்காமல் முத்திரை ஒட்டி ஒரு பேப்பர் அலுவலகத்திற்கு அனுப்பலாம். ரெண்டுக்கும் பஞ்சியெண்டால் ஒரு பேப்பர் அலுவலகத்திற்கு ஒரு கலோ... நாங்களே தட்டச்சு செய்து பதில்களை போட்டு விடுறம்.

இதை எழுதிக் கொண்டிருக்கும்போதே நாடு கடந்த தமிழீழ அரசின் வெளிவிவகார கௌரவ அமைச்சர் தயாபரன் மீதான நம்பிக்கை இல்லாப் பிரேரணை. எண்டு ஒரு மின்னஞ்சல் வேறை வந்து கிடக்கிது இனி அவங்களை தேடி போனடிச்சு பாப்பம்.

நன்றி வணக்கம்....!!

*சாத்திரி - ஒரு பேப்பர்*

# வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

## ஆறாத மனக்காயங்களை ஆற வைப்பது எப்படி?

"ஆறு மனமே ஆறு" என்று எத்தனை தடவை சொல்லிக் கொண்டாலும் ஆறாத விஷயங்கள் நம் உள்ளத்தில் ஒருசில இருக்கவே செய்கின்றன. எதை மறக்க நினைக்கிறோமோ அதுவே திரும்பத் திரும்ப ஒலி-ஒளிப்பதிவுகளாக நம் உள்ளத்தில் திரும்பத் திரும்ப வந்து நம்மைப் பாடாகப் படுத்துவதுண்டு. அப்படி நம் மனதில் ஆறாத காயமாகி, நாம் மறக்க நினைக்கும் விஷயங்களில் முதலிடம் பெற்று நிற்பது நமக்கு இழைக்கப்படும் அநீதிகள் தான். ஒரு முறை ஹைதராபாத்தில் நடைபெற்ற வாழ்வியல் பயிற்சி முகாமில் பங்கு பெற்வர்களிடம் ஒரு கேள்ளி கேட்கப்பட்டது ? உங்கள் மனதில் நீண்ட நாட்களாக ஆறாமல் இருக்கும் காயம் என்ன?

பலரும் தங்கள் மனதில் இருந்த ஆறாத காயங்களைப் பற்றி சொன்னார்கள். கிட்டத்தட்ட எல்லாமே அடுத்தவர்கள் இழைத்த அநியாயங்களாகத் தான் இருந்தன. ஒருவர் தன் அரசாங்க வேலையில் இருந்து ராஜினாமா செய்து தன் சேமிப்பையும், மனைவி குழந்தைகள் நகைகளை விற்று வந்த தொகையையும் முதலாகப் போட்டு நண்பருடன் செய்த வியாபாரத்தைப் பற்றி சொன்னார். நண்பரை நம்பி வியாபாரத்தின் எல்லா உரிமைகளையும் நண்பர் பெயரிலேயே வைத்திருந்ததால் வெற்றிகரமாக நடந்து வந்த வியாபாரத்தில் ஒரு கட்டத்தில் உனக்கு இனி சம்பளம் மட்டும் தான் என்று சொல்லி நண்பர் ஏமாற்றி வெளியேற்றிய அநியாயத்தைச் சொல்லி அழுதார். இன்னொரு பெண்மணி தன் புகுந்த வீட்டில் தனக்கிழைத்த நியாயமற்ற கொடுமைகளைச் சொல்லி மனம் குமுறினார். இப்படி பலரும் பல காயங்களைச் சொல்ல அதைக் கேட்டுக் கொண்டு அடுத்தபடியாக அவர்களிடம் "உங்களுக்குப் பிடிக்காத அடிக்கும் சினிமா ஒன்றின் பெயர் சொல்லுங்களேன்" என்றார். ஒவ் வொருவரும் ஒவ்வொரு சினிமாவின் பெயரைச் சொன்னார்கள். "சரி. அந்த சினிமாவை தேடிப் பிடித்து வாங்கி, வருகிற ஞாயிற்றுக் கிழமை காலையிலிருந்து இரவு வரை திரும்பத் திரும்ப போட்டுப் பாருங்கள்? என்றார்.

ஒரு முறை பார்த்தே வாழ்க்கை வெறுத்தவர்களுக்கு அதை விடப் பெரிய கொடுமை என்ன இருக்க முடியும்? அவர்கள் "ஐயையோ...முடியவே முடியாது. முடிகிற காரியமாக வேறு எதையாவது சொல்லுங்கள்" என்றார்கள்.

"நண்பன் உங்களுக்குச் செய்த துரோகமும், மாமியார் செய்த கொடுமைகளும் கூட உங்களுக்குப் பிடிக்காத காட்சிகள் தான். பிறகு ஏன் அதை உங்கள் மனத்திரையில் மீண்டும் மீண்டும் ஓட்டிப் பார்க்கிறீர்கள்? பிடிக்காத சினிமாவைப் பார்க்க மறுக்கும் நீங்கள், விரும்பாத அந்த உண்மைக் காட்சிகளை ஏன் உங்கள் மனத்திரையில் மீண்டும் மீண்டும் ஓட விட்டுப் பார்க்கிறீர்கள். அதை மறந்து விடுங்கள். காயம் தானாகவே காய்ந்து உதிர்ந்து விடும்" என்றார் அந்த அறிஞர்.

இது அறிவுபூர்வமாக எல்லோருக்கும் புரியக் கூடிய நல்ல விஷயம். ஆனால் மனம் அறிவின் படியா நடக்கிறது? எதை நினைக்கக் கூடாது என்று கட்டளை இடுகிறோமோ அதைப் பற்றியே அல்லவா மனம் பிடிவாதமாக நினைக்கிறது. இந்த காயங்கள் ஒவ்வொரு முறை நினைக்கும் போது புதிய காயம் போலல்லவா வலிக்கிறது. இந்த காயங்களை ஆற வைப்பதெப்படி? மறப்பதெப்படி?

இது சாத்தியமாக வேண்டுமானால் இரண்டு மா பெரும் உண்மைகளை நினைவில் இருத்த வேண்டும்.

ஒன்று எந்த அநியாயமும் தண்டிக்கப் படாமல் போவதில்லை. சில தண்டனைகள் உடனடியாகக் கிடைக்காமல் போகலாம். ஆனால் கர்மபலன் என்பது காலம் கழிந்தாவது வட்டியும் முதலுமாகக் கிடைக்கக் கூடியதே. அது சில சமயங்களில் நம் கண்ணிற்குப் படாமல் இருக்கலாம், கருத்திற்கு எட்டாமல் இருக்கலாம். ஆனால் வினை விதைத்தவன் வினை அறுக்காமல் போனதாக சரித்திரம் இல்லை. ஒரு அழகான பழமொழி உண்டு. "இறைவனின் பிரம்படியில் சத்தம் கேட்பதில்லை". இது நூற்றுக்கு நூறு உண்மை. வெளியே தெரியாமல் தனக்குள்ளேயே புழுங்கும்படியான எத்தனையோ வேதனைகள் உண்டு. எனவே வெளித் தோற்றத்தை வைத்து எதையும் எடை போடுவது சரியானதாக இருக்காது.

அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும் என்ற பழமொழிக்கு ஏற்ப தவறிழைத்தவர் தண்டனை பெறாமல் தப்புவதில்லை என்றறிந்து தெளியும் போது காயத்தின் தீவிரம் குறையும். இரண்டாவது உண்மை நமக்கு ஏற்படும் கசப்பான அனுபவங்கள் எதுவுமே காரணம் இல்லாமல் வருவதில்லை.

அவை நாம் நம் முந்தைய செயல்களால் சம்பாதித்தவையாக இருக்கலாம், நம்முடைய குறைபாடுகளால் நாம் வரவழைத்தவையாக இருக்கலாம், அல்லது நாம் புடம் போட்ட தங்கமாக மாறத் தேவையான அனுபவங்களாக இருக்கலாம். இதை ஒத்துக் கொள்ள நமக்கு சிறிது கஷ்டமாக இருக்கலாம். ஆனால் இது மாபெரும் உண்மை.

இதற்கு நாமே காரணம், அல்லது நம் பக்குவத்தினை அதிகப்படுத்த கிடைத்த பாடம் இது என்று உணரும் போது ஒரு அனுபவத்தின் கசப்புத் தன்மை குறைகிறது. தெளிதலும், மறந்து முன்னேறுவதும் சாத்தியமாகிறது.

இந்த உண்மைகளை மனதில் இருத்திக் கொண்டு சுவாமி சுகபோதானந்தா சொன்னதையும் சிந்தித்துப் பாருங்கள். நமது ஆறாத காயங்களின் வலியும், நமது பொருமல்களும் நம்மைக் காயப்படுத்தியவர்களை எந்த விதத்திலும் பாதித்து விடுவதில்லை.

மாறாக நம் மகிழ்ச்சியைத் தான் குலைத்து விடுகிறது என்பதையும் மறந்து விடாதீர்கள். உண்மையாகவே இதெல்லாம் புரியும் போது அது வரை ஆறாத காயங்களும் ஆற ஆரம்பிக்கும்.

*- என்.கணேசன்*

# அதிகாரங்களால் திணிக்கப்படவிருக்கும்
# ‘தென்னாபிரிக்க பிரகடனம்’



**கோபி**
*ஒரு பேப்பர்*

தமிழ் அமைப்புகள், தாயகத்தில் செயற்படுப வையும், அலைந்துழல்வு சமூகத்தில் செயற்படுப வையும், ஈழத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் விடயத்தில் ஒரு பொதுவான இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்பது தமிழ் மக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பாகவுள்ளது. இவ்வாறான இணக்கப்பாட்டில் உடன்பாடு காணப்படும் விடயங்கள் தமிழ் மக்களுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும் என்பது இம்முயற்சிகளுக்கான முன் நிபந்தனையாக அமையும் என்பதில் மாறுபட்ட கருத்துகள் இருக்க முடியாது. இதன் அடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், உலகத்தமிழர் பேரவை ஆகியவற்றுக்கிடையிலேயே ஏற்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படும் இணக்கப்பாடு பற்றி அணுக வேண்டியுள்ளது.

அண்மைக் காலமாக தென் ஆபிரிக்காவில், மேற்குறிப்பிட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் சந்தித்து, பொறியினில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் மூலம் அறிய முடிகிறது. நாடுகடந்த அரசாங்கத்திற்கும் உலகத்தமிழர் பேரவைக்கும் இடையிலான மற்றொரு பேச்சுவார்த்தை அண்மையில் சான் பிரான்சிஸ் கோவில் நடைபெற்றதாக இவ்விரு அமைப்புகளும்வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தென்னாபிரிக்க அரசாங்கத்தின் அனுசரணையில் இப்பேச்சுவார்த்தைகள் நடைபெற்றமையால், இவ்வமைப்புகள் இணைந்து வெளியிடவிருக்கும் தீர்மானத்திற்கு ‘தென்னாபிரிக்க பிரகடனம்’ எனத் தலைப்பிட்டுள்ளதாகவும் சில உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் அரசியல் வட்டாரங்களில் ‘தென்னாபிரிக்க பிரகடனம்’ பற்றிய பேச்சடிபட்டாலும், இப்பிரகடனத்தில் சேர்க்கப்பட்டுள்ள விடயங்கள் பற்றி அறிந்து கொள்ள முடியாதுள்ளது. இவ்விபரங்கள் இரகசியமாக வைக்கப்பட்டுள்ளமை, பிரகடனம் பற்றிய ஐயப்பாடுகளை தோற்றுவித்துள்ளது. ‘கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்’ எனக் கூறுவதுபோல், இந்தப் பிரகடனத்தில் என்ன அடங்கியுள்ளது என்பதனை இதுபற்றி கருத்துக்கூறும் தகமையுடையவர்கள், குறிப்பாக இந்த அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் வெளியிட மறுத்துவருகிறார்கள். அதே சமயம் இப்பிரகடனம் பற்றி வெளிப்படையாகக் கருத்துக் கூறுபவர்கள் ஆதாரப்படுத்துக் கூடிய வகையிலான தகவல்களை கொண்டிருக்கவில்லை.

ஒன்றுக் கொன்று போட்டியமைப்புகள் போல் இயங்கிவந்த நாடு கடந்த அரசாங்கமும், உலகத் தமிழர் பேரவையும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொலை நோக்கில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்திருப்பார்களேயானால், அது நிச்சயம் வரவேற்கத்தக்க முடிவாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால் நாடு கடந்து செயற்படும் இவ்விரு அமைப்புகளும் கொள்கைரீதியாக, சிறிலங்கா அரசாங்கத்தின் ஆட்சியதிகாரத்துக்கு உட்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஒரு பிரகடனத்தை வெளியிடக் கூடிய நிலை இல்லை என்பதால் முதலிரு அமைப்புகளும் எத்தகைய விட்டுக் கொடுப்புகளுக்கு தயாராக இருக்கிறார்கள் என்பதே முக்கிய வினாவாக அமைகிறது.

சிறிலங்கா அரசியலமைப்பின் ஆறாம் திருத்தத்திற்கு உட்பட்டு செயற்படவேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழீழத் தாயகமே தமது இறுதி இலட்சியமாக கொண்டதான யாப்பினையுடைய நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும் ஒரு பொதுவான அரசியல் பிரகடனத்தில் இணைவது சாத்தியப்படாது. சற்றேறக்குறைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெளிநாட்டுக் கிளை போல் கருத்து வெளியிட்டு வரும் உலகத் தமிழர் பேரவையானது இவ்வாறான பிரகடனமொன்றில் இணங்கிப்போது சாத்தியமானாலும், அது பிரதிநித்துவப்படுத்துவதாகக் குறிப்பிடும் மக்களிடம் இதற்கான ஆதரவினை எவ்வாறு பெற்றுக் கொள்ளப் போகிறது என்பதும் கேள்விக்குறியாகவே அமைந்துள்ளது.

இவ்வமைப்புகள் தன்முனைப்பாக ஒரு இணக்கப்பாட்டுக்கு வரவில்லை என்பதும் பின்னணியில் இவர்களுக்கு வழங்கப்படும் அழுத்தங்களை எதிர் கொள்ள முடியாத நிலையிலேயே இத்தகைய முடிவுக்கு வந்துள்ளதாகவும் தெரியவருகிறது. இங்கு பின்னணியில் நிற்பவர்கள் யார் என்பது தெளிவாகியுள்ளதால், இப்பிரகடனத்தில், என்ன தீர்மானங்கள் அடங்கியிருக்க வேண்டும் என்பது வெளித் தரப்புகளாலேயே நிர்ணயிக்கப்படும் என்பதனை உறுதியாகக் கூற முடியும். வெளித்தரப்புகளால் தீர்மானிக்கப்பட்ட விடயங்களை தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறிக்கொள்ளும் இவ்வமைப்புகள் மக்களின் சார்பில் பிரகடனப் படுத்தவுள்ள மோசடி ஒன்று நடந்தேறவுள்ளது. அதாவது தாம் பிரதிநித்துவப்படுத்தும் மக்கள் தீர்மானிப்பதை வெளியுலகத்திற்கு எடுத்து செல்ல வேண்டிய அமைப்புகள், வெளியிலிருந்து திணிக்கப்பட்டத்தை மக்களின் விருப்பமாகக் காட்ட விருக்கின்றன.

இங்கு வெளிச்சக்திகள் எனக் குறிப்பிடப்படுபவை, வேறு எவருமில்லை இணைத் தலைமை நாடுகள் என்ற தலைப்பில் சமாதான உடன்படிக்கையை ஆதரித்து நின்று, யுத்தத்திற்கு கொண்டு சென்று தமிழ் மக்களை சங்காரம் செய்த அதே நாடுகள்தான். இன்னும் குறிப்பாகச் சொன்னால், அமெரிக்கா, இந்தியா மற்றும் மேற்கு நாடுகள். இச்சக்திகளின் மையங்களாக இருக்கும் அமெரிக்க இராஜங்கத்திணைக்களத்திடமும், டெல்லி சவுத் புளொக்கிடமும் தான் இந்த தமிழ் அமைப்புகள் அடிக்கடி காவடி எடுக்கின்றன. இவர்களின் முகவர்களான ரொபர்ட் ஒ பிளேக்கும், எரிக் சூல்கய்ம் உம், இந்திய நாச்சியப்பனும் கோர்பரேட் சாமியார்கள் போல இவர்களுக்குத் தோன்றுகிறார்கள். இடையில் காலஞ் சென்ற தென்னாபிரிக்க அமைச்சர் றோய் படையாச்சியும் இந்த நிலையில் வைத்து தரிசிக்கப்பட்டார். இந்தியாவுக்கும், அமெரிக்காவுக்கும் இணக்கமான தென்னாபிரிக்காவிலிருந்து, இந்தப்பிரகடனம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதனையும் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது.

வெளிச்சக்திகளினை புறந்தள்ளிவிட்டு அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற அடிப்படையில் இச்சகத்திகளுக்கு எதிராக செயற்பட வேண்டும் என்று இக்கட்டுரை கருத்துரைக்கவில்லை. மாறாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் விடயத்தில் ஒரு தெளிவான நிலைப்பாட்டினை இவ்வமைப்புகள் வெளிப்படவிருக்கும் பிரகடனம் கொண்டிருக்க வேண்டும் என்பதனையே வலியுறுத்துகிறது.

கிடைக்கப்பட்ட தகவல்களின்படி, பதின் மூன்றாம் திருத்தச் சட்டமூலத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளை ஏற்றுக்கொண்டு அதிலிருந்து படிப்படியாக முன்னேறுதல் என்ற அணுகுமுறையை கடைப்பிடிப்பதற்கு இப் பிரகடனம் இணங்கும் எனத் தெரியவருகிறது. மற்றய அம்சங்களாக இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்ததை ஏற்படுத்துதல், போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக சர்வதேச ஆதரவுடனான ஒரு அரசு-சாரா தொண்டு நிறுவனத்தை உருவாக்குதல் என்பன அமையும் எனவும் மேற்படி தகவல்கள் தெரிவிக்கின்றன.



மாகாண சபைகளினை (பிரிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு சபைகள்) ஏற்றுக் கொண்டு முன்னேறுதல் என்ற அணுகுமுறையை ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டுவிட்டது. ஐ.நா. மனிதவுரிமைச் சபையில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை வரவேற்றதன் மூலம் உலகத் தமிழர் பேரவையும் அதனை மறைமுகமாக ஏற்றுக் கொண்டுள்ளது. இங்கு சிக்கலுக்கு உள்ளாகப் போகிறவர்கள் வரிக்கு வரிக்கு தமிழீழம் என உச்சரிக்கும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினரே. மற்றய இரு அமைப்புகளுடனும் ஒப்பிடும் போது, தனித்து ஒரிருவர் முடிவெடுக்கும் நிலை நாடுகடந்த அரசாங்கத்தில் இல்லை என்பது வெளிச்சக்திகளிலிருந்து தன்னை காத்துக் கொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. ஆனால் அவ் வாய்ப்பினை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளவார்களா என்பதனை உறுதிபடக் கூறமுடியாதுள்ளது.

தாம் பிரதிநித்துவப்படுத்தும் மக்கள் தீர்மானிப்பதை வெளியுலகத்திற்கு எடுத்து செல்ல வேண்டிய அமைப்புகள், வெளியிலிருந்து திணிக் கப்பட்டத்தை மக்களின் விருப்பமாகக் காட்ட விருக்கின்றன.

இவ்விடத்தில் உலகத்தமிழர் பேரவை பற்றிய சில தகவல்களையும் வெளியிட வேண்டியுள்ளது. பதினான்கு நாடுகளில் உள்ள அமைப்புகளின் கூட்டமைப்பாக தன்னை வெளிப்படுத்தும் இவ்வமைப்பில் தற்போது நெதர்லாந்து, சுவீடன், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, மலேசியா, நோர்வே ஆகிய நாடுகளைச் சேர்நத ஆறு அமைப்புகளே உள்ளன. பிரித்தானியா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, சுவிற்சலாந்து உட்பட ஏனைய நாடுகளில் உள்ள அமைப்புகள் இந்தக் கூட்டில் தற்போது இல்லை. பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் உலகத் தமிழர் பேரவையினர் பிரித்தானிய தமிழர் பேரவையுடன் உத்தியோகபூர்வமான சந்திப்புகளை நடாத்தி, பதினெட்டு மாதங்களுக்கு மேலாகிறது என்ற தகவலை பிரித்தானிய தமிழர்பேரவையின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ஒருவர் இக் கட்டுரையாளரிடம் உறுதிப்படுத்தினார்.

தாயகத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பாகட்டும், புலம் பெயர் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடுகடந்த அரசாங்கமாகட்டும் அல்லது மக்களமைப்புகளின் கூட்டமைப்பாக தன்னைக் காட்டிக்கொள்கிற உலகத் தமிழர் பேரவையாகட்டும், மக்களின் அபிப்பிராயங்களை கருத்தில் கொள்ளாமல், காலனித்துவ மனப்பாங்குடன் அவர்களது எஜமானர்கள் வற்புறுத்துவதை மக்களின் சார்பாக தீர்மானிக்க முற்படுவதனை உலகத் தமிழ்மக்கள ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. ஏனெனில் இந்தப் பொறியினில் மாட்டிக்கொண்டால், தமிழ் மக்களின் அரசியல் போராட்டம் மீளமுடியாத தாழ்வு நிலைக்கு சென்றுவிடும் பேரபாயம் உள்ளமையை அவர்கள் நன்கு அறிந்து வைத்திருக்கிறார்கள்.

ஒரு பேப்பர்
கிடைக்குமிடங்கள்

**New Malden**
Ayngaran ............... 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan ............... 020 8605 0434
Murugan Kovil ....... 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

**Tooting**
Yhaal House .......... 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Amman Kovil ......... 020 8795 4258
Niru Con.Store ........ 020 8672 3200
Ayngaran ............... 020 8540 1500
Suvai Aruvi............. 020 8543 6266
Adchaya ............. 020 8540 8192

**Croydon**
Best Foods............. 020 8684 6269
Haran Bros............. 020 8686 2552
Chennai dosa ......... 020 8665 9192
Eelam Video........... 020 8664 8351
Spice Land............. 020 8667 1700

**Lewisham**
Chandra ................. 020 8333 8680
Eelam Shop ........... 020 8690 6545
Katpagam ............. 020 8694 8810
AJ Video ................ 020 8691 8888
Sivan Kovil ............ 020 8318 9844
KRS ....................... 020 8297 9432

**Eastham**
Seelans.................. 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food ............. 020 8552 9578
Akilan Enterprise .... 020 8548 0033

**Ilford**
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan .................. 020 8514 1744
Angels ................... 020 8553 0490
Sri Supermarket .....

**Edmonton**
New Kannan Stores 020 8884 4979
Sayas..................... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

**Walthamstow**
Vinayagar Kovil....... 020 8527 3819
Kumarans .............. 020 7609 1912
Prabas .................. 020 8509 3322

**Harrow**
Tsk food & Wine ..... 020 7622 4258
Eelavan ................ 020 8863 6160
Prabhas ................ 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods.............. 020 8423 9933
Sambal Express...... 020 8799 7171

**Wembley**
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods.............. 020 8900 0100
Vahizan Disc.......... 020 8795 0648

**Ealing**
Amman kovil........... 020 8810 0835

**Greenford**
Ambiha .................. 020 8813 0967

**Coventry**
Eellakanthan Temple...02476663554

**South hall**
Thamilini C & C....... 020 8606 9900
Duvaraka C & C ..... 020 8813 9126
Palm Palace .......... 020 8813 9663
Spicy Palace restaurant 020 8574 4087
Luxmys C & C......... 020 8571 4599
Tamilan C & C......... 020 8561 8174
Lady Margret.......... 020 8571 4434


BULLDOG™
Energy Drink
with Taurine
THE QUEEN'S AWARDS FOR ENTERPRISE: INTERNATIONAL TRADE 2009
THE QUEEN'S AWARDS FOR ENTERPRISE: INTERNATIONAL TRADE 2010
THE QUEEN'S AWARDS FOR ENTERPRISE: INTERNATIONAL TRADE 2011
SHEER ENERGY
35p
Power to topple any Bull!
BULLDOG SHEER ENERGY
ENERGY DRINK WITH TAURINE
Regular
Sugar Free
Sun Mark Limited
World Class Products
ROBUST UNCOMPROMISING ENERGY
Gluco-Max Max Energy
PURE HEAVEN OUT OF THIS WORLD
ROYALTY Taste of Distinction
BULLET ENERGY DRINK
Golden Country Natures Freshness
BULLDOG SHEER ENERGY
summer fine smoother spread
Anmol
LASER NO CHOLESTEROL
the freshness of an English Breeze
Flower Garden freshness at a touch of a button
SUMO TOUGH ON GERMS
TOILET GUARD FIRST LINE OF DEFENCE
Comfi Soft & Strong
www.sunmark.co.uk

# மண் விழுங்கும் மகிந்தர்



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் போராட்டமொன்றினை யாழ்.நகரில் நடாத்தியுள்ளனர்.

தமிழ் மக்களின் பூர்வீக மண் பறிபோவதைத் தடுத்து நிறுத்த மேற்கொள்ளப்பட்ட இக்கவனயீர்ப்பு போராட்டத்தினை நீதிமன்றின் துணையோடு தடை செய்துள்ளது சிங்களத்தின் காவல் துறை.

நிலப்பறிப்பு வசந்தம் வீசும் வடக்கில் இராணுவமும் காவல் துறையும் ஆட்சி புரிகின்றன என்கிற உண்மையை இந்நிகழ்வு சுட்டிக் காட்டுகிறது.

நாடாளுமன்றத்தில் பேசியுள்ளோம், உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளோம் என்று நியமன எம்.பி சுமந்திரன் அழக்கடி சொல்வதை விட இம்மக்களின் அவல நிலையை சர்வதேசத்திற்கு தெளிவாகக் கூறும் என்பது தான் உண்மை.

---

**இலங்கை அரசின் மீது போர்க் குற்றச்சாட்டு, மனித உரிமை மீறல் போன்றவற்றை பிரயோகித்த வல்லரசாளர்கள் இப்போது துரத்தியடிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலங்களில் முதலீடு செய்ய விரைந்து செல்கின்றார்கள்.**

---

இதற்கு ஆதரவாக புலம்பெயர் மக்களும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டியது காலத்தின் தேவை.

சிங்களத்தின் அகராதியில் நல்லிணக்கமென்பது தமிழ் பேசும் மக்களை நிலமற்ற மனிதர்களாக குரலிழந்த பிரஜைகளாக வைத்திருத்தல் என்று இருக்கும் போல் தெரிகிறது.

கிழக்கில் அரசுகளின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் தமது சொந்த மண்ணை இழந்தார்கள் தமிழ் பேசும் மக்கள்.வடக்கில் அவ்வாறான நிலப்பறிப்பு அரச இயந்திரமான படையினரால் நிகழ்த்தப்படுகிறது.

எமது நிலம் எமக்கு வேண்டும் என அமைதி வழியில் போராடிய மக்கள் மீது தெல்லிப்பளையில் வன்முறையைக் கட்டவிழ்த்துள்ளது பேரினவாத இராணுவம்.

போருக்கு தயாராவது போன்று அறவழியில் தமது போராட்டத்தை மேற்கொண்ட மக்களைச் சூழ கலகம் அடக்கும் காவல் துறையினர் குண்டாந்தடிகளோடும், கண்ணீர்ப்புகைக் குண்டுகளோடும் நிலை கொண்டிருந்தனர்.

சிங்களத்தின் பார்வையில் நில உரிமைக்காகப் போராடும் தமிழ் மக்கள் அனைவரும் விடுதலைப்புலிகளாகத் தென்படுவார்கள் போல் தெரிகிறது.

அவர்களைப் பொறுத்தவரை உரிமைக்காகப் போராடுபவர்கள் விடுதலைப்புலிகள் மகாவம்ச பேரினவாத சிந்தனைகளிலிருந்து கட்டமைக்கப்பட்ட இக்கோளாறு சடுதியாக மாற்றமடையும் என்று கற்பனையில் ஆழ்ந்து விடமுடியாது.

அந்த சிங்கள ஆழ்மனத்தில் வேரூன்றியுள்ள வன்மம், தெல்லிப்பளையில் மறுபடியும் வெளிப்பட்டது.

கொள்கையளவில் முரண்பட்டு நிற்கும் தமிழ்க் கட்சிகள், ஒன்றுபட்டு போராட்டம் நடாத்தியது, பேரினவாதத்தின் ஆளுமையில் எரிச்சலை ஊட்டியிருக்கும்.

தேசியளவில் எல்லாவற்றையும் பார்க்க வேண்டும் என்கிற கருணாவின் பரந்த மனது இவர்களுக்கு இல்லையே என்ற ஆதங்கமும் சிங்களத்திடம் உண்டு.

ஆயினும் கரைத்தலின் ஊடாக நல்லிணக்கம் கோட்பாட்டினை நியாயப்படுத்தும் கே.பி., டக்ளஸ், கருணா, பிள்ளையான் போன்றோர் படையினரின் நில அபகரிப்பு குறித்து பேசப் போவதில்லை. அதேவேளை குடிசனப் பரம்பலை பெரும்பான்மை இனமக்களுக்குச் சார்பாக மாற்றுவதன் ஊடாக வடகிழக்கில் வாழும் பூர்வீக தமிழ் குடிகளைச் சிறுபான்மையினராக்கி சிங்கள இறைமைக்குள் தமிழ்த் தேசத்தைக் கரைத் துவிடலாமென்று சிங்களம் முனைகிறது.

இலங்கையில் 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மனிதன் வாழ்ந்தான் என இலங்கை தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் அறிவித்த செய்தியைக் கவனித்தால் இன்னும் மூன்று வருடங்களில் யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் வாழ்ந்தார்களா என்கிற கேள்வி நிச்சயம் எழும்போலுள்ளது.

தற்போது முல்லை மாவட்ட துணுக்காய் பிரதேசத்திலுள்ள அமைதிபுரம், கோட்டை கட்டிய குளம், பழைய முறிகண்டி, தேறாங்கண்டல், ஆலங்குளம், அனிஞ்சியங்குளம் பகுதியில் சுமார் 712 ஏக்கர் காணியை இராணுவம் ஆக்கிரமித்து பயிர்ச் செய்கையினும் ஈடுபடுகிறது.

அத்தோடு ஏறத்தாள 6000 ஏக்கர் முல்லைத் தீவு மண்ணை வருங்கால சனாதிபதி நாமல் இராஜபக்ஷ கபளீகரம் செய்யப் போகின்றார் என்கிற செய்தியும் வருகின்றது.

கிழக்கில் சிங்கள விவசாயிகளையும், மீனவர்களையும் குடியேற்றினார்கள். ஆனால் வடக்கில் போரில் ஈடுபட்ட இராணுவத்தினரை குடியமர்த்துகிறார்கள்.

ஆயிரக்கணக்கான இராணுவ சிப்பாய்களை தெற்கிற்கு நகர்த்தினால் அங்குள்ள இயல்பு வாழ்க்கை பாதிப்படையும் என்ற அச்சமும் அரசிற்கு இருக்கின்றது.

## அரசியல் பார்வை

**இதயச்சந்திரன்**

ஆகவே வளமிக்க வடக்கு நிலங்களை அவர்களுக்கு பகிர்தளிப்பதன் ஊடாக இனச்சுத்திகரிப்பினையும் நடாத்தலாம் யுத்தத்தில் ஈடுபட்டு உறவுகளை இழந்த படையினர் குடும்பத்தினருக்கு புதுவாழ்வும் அளிக்கலாம் என்பதன் அடிப்படையில் மகிந்த சகோதரர்கள் நிலப்பறிப்பினை முன்னெடுப்பது போல் தெரிகின்றது.

இவை தவிர சம்பூர் உட்பட முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு கரையோர கிராமங்களை பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்க்கும் நடவடிக்கையிலும் அரசு ஈடுபடுவதை அவதானிக்க வேண்டும்.

இலங்கை அரசின் மீது போர்க்குற்றச்சாட்டு, மனித உரிமை மீறல் போன்றவற்றை பிரயோகித்த வல்லரசாளர்கள் இப்போது துரத்தியடிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிலங்களில் முதலீடு செய்ய விரைந்து செல்கின்றார்கள்.

எந்த சக்திகள் எமது பிரச்சினையை சர்வதேச அரங்குகளில் முன்வைத்து எமக்கான தீர்வினைப் பெற்றுத் தருமென்று கூறுகின்றோமோ, அதே சக்திகள் இலங்கை அரசோடு வர்த்தக உறவினைப் பலப்படுத்த முயல்கின்றன.

பூகோள அரசியலைப் புரிந்து அதற்கேற்றவாறு காய்களை நகர்த்த வேண்டுமெனக்கூறும் சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் அந்தக் காய்கள் திரைமறைவில் இலங்கையோடு இணக்கப்பாட்டு அரசியலை நடாத்துவதை அறிய வேண்டும்.

---

**இலங்கையில் 40 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மனிதன் வாழ்ந்தான் என இலங்கை தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் அறிவித்த செய்தியைக் கவனித்தால் இன்னும் மூன்று வருடங்களில் யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் வாழ்ந்தார்களா என்கிற கேள்வி நிச்சயம் எழும்போலுள்ளது.**

---

இலங்கைக்கு வழங்கும் ஜீ.எஸ்.பி. வரிச்சலுகையை அமெரிக்கா நீடிக்கப்போகிறது.

அமெரிக்க, இந்திய, சீனா நிறுவனங்கள் இணைந்து திருமலை துறைமுகத்தில் 4 பில்லியன் டொலர்களை முதலீடு செய்யும் ஒப்பந்தமொன்றில் கடந்த வாரம் கைச்சாத்திட்டது.

ஆகவே முரண்பட்ட சக்திகள் போன்று ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் நாடகமாடும் வல்லரசாளர்களின் இரட்டை வேடம் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

ஏனெனில் மனித உரிமை மீறல் பற்றிப் பேசும் அமெரிக்காவும் உலக மனித உரிமைச் சட்டங்களும் குறிப்பாக சர்வதேச நெருக்கடிக் குழுவும் (international crisos group) மண் விழுங்கும் மகிந்தரின் நடவடிக்கை குறித்து வாய்திறக்க மாட்டார்கள்.

சுயநிர்ணய உரிமை என்று பேசாமல் தேசம், தேசியம் என்று பேசுங்களென்று இராஜதந்திர மட்டத்தில் தமிழர்களுக்கு அறிவுரை கூறப்படுகிறதாம். முரண்பட்ட சக்திகள் போன்று ஐ.நா மனித உரிமைப் பேரவையில் நாடகமாடும் வல்லரசாளர்களின் இரட்டை வேடம் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

---

**சிங்களத்தின் பார்வையில் நில உரிமைக்காகப் போராடும் தமிழ் மக்கள் அனைரும் விடுதலைப் புலிகளாகத் தென்படுவார்கள் போல் தெரிகிறது.**

---

ஆனாலும் அடுத்த வருடம் மார்ச்சில் நடைபெறும் மனித உரிமை பேரவைக் கூட்டத்திற்கு முன்பாக வடக்கை ஒரு வழி பண்ணிவிடுவார் மகிந்த.

கரைத்தலின் ஊடாக அழிக்கும் சூத்திரம் இது தான். நிலத்தை இழந்து அல்லல்படும் பாலஸ்தீன மக்களின் நிலையை நாம் உற்று நோக்க வேண்டும்.

Come Directly to a...

TAMIL SPEAKING BARRISTER

For expert legal advice & represenation in
Criminal and Immigration law

**Criminal Litigation**
- Money Laundering
- Serious Fraud
- VAT / Tax investigations
- Confiscation & proceeds of crime
- Appeals against conviction and sentence.
- Regulatory / Health & Safety Investigations

**Immigration**
- Nationality
- Asylum
- EU Law
- Visas
  (Tiers1-5, Resident Permits, Indefinite Leave to remain)
- Judicial review

அனைத்து சட்ட ஆலோசனைகளுக்கும்...

**Services Includes:**

Flexible consultancy times & police station representation can be arranged(24 hours).

சகல விதமான குடிவரவு ஆலோசனைகளையும் நிபுணத்துவத்துடன் செய்து தர அழையுங்கள்....

**For Appointments**
Contact: 07837 450397
Email: mganesan@furnivallaw.co.uk

**Chambers:**
Furnival Chambers, 32 Furnival Street,
London, EC4A 1JQ.



Muthupandi Ganesan
முத்துப்பாண்டி கனேசன்
LL.B(Hons)(Wales),LL.M(Criminal Litigation)
Barrister-at-Law [Direct Access]

# வெயில் என்றால் பிடிப்பதற்கும், நிழல் என்றால் கமக்கட்டுக்குள் வைப்பதற்கும் இது குடையல்ல.




**சுகி**
*(ஒருபேப்பருக்காக)*

திரு. செல்வரத்தினம் அவர்களது ‘அடிப்பெட்டிக்குள் வையுங்கள்’ என்ற போன வார, முதல் பக்கக்கடிதத்திற்கு எதிர்வினையாக எனது கருத்தை முன்வைக்கலாம் என நினைக்கின்றேன். ‘தமிழீழ விடுதலையிலும், தமிழீழ மக்களிலும் உண்மையான பற்றுள்ளவர்களாக இருந்தால் புலிக்கொடிகளை தற்காலிகமாக அடிப்பெட்டிக்குள் வையுங்கள்’ என்று குறிப்பிட்டிருந்தீர்கள். சொல்லில் குறையிருந்தால் மன்னிக்கலாம், உங்களின் பொருளில் குறையிருப்பதால்தான் உங்களுக்கும், உங்களைப்போன்றவர்களுக்கும் அது பிழையாகத் தெரிகின்றது. முதலில் அது புலிக்கொடியல்ல. புலிக்கொடி என்று நீங்களும், உங்கள் நண்பரும் நம்புவதால்தான் அதை குறுகிய பொருளில் விளங்கி, ‘தமிழீழ விடுதலைப்புலிகள் இந்தியா தவிர்ந்த ஏனைய வெளிநாடுகளில், ஒரு வித பயங்கரவாதத்தையும் செய்யாத வகையில், பிரித்தானியா போன்ற மேற்கு நாடுகளில் புலிக்கொடியைப் பிடிப்பதில் ஒரு வித தவறும் இல்லை’ என்று உங்கள் நண்பர் வாதிடுகிறார் என்கிறீர்கள். ஆக மொத்தில் உங்களுக்கும், உங்களுக்கு எதிராக வாதிடும் உங்கள் நண்பருக்கும், அது, உங்களைப்போல, புலிக்கொடியாகவே தெரிகிறது. அதை எப்போ நீங்கள், துூர நோக்கோடு எமது தேசியக்கொடியாகப் பார்க்கத்தொடங்கிவீர்களோ, அன்று இந்த மாயத்தோற்றங்களும், பயங்களும் மறைந்து விடும். இது எமது தேசியக் கொடி. தேசியக்கொடியை ஒரு தேசிய இனம் பிடிப்பதில் ஒரு தவறும் இல்லை. தேசியத் கொடி சொல்லும் செய்தி ஒன்றுதான், நாம் ஒரு தேசிய இனம், எமது தேசத்தில், நாம் ஒரு தேசிய இனமாக வாழ்வதற்கு எமக்கு எல்லா விதமாக உரிமையும் உண்டு.

‘புலிக்கொடியை மறைத்து வைப்பதால் தமிழீழக் கொள்கையிலிருந்து விலகும் வண்ணம் நான் கேட்கவும் இல்லை, கருதவும் இல்லை’ என்கிறீர்கள். ஐயா, தேசியக்கொடி என்பது ஒரு குறியீடு, ஈழத்தமிழரின் அடையாளம் என்று வைத்துக்கொள்ளலாம். சொல்லால் விளங்கப்படுத்த நேரமில்லா எவ்வளவோ விடையங்கள் ஒரு குறியீட்டின் மூலம், மிக இலகுவாக, தெளிவாக, எல்லோருக்கும் (தமிழ் மொழி புரிந்த, புரியாதவர்களுக்கும்) விளங்கப்படுத்த முடியும். அது சொல்லும் செய்தி ஆழமானது, அழகானது, எல்லோரும் பிடிக்கக் கூடிய அமைதியான ஆயுதம். இதில் பயங்கரவாதம் எங்கே வருகிறது. M என்ற எழுத்தைக் கண்டவுடன் மக்டொனால் என்றும், சிலுவைக் குறியீட்டை தேவாயலம் என்றும் எந்த குழந்தையைக் கேட்டாலும் சொல்லும். அது போல ஆயிரக் கணக்கில் தமிழர்கள் கலந்து கொள்ளும் ஊர்வலத்தில், நீங்கள், தேசியக்கொடியைப் பிடிக்காமல், வாகனத்தில் உங்களை விரைவாக கடந்து போகும் வேற்றினத்தவர்களுக்கும், துூரத்தில் இருந்து உங்களை படம் எடுத்தும் போடும் பத்திரிகையாளர்களுக்கும், தமிழீழக் கொள்கையிலிருந்து நீங்கள் விலகவில்லை என்பதை எப்படி சுலபமாகச் சொல்லுவீர்கள்? கொடியை ஒளித்து பெட்டிக்குள் வைத்தால் தான் உங்களோடு கதைப்போம் என்று யாராவது அரசியல்வாதி, அல்லது ஜெனிவா அதிகாரி உங்களுக்கு சொன்னார்களா? நீங்கள் கொடுத்த மனுவை யாராவது ஏற்க மாட்டோம் என்றார்களா?

உங்களின் அரசியல், எமக்கு விளங்கவில்லை என்கிறீர்களா? நீங்கள் மட்டும்மல்ல உங்களை போல இன்னும் சிலர், ஐயோ கொடியை கொண்டுவந்திட்டாங்கள் என்று முணுமுணுப்பதும், கொடிக்கு பக்கத்தில் நில்லாது கொஞ்சம் எட்டி நிற்பதுவும், நாங்கள் விடுமுறைக்கு ஊருக்கு போகவேணும் என முறுகுவதும், தெரியாமல் இல்லை. பொதுமக்கள் தமிழ் ஈழக் கொள்கையில் ஆணித்தரமாக உள்ளார்கள் என்ற செய்தியை எமது தேசியக்கொடி சொல்கிறது. அது அரசியல் வாதிகளுக்கு அவர்களுக்காக வாதிடும் நிலையான தளத்தை (Negotiation power) உரமாக்குகிறது. எதை தமிழ் மக்கள் விரும்பவில்லை, ஒரு சாரார் மட்டும் தான் அதை கேட்டுப்போராடுகிறார்கள், என சொல்லி தட்டிக்கழித்த அதிகாரவர்க்கமும், தேசியத்தை விரும்பும்போது கதைக்கவும், விருப்பாத போது பெட்டிக்குள் வைத்து பூட்டவும் தயாராக இருந்த ஒருசில தமிழர்களும், இப்போ, எல்லா தமிழர்களும், விடுதலையை வேண்டி விரும்பி வீதிக்கு இறங்கும் போது தமது முன்னைய கருத்து தவறானது என்பதை உணர்கிறார்கள்.

‘சர்வதேச ரீதியில் தமிழர்கள் பயங்கரவாதிகள் இல்லை என்று நிரூபணமாகும் வரை அல்லது நம்பிக்கை வரும் வரை தற்காலிகமாகத் தவிர்க்கும் படி’ எனக் கேட்டிருந்தீர்கள். ஈராக்கில் அணுஆயுதங்கள் இல்லை என்பது அங்கு போருக்கு போக முதலேயே எப்படித் தெரியுமோ, அப்படி தமிழர்கள் பயங்கரவாதிகள் இல்லை என்பதும் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். நாங்கள் பயங்கரவாதிகள் என்பது உண்மையல்ல, அதற்காக நாம் அழிக்கப்படவும் இல்லை.

‘ஒரு சிலர் புலிக்கொடி பிடிப்பதால், வருகின்ற தமிழ் உணர்வார்களை தடுக்கின்றார்கள் என்பதை உணர்வார்களா’ என்று கேட்டிருந்தீர்கள். ஒரு சிலர் தான் கொடி பிடிக்கிறார்கள் என்றால், இந்த நீங்கள் குறிப்பிடும் கொடி பிடிக்க விரும்பாத அல்லது தற்காலிகமாக அதை அடிப்பெட்டிக்குள் வைக்க விரும்பும் பல்லாயிரணக்கணக்கான தமிழ் உணர்வாளர்கள், இந்த கொடி பிடிக்கும் ஒரு சிலரைப்பார்க்காமல், தங்களின் தமிழ் உணர்வால் ஒன்று திரண்டு ஒரு போராட்டம் நடத்தினால் என்ன?

‘இவர்களுக்கு துணிவிருந்தால் சிறீலங்காவின் புலனாய்வுப் பிரிவினரின் கமராவுக்கு முன்னால் செய்யட்டும் பார்ப்பம்’ என்கிறீர்கள், ’ அத்துடன் சிறீலங்கா அரசாங்கம் பயங்கரவாதத்தில் ஈடுபடுவர்களின் சொத்துகள் பறிபோகும் சட்டம் கொண்டு வர இருக்கிறார்கள் என்பதையும் அறிவார்களோ’ என்றும் சொல்கிறீர்கள்.

ஐயா, தமிழ் உணர்வாளர் என்கிறீர்கள், போராட்டம் என்கிறீர்கள், தமிழீழக் கொள்கையில் இருந்து விலகவில்லை என்கிறீர்கள். புடம் போட்ட அரசியல் வாதி மாதிரி, எம்மை மிகத் தெளிவாக குழப்புகிறீர்கள்! அங்கு வாலைக் காட்டி இங்கு தலையைக் காட்டுவதற்கு வேறு பெயர், அதன் பெயர் போராட்டமோ, மக்கள் எழுச்சியோ அல்ல. மக்களை மக்களாக இருக்க விடுங்கள். அரசியல் வாதிகள் சொந்த லாபங்களுக்கு விலை போகாமல் ‘யதார்த்ததை உணர்ந்து, மதி நுட்பத்துடன் நடந்து கொள்ளட்டும்?







ஒரு பேப்பர் ORU PAPER

உங்கள் வாசல் தேடி வர,
ஒரு வருடத்திற்கு £35 மட்டுமே!

SUBSCRIPTION FORM

Name: ______________________

Address : ______________________

______________________

______________________

Postcode: ______________________

Telephone: ______________________

மேலுள்ள விண்ணப்ப படிவத்துடன், £35 க்கு "Oru Paper Ltd."" ன் பெயரில் காசோலையினையும், G11, LOMBARD HOUSE, PURLEY WAY, CROYDON, CR0 3JP என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

# கிணறு வெட்டக் கிளம்பிய பூதம்

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுகிறோம் என்ற பெயரில் நடந்தேறிய நாடகம்

பாகம் 05



சாத்திரி

(ஒரு பேப்பர்)

இதுவரை நான்கு பாகமாக வெளிவந்த இந்தத்தொடரில் தாயகத்தில் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதாக புலம்பெயர் மக்களிடம் திரட்டிய ஒரு குழுவினரின் நடவடிக்கைகள் பற்றியும் இவற்றுடன் தொடர்புபட்டவர்கள் பற்றியும் பார்த்திருந்தோம். பிரித்தானியாவில் வசிக்கும் ஸ்கந்தா மற்றும் ரிசி இருவருக்குமிடையில் ஏற்பட்ட போட்டியில் ஸ்கந்தாவே வெற்றி பெற்றார் என்பதனையும் பார்த்திருந்தோம். இன்றைய நிலையில் ரிசி இங்கிலாந்தில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றார். ஆனால் ஸ்கந்தா இன்னமும் பந்தாவாக வலம் வந்து கொண்டிருக்கின்றார். தாயகத்தில் இவர்களது மோசடிகளிற்கு பாவிக்கப்பட்டவர்களும் இவர்களால் கைவிடப்பட்டு நிற்கின்றார்கள். அவர்களை விடுவோம் ஏனெனில் அவர்களும் இவர்களது ஆசை வார்த்தைகளிற்கு மயங்கி இவர்களின் மோசடிக்கு துணை போனவர்கள்தான், ஆனால் இவர்களால் பாதிக்கபட்டவர்கள் யுத்தத்தில் மோசமாக பாதிக்கபட்டும் உடல் அவயவங்களை இழந்த மக்களும் முன்னைநாள் போராளிகளுமே. அவர்கள் இனி அடுத்ததாக என்ன செய்ய வேண்டும் அல்லது செய்ய முடியும் என்று எதுவுமே தெரியாமல் விதி விட்ட வழி என்று வாழ்நாளை போக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

அதே நேரம் இந்த மோசடிக்கு முக்கியமாக பயன்படுத்தப்பட்ட உதயகலா மற்றும் கஸ்தூரி ஆகியோர் தங்கள் கைப்பட எனக்கு எழுதியிருந்த கடிதத்தின் விபரங்களை சுருக்கமாக இங்கு தந்து இத் தொடரை முடிவிற்கு கொண்டு வருகிறேன்.

*முதலில் உதயகலா எழுதிய கடிதத்தின் சுருக்கம்..*

வன்னியில் நடந்த இறுதி யுத்தத்தின் போது சரணடைந்து, பின்னர் முகாமிலிருந்து விடுதலையாகி வெளியேவந்து குடும்பத்துடன் இணைந்த பின்னர் ஒரு தொழில் நிறுவனத்தில் இணைந்து பணியாற்றிக்கொண்டிருந்தேன். அப்போது, போரினால் பாதிக்கப்பட்டவர்களிற்கு உதவுவதாக சொல்லிக் கொண்டு ஸ்கந்தா மற்றும் ரிசி ஆகியோர் தமது முகவர்கள் மூலம் என்னை தொடர்பு கொண்டனர். பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை சேகரித்து தருமாறும் பின்னர் தங்கள் உதவியினை பாதிக்கப்பட்டவர்களிற்கு வழங்கி உதவி வழங்கப்பட்டதற்கான ஆதாரங்களை தங்களிற்கு அனுப்பி வைக்குமாறும். இதனை சேவையாக செய்தாதலும் அதற்கான ஒரு கூலி வழங்கப்படும் என்பதாக அவர்களின் முகவரான கஸ்தூரி மூலம் கோரிக்கை விடுத்திருந்தனர். அதற்கிணங்கவே பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை நான் சேகரித்து இலண்டனிற்கு அனுப்பிக் கொண்டிருந்தேன். ஆனால் நான் அனுப்பிய விபரங்களில்உள்ளவர்களுக்குஉதவிகள் கிடைத்தாலும் அவர்களிற்கு கிடைத்த உதவியினை விட இரண்டு மடங்கு உதவிகள் கிடைத்ததாக ஆதாரக் கடிதங்களை பெற்று அனுப்புமாறு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தேன். உதாரணத்திற்கு அவர்களிற்கு 5000 ரூபாய் கொடுத்திருந்தால் 10000 ரூபாய் கொடுத்ததாக உதவி பெற்றவர்களிடம் கடிதம் பெற்றுக் கொடுக்குமாறு எனக்கு அறிவுறுத்தப்பட்டது. அது மட்டுமல்லாது ஸ்கந்தா மற்றும் ரிசி ஆகியோரின் கோரிக்கைக்கு இணங்கவே பாதிக்கப்பட்டவர்களை வெளிநாட்டிற்கு அழைத்து செல்வதற்காக பலரை தெரிவு செய்து அவர்களிடம் ஒரு தொகை பணத்தினை பெற்று ஸ்கந்தாவின் வழிகாட்டுதலின் அடிப்படையில் அவர்களை சில ஆசிய நாடுகளிற்கு அனுப்பியும் வைத்திருந்தேன் அதன் பின்னர் அவர்களை வெளிநாட்டிற்கு அனுப்வேண்டியது ஸகந்தாவின் கடமை. பயணிகளிடம் பெற்ற பணத்தினையும் ஸ்கந்தாவின் முகவர்களின் பெயரில் வங்கிகளில் வைப்பு செய்து விட்டேன். ஆனால் ஸ்கந்தா ரிசி ஆகியோர் கூட்டாக ஏமாற்றுவேலை செய்கிறார்கள் என்பதனை அறிந்ததும் யாழில் இயங்கிய அலுவலகத்தினை மூடிவிட்டு அவரின் முகவர்களான கஸ்தூரி மற்றும் ராதிகா ஆகியோரோடு நான் பிரச்சனைப்பட்டதும் என்னை துரோகியாக்கி ஏமாற்றுக்காரியாக்கி இணையங்களில் செய்தியினை வெளியிட்டுவிட்டனர். இவ்வாறு உதயகலாவின் இரண்டு பக்கத்தில் கடிதம் குறிப்பிடப்பட்டிருந்தது.

*அடுத்ததாக கஸ்தூரி உதயகலா பற்றி எழுதியிருப்வை......*

முள்ளியவளை கிரமத்திற்கு வந்திருந்த உதயகலா அங்கு பாதிக்கப் பட்ட மக்களை அணுகி தான் சுவிசில் இருந்து வந்திருப்பதாகவும் புலிகள் அமைப்பின் வெளிநாட்டு பிரிவு தன்னை பாதிக்கப்பட்டவர்களிற்காக உதவும்படி அனுப்பியதாக கூறிக்கொண்டு பிள்ளைகள் கற்பதற்கான புத்தகங்கள் சிடிக்கள் என பன விற்பனை செய்தார். பின்னர் பாதிக்கப்பட்டவர்களை வெளிநாட்டிற்கு அனுப்புவதாக கூறி ஒரு குடும்பத்திற்கு மூன்று இலட்சம் வீதம் வாங்கி கொண்டவர் அவர்களை கொழும்பிற்கு அழைத்துச்சென்று நீர்கொழும்புப் பகுதியில் தங்க வைத்திருந்தார் சிலரை வெளிநாடுகளிற்கும் அனுப்பி வைத்திருந்தார். நீர் கொழும்பில் தங்கியிருந்தவர்கள் தங்களை வெளிநாட்டிற்கு ஏன் இன்னமும் அழைத்து செல்லவில்லையென்று பிரச்சனை கொடுத்த போது அவர்களை உல்லாச விடுதிகளிற்கு அழைத்து சென்று அவர்களிற்கு மது வாங்கி கொடுத்து தானும் அவர்களோடு மது அருந்தி உல்லாசமாக இருந்து அவர்களை ஏமாற்றினார். அது மட்டுமல்லாது முகாம்களில் அடைபட்டு கிடந்தவர்களையும் வெளியே எடுத்து விடுவதாக கூறி பலரிடம் பணத்தினை வாங்கி மோசடி செய்துள்ளார். பணத்தினை கொடுத்தவர்கள் உறவினர்களும் வெளியே வராததால் உதயகலாவிடம் போய் விபரம் கேட்டபொழுது உங்களை புலி என்று சொல்லி 4ம் மாடிக்கு அனுப்பிவிடுவேன் என்று மிரட்டியதோடு மட்டுமல்லாது அதில் சிலரை நீர் கொழும்பில் உள்ள வீடு ஒன்றில் வைத்து அடித்து தன்புறுத்தியும் இருக்கிறார். இதனால் பலர் மனநோயாளியாகியுள்ளனர். அது மட்டுமல்லாது பல கடை முதலாளிகளையும் சில சிங்களவர்மூலமாக உளவு பிரிவினர் என்று சொல்லி மிரட்டி பணம் வாங்கியுள்ளார். இவரிற்கும் ரிசிக்குமே தொடர்புகள் உள்ளது தமக்கும் ஸ்கந்தாவிற்கும் எவ்வித தொடர்புகளும் இல்லையென்று ஒரு கொலிவூட் படம் தயாரிக்கக் கூடிய ரேஞ்சிற்கு கஸ்தூரியின் கடிதம் 4 பக்கத்தில் கிடைத்திருந்தது.

இங்கு கடிதம் எழுதிய உதயகலா தான் பணத்தினை ஸ்கந்தா குழுவினரிற்கு பணம் வங்கிகளில் இட்டதற்கான பல ஆதாரங்களை இணைத்திருந்தார். அதுமட்டு மல்லாது அவர் ஸ்கந்தா ரிசி ஆகியோருடன் இணைந்து வேலை செய்ததற்கான ஆதாரங்களும் அனுப்பியிருந்தார். ஆனால் கஸ்தூரி உதயகலா பற்றிய குற்றச்சாட்டுகளிற்கு எவ்விதமான ஆதாரங்களும் தரவில்லையென்பதுடன், தமக்கும் உதயகலாவிற்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்று எழுதியிருந்தார். தமக்கும் உதயகலாவிற்கும் எவ்வித தொடர்பும் இல்லாமல் உதயகலா செய்த மோசடிகள் மட்டும் எப்படி அவரிற்கு தெரிந்திருக்கின்றது என்பது கேள்விக்குறி? உதயகலாவால் ஏமாற்றப் பட்டவர்களின் விபரங்களை அனுப்புவதாக கூறியவர் பின்னர் எதனையும் அனுப்பவில்லையென்பதுடன். அவரின் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளது.

### இன்றைய நிலையில் ரிசி இங்கிலாந்தில் தலை மறைவு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றார். ஆனால் ஸ்கந்தா இன்னமும் பந்தாவாக வலம் வந்து கொண்டிருக்கின்றார். தாயகத்தில் இவர்களது மோசடிகளிற்கு பாவிக்கப்பட்டவர்களும் இவர்களால் கைவிடப்பட்டு நிற்கின்றார்கள்.

இந்தத் தொடர் ஒரு பேப்பர் ல் வெளிவந்த நாள் முதல் ஸ்கந்தா மற்றும் ரிசி போன்றவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு தங்கள் பக்க விளக்கங்களையும வழங்கினால் நாம் அவற்றையும் பிரசுரிப்போம் என அவர்களிற்கு தனியாகவும் பகிரங்கமாகவும் தெரிவித்திருந்தோம். ஆனால் ஸ்கந்தா அவர்கள் இக்கட்டுரையை நிறுத்தும்படி எனக்கு ஒரு அழுத்தத்தினை கொடுக்க முயற்சித்தார்.

ஒரு பேப்பர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் கூறியதாக எமக்கு தகவல் கிடைத்தது. அவர்கள் இவ்வளவு சிரமப்பட்டிருக்கத் தேவையில்லை என்னுடனோ அல்லது ஒரு பேப்பர் ஆசிரியர் குழுவினருடனோ நேரடியாக தொடர்பு கொண்டு, தமது பக்க நியாயத்தினை தாராளமாக வைத்திருக்கலாம்.

எது எப்படியோ தேசியம் என்கிற போர்வையில் பாதிக்கப்பட்டவர்களிற்கு உதவுகின்றோம் என்று கூறிக்கொண்டு செய்த மோசடியினை ஒரு பேப்பர் வெளிக்கொண்டு வந்து அதனை தடுத்து நிறுத்தியுள்ளது, இதனுடன் தொடர்புபட்டவர்களை இனங்காட்டியுள்ளது.

இனிவரும் காலங்களில் இவர்கள் போன்றவர்களிடம் மக்கள் அவதானமாக இருக்கும்படி வேண்டிக் கொள்வதோடு யாராவது இவர்கள் போன்றவர்களிடம் ஏமாற்றப்பட்டிருந்தால் தகுந்த ஆதாரங்களுடன் எம்மைத் தொடர்பு கொண்டால் அவற்றைஉறுதிப்படுத்திய பின்னர் ஒரு பேப்பர் அதனை பகிரங்கப்படுத்தும் என்பதனையும் தெரிவித்து கொள்கிறோம்.

*கட்டுரை தொடர்பான மேலதிக விபரங்கள் மற்றும் ஆதாரங்களை ஒரு பேப்பர் இன் இணையத் தளத்தில் நீங்கள் காணலாம்*


கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?

தனிநபரோ... வியாபாரமோ...

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்



BBK PARTNERSHIP

www.bbkca.com
Email: admin@bbkca.com

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

R3
ICAEW THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN
CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN
CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

# சோனியாவின் பிரணாப் முஹர்ஜியும் கருணாநிதியின் டெசோவும்







**வேல் தர்மா**

*(ஒரு பேப்பருக்காக)*

இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டவுடன் தன்னைத் தான் இந்தியக் குடியரசுத் தலைவர் பிரதம மந்திரியாக்குவார் என்று சொன்னதால் அப்போதைய முடிக்குரிய இளவரசர் ராஜீவ் காந்தியின் கோபத்திற்கு ஆளானவர் பிரணாப் முஹர்ஜி. இதனால் ராஜீவ் காந்தி பிரதம மந்திரியானபோது பிரணாப்பிற்கு மந்திரிப் பதவி கொடுக்காமல் ஓரங்கட்டப்பட்டார். பின்னர் அவர் காங்கிரசுக் கட்சியில் இருந்து விலகி தனியாக ராஷ்த்திரிய சமாஜ்வாதி காங்கிரஸ் கட்சியை ஆரம்பித்தவர்.

**ராஜிவ் காந்தி இறந்த பின்னர் இயங்காமல் போன டெசோவிற்கு இப்போது புத்துயிர் கொடுக்க கருணாநிதி முயல்கிறார். தேர்தல்களின் சீமானின் சூறாவளிப் பிரசாரம் தனது கட்சியைத் தோல்வியடையாமல் செய்ய தான் தீவிர ஈழ விடுதலை ஆதரவாளர் என காட்டிக் கொள்ள கருணாநிதி முயல்கிறார்.**

■ **திருவாளர் நம்பிக்கைக்குரியவர்**

தனியாகக் கட்சி ஆரம்பித்த பிரணாப் முஹர்ஜியை ராஜிவ் கொல்லப்பட்ட பின்னர் பிரதமரான பி.வீ.நரசிம்ம ராவ் மீண்டுக் காங்கிரசுக் கட்சிக்குள் கொண்டு வந்து அவரை திட்ட ஆணைக் குழுவின் பிரதித் தலைவராக்கினார்.

நீண்ட அரசியல் ஈடுபாடும் ஆழ்ந்த அரசியல் அறிவும் கொண்ட பிரணாப் முஹர்ஜி அரசறிவியலில் முதுமானிப் பட்டம் பெற்றவர். நிதி, வெளியுறவுத் துறை, வர்த்தகம், பாதுகாப்பு போன்ற முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்தவர் பிரணாப் முஹர்ஜி. இரவு பகல் பாராத கடின உழைப்பு புத்திக் கூர்மை கட்சிக்கு விசுவாசம் போன்றவற்றால் இவர் திருவாளர் நம்பிக்கைக்குரியவர் (Mr Dependable) என்று அழைக்கப்படுபவர். தற்போது நிதியமைச்சராக இருக்கும் பிரணாப் முஹர்ஜி முன்னர் நிதியமைச்சராக இருந்த போது அவரின் கீழ் பணி புரிந்தவர் தற்போதைய பிரதம மந்திரி மன்மோகன் சிங்.

■ **மொக்கை காந்திக்கு வழிவிட வேண்டும்**

மொக்கை காந்தி என அழைக்கப்படும் ராகுல் காந்தி அடுத்த பிரதம மந்திரியாவதற்கு தடையாக இருப்பவர் பிரணாப் முஹர்ஜி. ஒரு பத்திரிகைப் பேட்டி கூட ஒழுங்காகக் கொடுக்கத் தெரியாமல் தடுமாறும் ராகுல் காந்தியின் திறமையின்மையும் அனுபவமின்மையும் அவரைப் பிரதம மந்திரியாக்குவதற்கு பலரிடம் இருந்து எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது. அனுபவமும் திறமையுமுள்ள பிரணாப்பை குடியரசுத் தலைவராக்கிவிட்டால் ராகுல் மொக்கை காந்தியை பிரதமராக்குவது இலகு என்று சோனியா காந்தி நினைக்கிறார். இதேவேளை தனது பிரதம மந்திரிப் பதவியைப் பறித்தமைக்காக பிரணாப் முஹர்ஜி தன்னையும் தனது குடும்பத்தையும் பழிவாங்கி விடுவாரா என்ற பயம் சோனியா ஜீக்கு உண்டு. குடியரசுத் தலைவர் பதவிக்கு பிரணாப்பை சோனியா தேர்ந்தெடுத்தமை சோனியாவைப் பொறுத்தவரை ஒரு விருப்பமில்லாத தெரிவே. ஆளும் கூட்டணியில் உள்ள கட்சிகளில் மம்தா பனர்ஜீ சற்றுத் திமிராகக் காணப்படுவது அவர் தொடர்பான வழக்கு ஆவணங்கள் சி.பி.ஐ. எனப்படும் இந்தியாவின் மத்திய புலனாய்வுத் துறையிடம் இல்லை என்பதாலேயே. இப்போது இந்தியாவில் கட்சிகளினிடையாய கூட்டணியைத் தீர்மானிப்பவை அவற்றின் கொள்கைகளல்ல. ஒவ்வொரு கட்சித் தலைவரினர் பற்றி சிபிஐயிடம் இருக்கும் ஊழல் வழக்குகள் தொடர்பான ஆவணங்களே. பெங்களூர் எடியூரப்ப உத்தரப் பிரதேச மாயாவதி போன்றோருடன் இந்துத்துவ அமைப்பான சிவ சேனையும் பிரணாப்பிற்கு ஆதரவு தெரிவிக்கின்றனர்.

■ **தமிழின விரோதப் பார்ப்பனர் பிரணாப் முஹர்ஜி**

ஐந்தடி ஒரு அங்குல உயரமான பிரணாப் முஹர்ஜி மீன் கறியில் பிரியமுள்ள பார்ப்பனன். இசையிலும் வீட்டுத் தோட்டத்திலும் ஆர்வமுள்ள பிரணாப் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த போது இலங்கையின் இன அழிப்புப் போருக்கு பெரும் உதவி புரிந்தவர். இந்தியா இலங்கைக்கு படைக் கலன்கள் கொடுத்து உதவுவதை பகிரங்கமாக ஒப்புக் கொண்டவர். இறுதிப் போரின் போது போர் முனையில் நான்கு இலட்சம் மக்கள் சிக்கித் தவிக்கையில் அங்கு எழுபதினாயிரம் மக்கள் மட்டுமே இருக்கின்றனர் என்று இலங்கை அரசு பொய் கூறியது. போர் முனையில் நான்கு இலட்சம் மக்கள் சிக்கித் தவிக்கும் மக்களிற்கு உணவு, நீர், மருந்து அனுப்பாமல் தடுத்து அவர்களைப் பட்டினியால் கொல்வதற்காகவே இலங்கை அரசு பொய் கூறியது. எழுபதினாயிரம் மக்கள் மட்டுமே உள்ளனர் என்ற அதே பொய்யை வலியுறுத்திக் கூறியவர் இந்தப் பிரணாப் முஹர்ஜி. போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்த இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டதாக கூறிக் கொண்டு அங்கு சென்று இலங்கைக்கு போரை விரைந்து முடிப்பதற்குத் தேவையான உதவிகளை செய்தவர் பிரணாப் என்ற குற்றச் சாட்டும் உண்டு.

■ **டெசோ கருணாநிதி**

முன்னாள் தமிழக முதல்வர் கருணாநிதி தனது அரசியல் வறுமையில் இருந்து விடுபட எடுத்த ஒரு கத்தி டெசொ எனப்படும் தமிழீழ ஆதரவாளர்கள் அமைப்பு. 1985இல் உருவாக்கப்பட்ட டெசோ செய்த சாதனைகள் அண்டன் பாலசிங்கமும் செல்வநாயகம் சந்திரகாசனும் இந்தியாவில் இருந்து நாடுகடத்தப்பட்டமையை நிறுத்தியதும் 1985இல் அன்றைய ஆந்திர முதல்வர் என் டி ராமாராவ், வாஜ்பாய் (பா.ஜ.க.), பி.உபேந்திரா (தெலுங்கு தேசம்), எச்.என். பகுகுணா (லோக்தள்) பல்வந்த் சிங் ராமுவாலியா எம்.பி.(அகாலிதளம்), பி.உன்னி கிருஷ்ணன் எம்.பி. (காங்கிரஸ்-எஸ்), ராச் சையா (ஜனதாக்கட்சி), அப்துல் ரஷீத் எம்.பி. (காஷ்மீர் மாநில தேசிய மாநாட்டுக் கட்சி), ஜஸ்வந்த் சிங் எம்.பி, இந்துஸ்தான் முன்னணி சார்பாக சுப்பிரமணிய சாமி எம்.பி., அஸ்ஸாம் கணபரிஷத்தைச் சேர்ந்த தினேஷ்கோஸ்வாமி எம்.பி, க.அன்பழகன், கி.வீரமணி, ப.நெடுமாறன், அய்யணன் அம்பலம், தேவசகாயம் மற்றும் இந்திய கம்žனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகவும் தலைவர்கள் கலந்து கொண்டனர். என்டிஆர், வாஜ்பாய் ஆகிய பிரபலமானவர்கள் உட்படப் பலரை கொண்ட ஒரு மாநாட்டை ஒழுங்கு செய்தமை மட்டுமே. இவற்றைத் தவிர வேறு எதையும் டெசோவால் சாதிக்க முடியவில்லை. ராஜிவ் காந்தி இறந்த பின்னர் இயங்காமல் போன டெசோவிற்கு இப்போது புத்துயிர் கொடுக்க கருணாநிதி முயல்கிறார். இனிவரும் தேர்தல்களின் சீமானின் சூறாவளிப் பிரசாரம் தனது கட்சியைத் தோல்வியடையாமல் செய்ய தான் ஒரு தீவிர ஈழ விடுதலை ஆதரவாளர் எனக் காட்டிக் கொள்ள கருணாநிதி முயல்கிறார்.

**பிரணாப்பிற்கு ஆதரவு வழங்குபவர்களில் முக்கியமானவர்கள் திமுகவினரே. பார்ப்பன விரோதப் பரப்புரை மூலம் அரசியலுக்கு வந்த கருணாநிதி ஒரு பார்ப்பனனை இந்தியக் குடியரசுத் தலைவராக்குவதில் முன்னிற்கிறார்.**

■ **ஈழமும் காங்கிரசும்**

ஈழவிடுதலைக்கு கருணாநிதி இருதய சுத்தியுடன் ஆதரவு தெரிவிப்பவராக இருந்தால் ஈழவிடுதலைக்குச் சார்பாக காங்கிரசு தன் கொள்கையை மாற்றிக் கொண்டால் மட்டுமே தன்னால் சோனியாவின் குடியரசுத் தலைவர் வேட்பாளரை ஆதரிக்க முடியும் என்று சொல்லியிருக்க வேண்டும். அல்லது இலங்கை இனப்பிரச்சனைக்கான தீர்வை விரைவு படுத்த வேண்டும் என்ற கோரிக்கையையாவது முன்வைத்திருக்க வேண்டும். மம்தா பானர்ஜி போல் சோனியா முன் நிமிர்ந்து நிற்காமல் தனது குடும்ப நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டு கருணாநிதி நிபந்தனை எதுவுமில்லாமல் ஒரு தமிழின விரோதிக்கு ஆதரவு வழங்கியுள்ளார். பிரணாப்பை தனது நண்பன் என்று அடிக்கடி சொல்லும் கருணாநிதி தனது செம்மொழி மாநாட்டை ஆரம்பித்து வைக்க அவரையே அழைத்தார்.

**போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்த இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டதாக கூறிக் கொண்டு இலங்கைக்கு சென்று போரை விரைந்து முடிப்பதற்குத் தேவையான உதவிகளை செய்தவர் பிரணாப் என்ற குற்றச் சாட்டும் உண்டு.**

பிரணாப்பிற்கு ஆதரவு வழங்குபவர்களில் முக்கியமானவர்கள் திமுகவினரே. பார்ப்பன விரோதப் பரப்புரை மூலம் அரசியலுக்கு வந்த கருணாநிதி ஒரு பார்ப்பனனை இந்தியக் குடியரசுத் தலைவராக்குவதில் முன்னிற்கிறார். இதை அன்றே எம்ஜிஆர் படப்பாடல் ஒன்று சொன்னது: மக்கள் நலம் மக்கள் நலம் என்று சொல்லுவார் தம் மக்கள் நலம் ஒன்றேதான் மனதில் கொள்ளுவார்.

WE ARE LOOKING TO RECRUIT
APPRENTICE / TRAINEE ACCOUNTANT TO
ACE CONSULTANTS (UK) LIMITED
IN CENTRAL LONDON
Requirements : Candidate's First Degree must be in Accounting & Finance
Please forward the CV to Sanjeevan on sam@aceconsultantsuk.com

Perma Shipping
பிரேமா விமான, கப்பல் பொதி சேவை
Air Freight World Wide
Collection, Packing & Crating
Urgent, Documents, Parcels Door Delivery
Customs Clearance By Sea/Air
Delivery to anywhere in Srilankaó
யாழ், வன்னி, வவுனியா, மன்னார, மட்டகளப்பு, திருமலை, அம்பாறைக்கு விரைவான மலிவான சேவை!
Removal Services & Airport Transport Services available
Office:A2C Redlands Croydon, CR5 2HT
தொடர்புகளுக்கு : சிவம் (Sivam)
Collection Point: 1-3 Wyvern Industriial Estates, Beverely Way, New Malden, Surrey KT3 4PH
உங்கள் பொருட்களை இங்கு வந்து பொதி செய்து கொள்ளலாம். உங்கள் இல்லம் வந்து பெற்று அனுப்பும் சேவையும் உண்டு.
TEL: 020 8668 0252 / 020 8646 5222
MOB: 07931 197 571 / 07939 550 397
www.permainternational.co.uk / www.jpnshippingltd.co.uk
info@permainternational.co.uk / info@jpnshippingltd.co.uk

# The political meaning of the retreat in London




By : Sunanda Deshapriya

பிஞ்சுக்குழந்தை மலர் விழி..... அண்ணா என்றழைக்கும் அழகிய மழலைக்குரலுக்கு சொந்தக்காறி. இனிய ஒரு சங்கீதம்போல அலைபேசியினூடு ஒலிக்கும் அவள் குரலில் மயங்கி மணித்துளிகளை மறந்து நான் பேசிக்கொண்டிருப்பேன்... அவளின் குழைவான சொற்கள் என் செவிகளில் விழும்போதெல்லாம் சிறகடித்துப்பறக்கும் பல்லாயிரம் வண்ணாத்துப் பூச்சிகளின் நடுவே என் மனம் மிதந்துகொண்டிருக்கும்... தெறித்து விழும் அவள் மழலை மொழியில் என் பால்ய காலங்களின் பிம்பங்களை நான் தரிசிப்பேன்... பின்னொரு நாளில் உயிரை நடுங்கவைக்கும் குண்டொலிகளின் நடுவே மயக்கத்தில் இருந்து கண்களை விழித்துப் பார்க்கும்போது செல்பட்ட தன் கால்களில் ஒன்று துண்டாடப்பட்டு வெற்றிடமாக இருப்பதைப்பார்த்து எப்படித் துடித்திருப்பாள் அந்தப் பிஞ்சுமகள்... ஒற்றைக்காலுடன் அவள் உயிர்வாழ்வதைக்கூடப் பொறுக்கமுடியாத சிங்களம் அவள் கால்காயம் ஆறமுன்னரே கொத்துக்குண்டால் தலைசிதற சாகடித்தது எத்தனைதடவை வெடித்துச் சிதறி இருக்கும் புத்தனின் இதயம் இப்பொழுதெல்லாம் அண்ணா என்ற வார்த்தையை எந்தக் குழந்தையிடமிருந்துகேட்டாலும் சொற்களில் அடங்கா வலியுடனும் தவிப்புடனும் துண்டாடப்பட்ட தன் கால்களைப் பார்த்த மலர்விழியின் முகமே மனதில் விரிந்து என் இதயத்தை சாகடிக்கிறது....

சர்மிலா அம்மம்மாவின் மடியில் தூங்காமல் ஒரு போதும் உறங்கிப்போனதில்லை..கண்களில் வியப்பும்,புதினமும் விரிய விரிய அம்மம்மாவின் கதைகளைக் கேட்டபடி ஆனந்தமாய் உறங்கிப்போகும் குட்டி உலகம் அவளுடையது. அவள் புன்னகையிலும்,குறும்புத்தனங்களிலும் சிங்களம் என்ன குற்றத்தைக் கண்டதோ... வயிறு பிளந்து குடல் வெளித்தள்ள செத்துக்கிடந்த அம்மம்மாவின் பிணத்திற்குப் பக்கத்திலேயே தனியாகக் கிடந்த அவள் தலை என் கண்ணெதிரே தெரிகிறது...இனிக் கதை கேட்க முடியாதே என்று தனியே கிடந்த அந்த முகத்தில் தெரிந்த ஏக்கத்தையும், தவிப்பையும் எந்த ஒரு இதயமுள்ள மனிதனாலும் இலகுவில் கடந்து சென்று விடமுடியாது...

கந்தகநெடி நிரம்பிய ஒரு மாலைப்பொழுதில் முள்ளிவாய்க்காலில் பங்கர் ஒன்றின் அவிச்சலுக்குள் பசிமயக்கத்தில் நினைவிழந்துகொண்டிருந்தாள் சின்னஞ்சிறுமி ப்ரியா.. பசியோடு துடித்துத்துவண்டு விழுந்து கொண்டிருந்த பிஞ்சுக்குழந்தையின் முகத்தைப் பார்க்க முடியாமல் மழைபோலப் பொழிந்து கொண்டிருந்த கொத்துக்குண்டுகளின் நடுவே கால் வயிற்றுக் கஞ்சியாவது காய்ச்சலாம் எனஅரிசி தேடிப்போன தந்தையின் தலையை நெஞ்சில் துளி ஈரமில்லா சிங்கள அரசு அனுப்பிய சிப்பாய் ஒருவனின் தோட்டா துளைத்த செய்தி கூடத் தெரியாமல் அப்பா வந்து விடுவார் என்று பிஞ்சின் பசிபோக்க சொல்லிக் கொண்டிருந்த குடும்பத்தின் பசியை அவர்கள் இருந்த பங்கரின் மேல் எரிகுண்டைப்போட்டு மொத்தமாகவே அணைத்துவிட்டிருந்தது சிங்களம்... இப்பொழுதெல்லாம் கொதிக்கும் உலையில் பசியால் சோர்ந்து சோர்ந்துபோகும் ப்ரியாவின் பிஞ்சு முகத்தின் பிம்பமே ஆடி ஆடி மேலெழுந்து வந்து அடங்கிப் போகிறது... என் உணவுக் கோப்பை முழுவதும் அவளின் நிறைவேறாத பசியே நிறைந்து போய்க்கிடக்கிறது...

சின்னஞ்சிறுமி அகிலா சிங்கள ராணுவத்திடம் தன் தந்தைக்காக மன்றாடிக் கொண்டிருந்தபோது நாங்கள் உலகின் வீதிகளில் கதறி அழுது கையாலாகாதவர்களாக திகைத்துப்போய் நின்றுகொண்டிருந்தோம்...வல்லரசுகளின் பாதங்களை எங்கள் எல்லோரது கண்ணீரையும் ஒன்றாக்கி கழுவினோம்... வீதிகளை மறித்து எம் தேசத்து சேதிகளை கத்திக்கதறி உரைத்தோம்... எம் கண்ணீர்தான் காய்ந்துபோனது... எம் குரல் வளைதான் தேய்ந்துபோனது...சோர்ந்து போய் நாங்கள் நின்றபோது எங்கள் குழந்தைகளின் உடல்களின்மேல் சிங்களத்தின் ஊர்திகள் ஊர்ந்து கொண்டிருந்தன ஒரு தலைமுறை புதைக்கப்படுவதை மௌனமாய், இயலாதவர்களாய் நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தோம் நாங்கள் சக்தியற்றவர்களாக நின்றோம்... எங்கள் பலம் ஒரு எல்லைவரைதான் இருந்தது.. அதைத்தாண்டி எதையும் செய்ய முடியாத இயலாதவர்களாக இருந்தது தான் எம் வாழ்நாட்களில் இனி எப்பொழுதும் மறக்க முடியாத ஒரே ஒரு குற்றவுணர்ச்சியாக வரலாறு முழுக்க எம்மை வதைத்துக் கொண்டிருக்கும்..

ஒற்றை வரியைக் கூட எழுதமுடியாமல் எம் கவிஞர்கள் பலரின் பேனாக்களின் வழியே இன்றும் ஓலங்களே இறங்குகின்றன அவலமாக செத்துப்போன எம் குழந்தைகளின் கண்ணீர்த்துளிகள் பேனாமையாய்க் கரைந்தோடுகின்றன.... இன்னும்கூட இரக்கமின்றி,எந்தவிதக் குற்றவுணர்வுமின்றி, கொஞ்சம்கூட வெட்கமின்றி எங்கள் எழுத்தாளர்கள் பலரின் பேனாக்கள் தங்கள் குழந்தைகளின் குரல்வளையை நெரித்த கொலைகாரர்களின் குரலாய்ப் பேசுகின்றன... தம் உறவுகளின் மேல் நிகழ்த்தப்பட்ட மிகப் பெரும் இனப்படுகொலையை, தம் சகோதரிகளின் மேல் நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்முறைகளை, எமது மக்கள் சொல்லவே வாய் கூசும் எத்தனையோ உண்மைகளை தங்கள் குழந்தைகளின் புதைகுழிகளின்மேல் நின்றபடி நியாயப்படுத்துகின்றன... வெட்கமற்ற உங்கள் எழுத்துக்கள் இந்த உலகில் இன்னும் விற்றுத் தீர்ந்துகொண்டிருப்பதுதான் செத்துப்போன எம் குழந்தைகளை இன்னுமொருமுறை சாகடிக்கிறது, புதைக்கப்பட்ட என்னினத்தை மீண்டுமொருமுறை புதைக்கிறது....

பாடல்களையும், ஆடல்களையும், திரைப் படங்களையும் எட்டுக்கோடி தமிழர்களின் ஊடகங்கள் ஒளிபரப்பிக்கொண்டிருக்க தெருக் கோடிகளில் நின்றபடி எங்கள் கண்ணீரைப் பதிவுசெய்ய நாங்கள் எப்பொழுதும் சில வெள்ளைமனிதர்களின் ஊடகங்களை தேடிப் போகவேண்டியிருக்கிறது.... எங்கள் குழந்தைகளின் ஓலங்கள், எங்கள் சகோதரிகளின் கண்ணீர்கள்,எங்கள் அண்ணண்களின் கண்களில் தெரிந்த இயலாமைகள், ஏக்கம்கள், மரணத்தின் நிழல்கள் என எங்கள் அவலம்கள் எல்லாம் நல்லிதயம் படைத்த பல வெள்ளையின மனிதர்களின் பேனாக்களில் இருந்து இன்றும் இரத்தமாய்க் கசிந்துகொண்டிருக்கின்றன...

**என் இனத்தின் துயரங்களை தீர்க்க முடியாத ஏக்கத்துடனேயே என் உயிர் ஒரு நாள் நின்று போகலாம்... அப்பொழுதும் தூங்காத என் ஆன்மா என் தாய்மண்ணில் அலைந்து கொண்டிருக்கும்.... என் கல்லறையைத் தாண்டிச் செல்லும் காற்று ஒரு நாள் என் காதில் என் இனத்துக்கு நீதிகிடைத்த சேதி உரைத்துச் செல்லும்...**

எங்கள் குழந்தைகள் சிந்திய இரத்தத்தை சுவைத்தபடி இரக்கமின்றி எழுதிக் கொண்டிருக்கும் என் இனத்தில் தவறிப்பிறந்தவர்களே... உங்கள் மரணம் எழுதப்படும் கடைசி நாளில், நீங்கள் எழுதியவைகள் மரண வேதனையாக உங்களை சூழ்ந்துகொள்ளும் ஒரு நாளில், எங்கள் குழந்தைகளின் கண்ணீரை எதிர்கொள்ளமுடியாமல் கூனிக் குறுகிப் போய் நிற்பீர்கள்... ஒரு பெரும் தரித்திரமாகவே வரலாற்றில் உங்கள் இருப்பு எழுதப்படும்...

முள்ளிவாய்க்காலுடன் என் இனம் நிம்மதியான தூக்கம் இழந்து மூன்று வருடங்கள் ஆகிவிட்டன...எப்பொழுதும் காதோரங்களில் கேட்டுக்கொண்டிருக்கும் ஓலங்களுடனேயே ஆரம்பிக்கின்றன எங்கள் நாட்கள்..தலையணையின் அடியில் தலையை இழந்த சர்மிலா எப்பொழுதும் என்னுடன் பேசிக்கொண்டே இருக்கிறாள்... அகிலாவின் அழுகை ஒலி என் படுக்கை எங்கும் நிரம்பிக்கிடக்கிறது...

*(தொடர்ச்சி 28ம் பக்கம்)*



# பிரித்தானிய மகாராணியின் முடிக்குரிய வைரவிழா



அடாது மழை பெய்தாலும் ஒரு அங்குலமாவது விடாமல் தேம்ஸ் நதியின் இரு மருங்கிலும் ஆயிரக்கணக்கில் கூடிநின்ற மக்களின் கண் இமைக்காத காட்சி, கடந்த 3 ஆம் திகதி ஐக்கிய இராச்சியத்தின் மகாராணி இரண்டாவது எலிசபெத் அவர்களின் வைர விழா கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக அமைந்தது தேம்ஸ் நதியின் அலங்கார பவனியாக ஒழுங்கு செய்யப்பட்ட ஆயிரம் படகுகளின் ஊர்வலம் கண்கொள்ளாக் காட்சியாக மிளிர்ந்ததை பி.பி.சி.யின் சனல் 1 தத்ரூபமாக இம்மியளவும் இடைவிடாமல் ஒளிபரப்பில் காட்சிகளைப் பார்த்தவர்கள் பிரமித்திருப்பார்கள்.

அங்கு நடந்த காட்சிகளைக் கண்டுகளிக்க முதல்நாள் இரவிரவாக இடம்பிடித்த மக்களில், அனேகர் வயதில் முதிர்ந்தவர்களாக இருந்து மகாராணி எலிசபெத் மீது அவர்கள் கொண்ட அளப்பரிய அன்பையும் விசுவாசத்தையும் பறை சாற்றி நின்றது. இரவில் தங்குவதற்கு எதுவித வசதிகளும் இல்லாத தெருவோரங்களில் படுத்துதங்க தற்காலிக கூடாரங்களும் உண்பதற்கும், உறக்குவதற்கும் மழையில் நனைந்துவிடாமல் உடலைப்பாதுகாப்பதற்கு போர்வைகளையும் தம்முடன் வைத்திருந்த காட்சி மனதை சிலிர்க்க வைத்தது.

மகாராணியும் அவரது குடும்பத்தினரும் பவனிவந்த றோயல் பார்ஜ் (royal barge) தனது சேவைக்காலம் கழிந்துவிட்ட நிலையில் ஸ்கொட்லாந்தில் தூங்கில் கிடந்தபோது தூசிதட்டி புனரமைக்கப்பட்டு வர்ணம் தீட்டி புதுப்பொலிவுடன் அலங்காரப்பவனியில் கலந்து கொண்டது அத்தனை அழகு

பட்டர்சி என்ற பலத்தருகே ஆரம்பிக்கப்பட்ட இந்தப்பவனி 7 மைல் தூரம் தேம்ஸ்நதியில் 4 நொட்ஸ் வேகத்தில் ஆற அமர 1000 படகுகள் பின்தொடர ஆடி அசைந்து நகர்ந்த காட்சியைநேரில்நேரில்காணக்கொடுத்துவைத்தவர்கள் 1 கோடி மக்களாகவும் பலகோடி மக்கள் தொலைக்காட்சி அலைவரிசையில் கண்டுகளித்திருப்பதாகவும் தகவல்கள் கிடைத்தன.

1952 தொடக்கம் 2012 ஆம் ஆண்டு வரை முடிக்குரிய அரசியாகவும் இரண்டாவது எலிசபெத் மகாராணியாரிடம் மக்கள் வைத்துள் ள அன்பும் விசுவாசமும் இந்த ஜனநாயக யுகத்தில் எதிர்பாராத சரித்திரப் பதிவேடு 86 வயது நிரம்பிய மகாராணியார் இன்னும் பல ஆண்டுகள் வாழவேண்டுமென்பதே பிரித்தானிய குடிமக்களின் தணியாத ஆசையாக இருப்பதை கொட்டும் மழையில் நனைந்தும், நனையாமலும் கையசைத்து குரல் எழுப்பி வாழ்த்து தெரிவித்தமை நல்லதோர் சான்று நாமும் வாழ்த்துவோம்.

## கருமையான சொக்கலேட்டுகள்

கரும்புதிண்ணக்கைக்கூலியா?என்பதுவழக்கில்உள்ளபேச்சு அதேபோலசொக்கலேட்சாப்பிட எவருக்கும் கசக்குமோ? ஆனால் கருமையான சொக்கலோட் (dark chocoloate) சிறிதளவில் கசக்கத்தான் செய்யும் ஏனெனில் இதில் கலந்துள்ள 60 விகித சொக்கலேட் விதைகளின் கொட்டியானஊட்டச்சத்துஅடங்கியிருக்கின்றது.

இந்த ஊட்டச்சத்தில் நிரம்பியுள்ள மருத்துவ நிவாரணி இதயம் சம்பந்தப்பட்ட சகல நோய்கள் அணுகாமலும் பாதிப்புகளை உண்டாக்காமலும் பாதுகாப்பதாக பத்து வருடங்களாக மேற்கொண்ட ஆராய்ச்சிகளிலிருந்து நிரூபிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா நாட்டின் மெல்போர்ன் நகரை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் 10 வருடங்களாகத் தொடர்ந்து ஈடுபட்ட பரிசோதனையில் 2013 ஆட்கள் பங்கு பற்றினர். இவர்கள் அனைவரும் உயர் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களாகவும் உயிர் ஆபத்து நிறைந்த இதய நோய்களினால் பீடிக்கப்பட்டவர்களாகவும் பரிசோதனைகள் ஆரம்பிக்க முன்னர் காணப்பட்டனர்.

**தகவல் களஞ்சியம்**

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

தினமும் கருமையான சொக்கலேட் ஒன்றை சாப்பிட்டு வந்த இவர்களில் 10 வருடங்களின் பின் பரிசோதித்த போது 10,000 எண்ணிக்கை விகிதாசாரப்படி உயிர் ஆபத்தில்லாத 70 நோயாளர்களும் 15 உயிர் ஆபத்து நிறைந்தவர்களும் பாதுகாக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

கருமையான சொக்கலேட்களில் நிறைந்துள்ள favaourid எனப்படும் நோய் தடுப்பு நிவாரணி இருதய நோய்களை எதிர்க்கவும் உடலில் உண்டாகும் வீக்கத்தின் எதிர்ப்பு சக்தியாகவும் பயன்படும் வல்லமை கொண்டதாக இருப்பதை ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இத்தகைய ஊட்டச்சத்து வெள்ளை நிற சொக்கலேட் வகைகளிலும் இருக்குமோ என்ற சந்தேகத்தின் நிமித்தம் ஆராய்ச்சிகள் தொடர்ந்தாலும் இதன் உண்மைத் தன்மையை இன்னமும் ஊர்ஜிதம் செய்ய முடியவில்லையென ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தினமும் கருமையான சொக்கலேட் சாப்பிடும் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு உத்தேசமாக 42 அமெரிக்க டொலர்கள் மட்டுமே செலவாகுமென கணக்கிட்ட ஆய்வாளர்கள் ஆபத்து நிறைந்த இருதய நோய்களினின்று பாதுகாக்கும் அரிய மருத்துவ நிவாரணிக்கு செலவு செய்ய கசக்கவா செய்யும்.

இனிப்பான சொக்கலேட்டை சாப்பிட்டுப் பழகியவர்களுக்கு கசப்பான கருமையான சொக்கலேட்டை தினமும் சாப்பிடச் சொன்னால் சிலருக்கு பிடிக்காமல் போகலாம். ஆனால் மலிவான விலையில் நிறைவாக் கிடைக்கும் மருத்துவநிவாரணியாக கருஞ்சொக்கலேட்டை யார்தான் வெறுப்பார்கள். இதய நோய்களை வருமுன் காக்க தினமும் ஒரு கருஞ் சொக்கலேட்டை சாப்பிட பழகிக் கொள்வோம்.

## விஷக் கிருமிகள்

கோடை வெயில் மெல்ல மெல்ல தலைகாட்டத் தொடங்கிவிட்டது. பாடசாலை விடுமுறை நாட்களை பிள்ளைகளோடு குதூகலிக்க கடற்கரை மணலைவிட வேறு சுகமான இடம் எதுவாகவிருக்கும்? எல்லாம் சரிதான். அது ஏன் சில நாட்களில் கடற்கரைகள் சில மூடப்பட்டுக் கிடக்கின்றன. அதுவும் கடும் மழை பெய்த கையோடு கடலில் நீந்தி விளையாடுவதற்கும் தடை விதிக்கப்படுகின்றன.

மழை வெள்ளத்தால் கழுவி வரப்படும் சாக்கடை நீர் மற்றும் தொற்றக்கூடிய கிருமிகள் கடலின் ஆழமில்லாத பகுதிகளில் கலக்கப்படுவதால் சுகாதாரத்துக்கு கெடுதல் விளைவிக்கும் என அஞ்சியே பிரபல கடற்கரைகள் மூடப்படுவதாக அறிகிறோம்.

கடற்கரை நீரை மட்டும் பரிசோதித்து நடவடிக்கைகள் எடுக்கும் சுகாதாரப் பணியாளர்கள் கடற்கரையில் பரவிக்கிடக்கும் மணலையும் பரிசோதிக்க வேண்டுமென எலிசபெத் ஷாலிடே என்பவரும்றெபேக்காகாள்றஎனப்படும்ஆராய்ச்சி மாணவர்கள் 2011ஆம் ஆண்டு தமது அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர். இவர்களுடைய ஆராய்ச்சியின் அறிக்கையின்படி மலக்கிருமிகள் கடற்கரை மண்ணில் பரவி இருப்பதோடு மட்டுமல்லாமல் விரைந்து வளரக்கூடியதாகவும் இருப்பதாக தெளிவுபடுத்தியுள்ளனர். இக்கிருமிகள் எவ்வளவு நாட்களுக்கு உயிர் பிழைக்குமென்ற உண்மையை இதுவரை அறிய முடியாது போனாலும் இவற்றினால் ஏற்படும் தீமை அபாயகரமானது.

கடற்கரையில் படுத்துறவங்கவோ, இருந்துகளைப்பாறவோ ஒரு விரிப்பு போதுமென்ற எண்ணத்தை மறந்து கடற்கரையைவிட்டு அகல முன்னர் ஆங்காங்கு காணப்படும் நன்னீர் குளிப்பறைகளில் நன்றாக உடலைச் சுத்தம் செய்து கடற்கரை கிருமிகளை வீட்டுக்கு எடுத்துச் செல்லாமல் தவிர்ப்பது சுகாதார விழிப்புணர்வாகும்.







Bringing
Great food
to
Life...
Niru BRAND
FALUDA
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk



# தொடரும் யூரோ நெருக்கடியும் உலகப் பொருளாதார பிரச்சனையும்

**வேல் தர்மா**
*(ஒரு பேப்பருக்காக)*

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பது உண்மைதான். ஆனால் ஒன்றாகத் திரளும் அடம்பன் கொடிகள் ஓரளவிற்காவது சமபலத்துடன் இருக்க வேண்டும். அவை வேறு வேறு பலமுடையவைகளாக இருந்தால் பலமுள்ளகொடிதாங்கக் கூடிய இழுப்பு விசைக்குபலம் குறைந்தகொடிகள் தாங்கமுடியாமல் அறுந்து போகும். யூரோ நாணயக் கட்டமைப்பில் ஒன்றிணைந்த நாடுகளுக்கும் இது பொருந்தும்.

இருபத்தியேழு நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் பதினொருநாடுகள் 1999ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி ஒன்றிணைந்து தமது நாடுகளை யூரோநாணயக் கட்டமைப்புக்குள் கொண்டு வந்தன. பின்னர் மேலும் ஆறு நாடுகள் அதில் இணைந்தன. ஒஸ்றியா, பெல்ஜியம், சைப்பிரஸ், எஸ்ரோனியா, பின்லாந்து, பிரான்சு, ஜேர்மனி, கிரேக்கம், அயர்லாந்து, இத்தாலி,லக்சம்பேர்க், மோல்டா, நெதர்லாந்து, போர்த்துக்கல், சுலோவேக்கியா, சுலொவெனியா, ஸ்பெயின் ஆகியவை அந்நாடுகளாகும்.

இந்தநாணயக் கட்டமைப்பில் இல்லாவிடிலும் அண்டோரா, கொசோவா, மொன்றினிக்ரொ, மொனக்கோ, சன் மரினோ ஆகிய நாடுகளும் தங்கள் நாடுகளின் நாணயங்களாக யூரோவைக் கொண்டுள்ளன. லித்துவேனியா, லத்வியா ஆகிய நாடுகள் யூரோ நாணயக் கட்டமைப்பில் இன்னும் ஓரிருஆண்டுகளில் இணையவிருக்கின்றன. 330 மில்லியனிற்கும் மேற்பட்ட மக்கள் இப்போது யூரோ நாணயத்தை தமது தேசியநாணயமாக கொண்டுள்ளனர்.

### மக்கள் தொகையே பலம் தரும்.

ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் ஆகியநாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்குஅங்குள்ளமக்கள் தொகைபெரிதும் உதவின. உள்நாட்டில் நல்ல பலமிக்க சந்தையக் கொண்ட நாடுகளே பொருளாதரத்தில் மேல் ஓங்க முடியும் என்ற உண்மையைப் பலநாடுகள் உணர்ந்துகொண்டன. ஒருஉற்பத்திநிறுவனம் தனது உற்பதிகளை உள்நாட்டில் சந்தைப்படுத்தி போதிய இலாபத்தைப் பெறமுடியுமானால் அந்தநிறுவனம் குறைந்தவிலையில் பன்னாட்டுச் சந்தையில் மற்றையநாடுகளுடன் போட்டிபோட்டுக் கொண்டு தனது உற்பத்தியைச் சந்தைப்படுத்தமுடியும்.

இந்தவகையில்தான் ஜப்பானின் பலநிறுவங்கள் தங்கள் உற்பத்திகளை உலகச் சந்தையில் வெற்றிகரமாக விற்பனை செய்தன. இதனால் அதன் பொருளாதாரம் பெரும் வளர்ச்சி கண்டு அது ஒரு பொருளாதார வல்லரசானது. அடுத்த பொருளாதார வல்லரசுகளாக சீனாவும் இந்தியாவும் உருவாகும் எனக் கூறப்படுவதற்கு அவற்றின் மக்கள் தொகையே காரணம். குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட சிறிய நாடுகளான ஐரோப்பிய நாடுகளிற்கு தாம் பொருளாதாரத்தில் பின் தங்கிவிடுவோம் என்ற பயம் எழுபதுகளின் ஆரம்பத்திலேயே ஏற்பட்டுவிட்டது. இதன் விளைவுதான் ஐரோப்பிய ஒன்றியத்தின் உருவாக்கம்.

### பெரியண்ணா ஜேர்மனி

யூரோ நாணயநாடுகள் ஐரோப்பிய ஒன்றியத்தின் மத்திய வங்கியான ஐரோப்பிய மத்திய வங்கியின் நிபந்தனைகளுக்கு அமைய தமது நாட்டின் நிதிக் கொள்கையை வகுக்கவேண்டும். ரோநாணயநாடுகள் தமது அரசகடன், அரசசெலவீனம், பணவீக்கம் போன்றவற்றை யூரோ நாணயக் கட்டமைப்பின் நிபந்தனைகளுக்கு அமைய நிர்வகிக்கவேண்டும். ஆனால் இந்த அரச நிதிநிர்வாக நிபந்தனைகளை விதிப்பதிலும் கட்டுப்படுத்துவதிலும் ஜெர்மனி அதிக செல்வாக்கு வகிக்கிறது. ஒரு நாட்டுக்குப் பொருளாதார நெருக்கடி ஏற்படும் போது அந்நாடு தனது நாணய மாற்றுவீதத்தையும் வங்கிக் கடன் வட்டிவீதத்தையும் பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றியமைக்கும். கிரேக்கம் 17 நாடுகளைக் கொண்ட யூரோ கட்டமைப்பில் இருப்பதனால் அப்படிப்பட்ட நடவடிக்கைகளைச் செய்ய முடியாது. ஜேர்மனியின் பொருளாதார நிலைமைக்கு ஏற்பவே நிர்ணயிக்கப் படுவதாக குற்றச் சாட்டு உண்டு. யூரோ நாணயக் கட்டமைப்பில் இருக்கும் நாடு தனது கடன் பளு பணவீக்கம் போன்றவற்றை சில வரையறைகளுக்குள் வைத்திருக்க வேண்டும். இதனால் கிரேக்கம் யூரோ நாணயக் கட்டமைப்பில் இருந்து விலக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் எழுந்தன. கிரேக்கம் அப்படிவிலக்கப்படுமிடத்து அது பலத்த நெருக்கடியைச் சந்திக்கும். அந்த நெருக்கடி மற்ற நாடுகளுக்கும் பரவும்.

இதனால் கிரேக்கமும் யூரோ நாணயக் கட்டமைப்பில் இருந்துவிலகவிரும்பவில்லை. மற்றநாடுகளும் கிரேக்கம் விரும்புவதை விரும்பவில்லை. செய்தி நிறுவனமொன்று 19 பொருளியல் நிபுணர்களிடையே நடாத்திய கருத்துக் கணிப்பில் மூவர் மட்டுமே கிரேக்கம் யூரோ நாணயக் கட்டைமைப்பில் இருந்து விலக வேண்டும் என்று கருதுகின்றனர். ஐரோப்பிய நாணயக்கட்டமைப்பு மருத்துவமனையில் கிரேக்கமும் ஸ்பெயினும் இப்போதும் தீவிர சிகிச்சைப் பிரிவிலேயே இருக்கின்றன. யூரோ நாணயத்தால் பாதிக்கப்பட்ட மற்ற நாடுகளான அயர்லாந்து, போர்த்துகேயம், இத்தாலி ஆகிய நாடுகள் பூரண சுகமடைய முன்னரே மருத்துவமனையில் இருந்து விலகி விட்டன.

### பிரித்தானியாவும் திருக்குறளும் யூரோவும்

யூரோ நாணயக் கட்டமைப்புஆரம்பிக்கப்பட்டபோது பிரித்தானியா அதில் இணையமாட்டேன் என்று அறிவித்தது. இதனால் பிரித்தானியா பெரும் இழப்புக்களைச் சந்திக்கப் போகிறதுஎன்று சில பொருளாதாரவல்லுனர்..

*(தொடர்ச்சி 26ம் பக்கம்)*

# அறிவியல் தகவல்கள்

**சி.மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*

### நீலவானம் !

முகில் இல்லாத சமயங்களில் நாம் வானத்தை அண்ணாந்து பார்த்தால் அங்கு தென்படும் நீல வானம் எம் கண்களை மட்டுமா கவர்கிறது, எம் உள்ளத்தையும் சேர்த்து அல்லவா கவர்கிறது. அதுவும் கடற்கரையில் நின்று பார்ப்போமானால் நீலக் கடலின் பிம்பம்தான் அந்த நீலநிறம் என்ற மாயயை அல்லவா தோற்றுவிக்கிறது.

அளப்பரிய ஆற்றல் அலைகள் ஒன்பது கோடி மைல்களுக்கு அப்பால் கதிரவனிடமிருந்து ஒவ்வொரு வினாடியும் வெளிவந்தாலும், ஒளியும் வெப்பமுமே எமக்கு அவற்றை உணர்த்துகின்றன. பார்வைக்கு அவ் ஒளிக் கற்றைகள் வெள்ளையாகத் தென்படுவதால் அவற்றுள் அடங்கியிருக்கும் அழகிய நிறங்களை நாம் காண்பதில்லை. எமக்கு அறிமுகமான வானவில்லில் காணப்படும் ஏழு நிறங்கள்தான் அங்கு ஒன்றாகச் சேர்ந்து வெண்மையாகக் காட்சி தருகின்றன. கதிரவனில் இருந்து வரும் மின்காந்த அலைகளை நாம் கண்ணுக்குப் புலப்படும் அலைகள், கண்ணுக்குப் புலப்படாத அலைகள் என்று இரண்டாகப் பிரிக்கும் போதுதான் உணர்வோம் மொத்த அலைகளின் மிகவும் சிறிய பகுதிதான் இந்தக் கண்ணுக்குப் புலப்படும் ஏழு நிற அலைகளும் என்பதை.

இம் மின்காந்த அலைகள் நீளத்தில் ஒன்றுக்கொன்று பாரிய வித்தியாசம் கொண்டவை. ஆகச் சிறிய அலைநீளம் கொண்ட காமாக் கதிர்களைப்போல் ஆயிரம்கோடி மடங்கு நீளம் கூடிய அலைகளும் உண்டு. எடுத்துக் காட்டிற்கு வானொலி அலைகளைக் கூறலாம். அலைகளின் நீளத்திற்கும் அவற்றின் வீரியத்திற்கும் சம்பந்தம் உண்டு. நீங்கள் வானொலி கேட்கும்போது சிற்றலை மத்திய அலை என்னும் பதங்கள் உங்கள் செவிகளில் விழும். தூர இடங்களுக்கு அனுப்ப நீளம் குறைந்த சிற்றலைகள் பயன்படுத்தப் படுவதை அறிவீர்கள். அலை நீளம் குறுகக் குறுக அதன் வீரியம் அல்லது துடிப்பு கூடிக்கொண்டே போகும். காமாக் கதிர்கள் வீரியம் கூடியவையாக இருப்பதற்கு அவற்றின் குறுகிய நீளமே காரணம்.

மின்காந்த அலைகளின் நீளத்தில் காணப்படும் பாரிய வேறுபாடு காரணமாக அவற்றின் நீளத்தைக் குறிக்கும் அலகுகளும் வேறுபடும். நீளம் கூடிய வானொலி அலைகளை அளக்க நாம் மீற்றரைப் பயன்படுத்தலாம். ஆனால் அவைபோல் ஆயிரம்கோடி மடங்கு சிறிய அலைகளை அளக்க என்ன அலகைப் பயன்படுத்தலாம் என்று பார்ப்போம்.

ஒரு மீற்றரின் ஆயிரத்தில் ஒரு பங்கை மில்லி மீற்றர் என்போம். ஒரு மில்லி மீற்றரின் ஆயிரத்தில் ஒரு பங்கை மைக்ரோ மீற்றர் என்போம். எமது கண்ணுக்கு புலப்படும் ஏழு நிற அலைகளையும் அளப்பதற்கு மைக்ரோ மீற்ரர் அலகு கூடப் போதாது. மைக்ரோ மீற்ரரின் ஆயிரத்தில் ஒரு பங்கான நனோ மீற்றரே கண்ணுக்குப் புலப்படும் அலைகளின் நீளத்தைகக் குறிக்கப் பயன்படுத்தப் படுகிறது. ஒரு மீற்றரின் 100 கோடியில் ஒரு பங்குதான் ஒரு நனோ மீற்றர் என்பதை நான் மும்முறை ஆயிரம் சொன்னதிலிருந்து கணித்திருப்பீர்கள். சில வேளைகளில் அடுத்த அலகான பைகோகூட காமாக் கதிர்கள் விடயத்தில் பயன்படுத்தப் படுவதுண்டு.

மொத்த மின்காந்த அலைகளையுமே வரிசைப் படுத்துவோமானால் முதல் வரிசையில் வருபவை காமாக் கதிர்கள். அடுத்து எக்ஸ் அடுத்து புறஊதா. நான்காவது வரிசைக்குள் அடங்குபவைதான் எமது கண்களுக்குப் புலப்படும் சிறு தொகுதி. மேலும் மூன்று பிரிவுகள் உண்டு. அவை முறையே அகச்சிவப்பு, மைக்குரொ, வானொலி ஆகியவை. கண்ணுக்குப் புலப்படும் ஏழு அலைகளிலும் 400 நனோ மீற்றர் நீளம் கொண்ட உதாவில் ஆரம்பித்து 700 நனோ வரை நீண்ட சிவப்புக் கதிர்களில் முடியும்.

வளி மண்டலத்தால் உறஞ்சப்பட்டும் சிதறப்பட்டும் வளி மண்டலம் முழுவதும் வியாபித்தருக்கும் நீல நிறக் கதிகளால்தான் கடலும் வானும் நீலமாகக் காட்சி தருகின்றன. இந்த நீல நிறம் ஒரு சீராக இருந்தாலும் உற்று அவதானிப்பீர்களானால் நடு வானிலும் பார்க்க கீழ் வானம் சற்று குறைந்த நீலமாகவே தென்படும்.

அந்தியில் பல்லாயிரம் மைல்கள் நீளமான வளிமண்டலம் ஊடாக வரும் போது உறிஞ்சல் சிதறல் எல்லாவற்றையும் தாண்டி சிவப்புக்கதிர்கள் வருவதால்தான் கீழ்வானம் சிவந்து காணப்படுகின்றது.




We offer our clients expert and focused legal advice, quality, care and efficiency

- Residential Property and commercial property (WE CAN ACT FOR ALL THE LENDERS)
- Immigration
- Intellectual Property
- Company law
- Landlord and Tenant
- Outsourcing Law
- Power of Attorney
- Partnershiip Law




KTS LEGAL Solicitors & Advocates
KTS Legal Solicitors & Advocates
Tel:020 8367 0505 | Fax:020 8367 0404
Nicholos House, 12 River Front, Enfield, EN1 3TF
Email: info@ktslegal.co.uk | Web:www.ktslegal.co.uk

# தமிழீழ தேசிய கொடி

## தமிழ் மக்களின் எழுச்சியின் அடையாளச் சின்னம்!!

சங்கிலி மன்னன் யாழ்.இராட்சியத்தை நந்திக் கொடியுடனும், வன்னி மன்னன் பண்டார வன்னியன் வாளும் கேடயமும் கொண்ட கொடியுடனும் அரசாண்டு அந்நியரிடம் போராடி எமது இறைமையை இழந்தார்கள் அத்துடன் கொடியையும் இழந்தார்கள்.

தாய்த் தமிழகத்தில் சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் முறையே அம்பு-வில்லு, புலி, மீன் கொடிகளுடன் அரசாண்டார்கள். தமிழர் வரலாற்றில் சோழர் ஆட்சி வலிமைமிக்க கப்பற்படையுடன் அகன்ற சாம்ராச்சியத்தை கொண்டிருந்தது. அதுவே தமிழரின் பொற்காலமாக போற்றப்படுகிறது. அவர்களின் புலி சின்னம் பண்டைய தமிழரின் வீர மரபை சுட்டிக்காட்டி நிற்கின்றது. அதுவே ஈழத்தமிழரின் தேசிய எழுச்சியைக் குறிக்கும் விடுதலைப் புலிகளின் சின்னமாக அமைந்தது.

கள்ளத் தோணியாக இலங்கைத் தீவுக்கு வந்த விஜயனின் கொடியே சிங்கக் கொடி அதுவே இலங்கையின் தேசியக் கொடியானது. வாள் ஏந்திய சிங்கக் கொடி எமது தேசியக் கொடியல்ல. எமது விருப்பம் இல்லாமல் எமது பங்கு இல்லாது இலங்கையின் தேசியக்கொடி வடிவமைக்கப்பட்டது. 1948ஆம் ஆண்டு சிங்கக் கொடி ஏற்றியபோது தந்தை செல்வா அதனைப் புறக்கணித்தார். 1957ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை துக்கநாளாக முழு தமிழ் மக்களும் கொண்டாடினார். அன்று திருமலையில் மணிக்கூண்டு கோபுரத்தில் பறந்த சிங்கக் கொடியை இறக்கி கறுப்புக் கொடியை ஏற்றிய திருமலை நடராசன் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். அதே திருமலையில் 1978ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்புக்கு எதிர்ப்புகாட்டி இந்துக் கல்லூரியில் ஏற்றிய சிங்கக் கொடியை எரிய வைத்தார் லெப்டினன் கேணல் சீலன்.

எமது தேசியக் கொடியில் மூன்று நிறங்கள் உள்ளன. மஞ்சள், சிகப்பு, கறுப்பு தமிழ் மக்களுக்கு ஒரு தாயகம் உண்டு. அந்த தாயகம் அவர்களது சொத்துரிமை. தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்பதால் அவர்களுக்கு தன்னாட்சி உரிமை உண்டு. இந்த தன்னாட்சி உரிமை அவர்களின் அடிப்படை அரசியல் உரிமை. தமது தாயகத்தை மீட்டெடுத்து தன்னாட்சி உரிமையை நிலைநாட்டுவதற்கு தமிழீழ மக்கள் மேற்கொண்டுள்ள தேசிய விடுதலை போராட்டம் அறத்தின் பாற்பட்டது. மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை மஞ்சள் நிறம் சுட்டி நிற்கின்றது. தேசிய சுதந்திரம் பெற்று தமிழீழ தனியரசை அமைத்து விட்டால் போல நாம் முழுமையாக விடுதலை பெற்றதாக கொள்ள முடியாது. தமிழீழ சமுதாயத்திலுள்ள ஏற்ற தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும். இதற்கு சமுதாய அமைப்பில் புரட்சிகர மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும். சமத்துவமும், சமதர்மமும், சமூகத்திலும் நிலை நாட்டப்பட வேண்டும். இப்படியான புரட்சிகரமான சமுதாய மாற்றத்தை வேண்டி எமது அரசியல் இலட்சியத்தை சிகப்பு நிறம் குறியீடு செய்கிறது.

விடுதலை பாதை கரடு முரடானது. சாவும், அழிவும், தாங்கொணார்த்துன்பங்களும் நிறைந்தது. இத்தனையும் தாங்கிக் கொள் இரும்பு போன்ற இதயம் வேண்டும் என்பதையும் கறுப்பு நிறம் குறித்து காட்டுகின்றது.

1977ஆம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கொடியாக இருந்து வரும் புலிக் கொடியிலுள்ள எழுத்துக்கள் நீக்கப்பட்டு தமிழ் ஈழத்தின் தேசியக் கொடியாக 1990 ஆம் ஆண்டு மாவீரர் நாளிலிருந்து (27-11-1990) தமிழீழத்தின் தேசிய கொடியாக மேதகு வே.பிரபாகரன் அவர்களால் அறிவிக்கப்பட்டு அன்று முதல் எமது தேசிய கொடியாக இருந்து வருகிறது. சுமார் 30 வருடங்களுக்கு மேலாக போராடி மடிந்த 30 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்களின் இழப்புகளின் ஊடாகவும் இலட்சக் கணக்கான பொதுமக்களின் உயிர், உடமை இழப்புகளின் ஊடாகவும் தமிழ் மக்களின் போராட்ட நியாயம் வெளி உலகத்துக்கு உணர்த்தப்பட்டது. அவர்களின் அந்த உறுதியான இலட்சிய பயணத்தின் ஊடாகத் தான் ஈழத்தமிழன் ஒவ்வொருவனுக்கும் உலகின் எந்த மூலையிலும் ஒரு அடையாளம் கிடைத்தது.

பிரித்தானியாவில் தமிழீழ தேசிய கொடிக்கு தடை இல்லை என்பது சட்ட ரீதியான உண்மை. அத்துடன் அண்மையில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி (PFLT) ஓர் அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டு தமிழ் மக்களிடையே தமது வேலைத்திட்டங்களுடன் பிரித்தானியாவில் ஜனநாயக முறையில் இந்நாட்டு சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு செயலாற்றி கொண்டு வருகிறார்கள். அவர்களின் சின்னமும் புலியாகவே உள்ளது.

விடுதலைப்புலிகள் வானத்தில் இருந்து குதித்தவர்கள் அல்லர், மக்களோடு, மக்களுக்காகவே எழுந்த எரிமலைகள் புரட்சி பூக்கள். ஆகவே மக்கள் வேறு புலிகள் வேறு அல்ல. முள்ளிவாய்க்கால் முடிவு அல்ல. அது ஒரு திருப்பு முனை. எமது இலக்கினை அடையும் வரை தமிழ் மக்களின் போராட்டம் தொடரும். யாருக்காகவும் எமது அடையாளங்களை நாம் இழக்கதயாரில்லை. சிங்கள உளவாளிகளின் கைப்பிடியிலுள்ள தொலைக்காட்சிகளும், இணையங்களும், எமது தேசியக் கொடியை விவாதப் பொருளாக்கி, இழிவுபடுத்தி, கேவலப்படுத்துகிறார்கள். சிங்களத்துடன் கைகோர்த்து கொண்டுஎமது தேசியகொடியை விமர்சிக்கும் செயலை எந்த இனமானமுள்ள தமிழனும் பொறுத்துக் கொள்ள மாட்டான்.

தேசியக் கொடிக்கு எதிரான பதர்கள் பின்வரும் கருத்துகளை கூறுகிறார்கள்.

- பல நாடுகளில் தடை செய்யப்பட்ட புலிகள், அவர்கள் கொடியுடன் சென்றால் அந்த நாடுகளின் கருணை கிடைக்காது.
- புலிகளின் அடையாளம் இன்றி சர்வதேசத்துடன் மிதவாத போக்குடன் போராட்டம் செய்து எமது உரிமைகளை பெறலாம்.
- தேசியக் கொடி மனதில் இருந்தால் போதும் அதனை அடிப்பெட்டிக்குள் வைத்து விட்டு அது இன்றி சர்வதேசத்துடன் பேச முடியும்.

இப்படி கூறுபவர்கள். நிகழ்வுகளில் திட்டமிட்டு மஞ்சள், சிகப்பு கொடியும் பிரிட்டிஸ் தேசியக் கொடியும் மிக அதிகமாக கைகளில் கொடுப்பார்கள். யாரை திருப்திபடுத்துவதற்காக, யாரின் நிகழ்ச்சி நிரலில் இவர்கள் இயங்குகிறார்கள்? யாருக்காகவும் எமது தேசிய அடையாளங்களை இழப்பதற்கு நாம் தயாரில்லை. இவர்களால் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் நிகழ்வுகளின் தேசியக் கொடிகளையும்தேசியதலைவரின்படங்களையும்கொண்டு வரும் எழுச்சியுள்ள தமிழ் மக்கள் கூட்டத்தை ஒன்றும் செய்ய முடியவில்லை. தமிழீழ நடைமுறை அரசாங்கம் நடந்து கொண்டு இருந்தபோது அங்கு பறந்த எமது தேசியக் கொடியின் கீழ்தான் வெளிநாட்டவர்கள், ராசதந்திரிகள் மற்றும் பிரமுகர்கள் இருந்து கதைத்தனர். அவர்கள் சொல்லவில்லை புலிக்கொடி இருந்தால் கதைக்கமாட்டோம் என்று. தலை குனியும் நிலையிலோ அல்லது தமிழ் தேசியக் கொடியை விலை பேசும் நிலையிலோ தமிழர் இல்லை. தமிழீழ தேசியக் கொடியே எமது அடையாளம். அதுவே எமது மிகப் பெரிய சக்தி. எமக்கு சக்தியை கொடுப்பதற்காக மக்களும் மாவீரர்களும் மிகப்பெரிய விலைகளை கொடுத்தார்கள். எமக்கு எமது தேசிய கொடியும் தேசிய தலைவரும் இரு கண்கள்.

*வல்வை மணிவண்ணன்*

# கோர்த்து விடும் செய்திகள்

### ■ பாயகோத்த மேல் பாய்ந்த பக்சராஜ

இங்கிலாந்தில் இருந்து மீண்டும் தலை தெறிக்க ஓடிய பக்சராஜ இத்தாலியில் இறங்கியதும் முதல் வேலையாக பாயகோத்தாவின் மேல் பாய்ந்தாராம். உன் கேபியின் ஆளுவள் அங்கு லண்டனில் என்ன பண்றாங்க... நாங்க கொடுக்கிற காசில் நல்லாச் சாப்பிட்டுத் தூங்கிறாங்களா? மாவீரர் தினத்தை மட்டும் ரெண்டாக்கினாப் போதுமா என்றாராம். அவங்கட ஊடகங்களுக்கு மட்டும் எவ்வளவு அள்ளிக் கொட்டுறம் என்று ஒரே பாய்ச்சல்.

### ■ ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு

இலங்கையில் உள்ள ஊடகவியலாலர்களுக்கு அச்சுறுத்தல் விட்டு வந்தவர்கள் இப்போது ஐக்கிய நாடுகள் சபையிலும் தங்கள் வாலை ஆட்டத் தொடங்கியுள்ளனர். பான் கீ மூனின் கபடங்களை அம்பலப்படுத்தியும் போர்க் குற்றவாளியாக ஐநா அறிக்கையில் கருதப்படுபவர் ஐநாவில் ஒரு முக்கிய ஆளாக இருப்பதைச் சுட்டிக் காட்டி வரும் இன்னர் சிட்டி பிரஸின் ஊடகவியலாளர் லீ இப்போது ஐநாவில் தடை செய்யப்படும் ஆபத்தை எதிர் நோக்குகிறார்.

### ■ பேந்தும் வாறார் அடிவாங்கித் தாறதுக்கு

இந்தியாவின் சிவ சங்கர் மேனன் இந்த மாத இறுதியில் இலங்கைக்கு செல்கிறார் என்ற செய்தி இப்போது வந்துள்ளது. முன்பு போர் நடந்த போது இவரும் இவரது கூட்டாளி எம் கே நாராயணனும் அடிக்கடி இலங்கை செல்வார்கள். இவர்கள் போர் நிறுத்தம் செய்யும் படி வலியுறுத்தப் போகிறார்கள் என்று ஊடகங்களி செய்தி வெளிவிடப்படும். ஆனால் அவர்கள் தமிழர்களுக்கு எதிரான போரை எப்படி முன்னெடுப்பது அதற்கு எப்படு இந்தியா உதவி செய்வது எப்படி விரைவில் போரை முடிபபது போன்றவற்றை ஆராயவே கொழும்பு செல்வர். இப்போதும் இலங்கையைத் தட்டிக் கேட்கத்தான் மேனன் இலங்கை செல்லவிருக்கிறார் என இந்தியாவின் வால் பிடி ஊடகங்கள் தெரிவித்துள்ளன. தமிழர்களுக்கு எப்படி அள்ளி வைக்கப் போகிறாரோ....இப்போது இந்தியக் கொள்கை வகுப்பாளர்களின் ஒரே நோக்கம் இலங்கையின் வடக்குக் கிழக்கில் வாழும் தமிழர்களும் மலையகத் தமிழர்களைப் போல் அடங்கி இருக்க வேண்டும் என்பதுதான். மேனன் போவது எண்ணெய் குதகுக்குத்தான்.

### ■ தமிழ்த் தொலைக்காட்சி ஒன்றில் நங்கூரம் ஒன்றைக் காணவில்லை

தமிழ்த் தொலைக் காட்சி ஒன்றில் வெளிச்சம் போடுபவர் நான்கு வார விடுமுறையில் இந்தியா சென்றிருந்தார். நாய் பார்த்த வேலையைக் கழுதை பார்த்த மாதிரி அந்த வெளிச்சம் போடும் வேலையை தொலைக்காட்சியின் உயர்(?) அதிகாரி செய்து அதில் மொக்கை போட்டார். விடுமுறையில் போனவர் திரும்பி வந்ததும் சில நேயர்கள் தொலைபேசியில் "நீ இல்லாமல் வெளிச்சம் மங்கி விட்டது அப்பா" என்று சொல்ல இருட்டுப்போல் நிகழ்ச்சியை நடாத்திய அந்த அதிகாரியின் வயித்தெரிச்சலைக் கிளப்ப இப்போது வெளிச்சம் போடுபவரைக் காணவில்லை. இன்றைக்கு வருவார் நாளைக்கு வருவார் என்று கதை விடுகிறார்கள்.

*-ஊருளவாரி*




இலங்கை மற்றும் உலகின் எந்தப் பாகத்திற்கும்
DOOR to DOOR DELIVERY



இலங்கையில் எந்தப் பாகத்திற்கும் வீட்டுக்கு வீடு சேவை

- இலங்கை மற்றும் இந்தியாவிற்கு விசேட விலையில் விமான மார்க்கமாகவும் பொதிகள் அனுப்பப்படும்.

- Vehicle Shipping
- Furniture Shipping
- Express Letter Service
- Packing Service
- Relocation Service
- Man and Van Service
- Packing Materials
- European Parcel Service

DUNN SHIPPING LTD.
020 8842 2020
07949 361 434 - 07949 361 313
info@dunnshipping.co.uk • www.dunnshipping.co.uk

பொருட்கள் பெற்றுக் கொள்ளப்படும் இடங்கள்
• GREENFORD • WIMBLEDON • VAUXHALL • BIRMINGHAM
• STOKE-ON-TRENT • A-LANKA TRAVELS LTD, TOOTING

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தில் குழப்பம் வலுக்கிறது

## அமைச்சர் தயாபரன் மீதான நம்பிக்கை இல்லாப் பிரேரணை

*நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் உருவாக்கப்பட்டதிலிருந்து அதில் குழப்பங்களுக்கு குறைவில்லை. உருவாக்கப்பட்டு இரண்டு வருடங்களை நிறைவு செய்துள்ள நிலையிலும், அதன் உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பகிரங்கக் கடிதம் எழுதுவது, வெளியரங்கில் ஒருவரைப் பற்றி மற்றவர் அவதூறு செய்வது என்பவை தொடர்ந்து வருகிறது. இந்நிலையில் நா.க.த.அ வின் லண்டன் வட கிழக்குப் பகுதிக்கான உறுப்பினர்களில் ஒருவரான திரு. கவிராஜ் சண்முகநாதன் அவர்கள் அரசியல் மற்றும் வெளிவிவகார அமைச்சரான திரு தயாபரன் அவர்கள் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை சமர்ப்பித்துள்ளார். இது தொடர்பாக கவிராஜ் சபாநாயகர் திரு. பொன் பாலராஜனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தயாபரன் மீதான நம்பிக்கையின்மைக்கான காரணத்தை பட்டியலிட்டுள்ளார் அவற்றினை எமது வாசகர்களின் கவனத்திற்காக இங்கு பிரசுரிக்கிறோம்.*

### பிரித்தானிய தமிழர் இடையே பிளவுகளுக்கு காரணமாகிறார்.

பிரித்தானியாவில் நடப்பது இதுதான் இங்கு நாடு கடந்த அரசு ஓர் போட்டிக் கட்சி மட்டுமே. மற்ற அமைப்புகளோடு இனைந்து பணியாற்ற எடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் தவிடு பொடியாக்கிய பெருமை கௌரவ அமைச்சர் தயாபரன் அவர்களையே சாரும். தம்மை ஓர் பேரரசின் வெளிவிவகார அமைச்சராக நினைக்கும் இவர் உண்மையில் நாடு கடந்த அரசை ஓர் பெட்டிக்கடைக் கட்சி ஆக்குகின்றார். நான் நேரடியாகவே சொல்வது பிரித்தானிய தமிழர் பேரவைக்கு எதிராக நாடுகடந்த தமிழீழ அரசை இட்டுச் சென்றவர் திரு . தயாபரன் அவர்கள் நானும், துணைப் பிரதமர் திரு. சேகர் மற்றும் பலர் எடுத்த சமரச முயற்சிகளை தயாபரன் அவர்கள் தடுத்தார். அதற்காக பிரித்தானிய தமிழர் பேரவையினரின் செயற்பாடுகளை நான் வரிக்கு வரி ஆதரிக்கவில்லை. ஆனால் தயாபரன் அவர்களின் குள்ளநரித்தன்மையான அரசியலும் அவரின் அகங்காரமும் ஓர் சுமுக உறவுக்கு பெரும் தடையாகவே இருக்கின்றது. பிரித்தானிய தமிழர் பேரவை, பல பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களின் மனங்களை வென்று வருகின்றது. அவர்கள் பிரித்தானிய அரசின் போக்கில் மாற்றத்தினை ஏற்படுத்த முயல்கிறார்கள் . இவ்வாறிருக்க இந்த பாராளுமன் உறுப்பினர்களை நாடு கடந்த அரசு ஏன் பிரித்தானிய தமிழர் பேரவைக்கு தெரியாமல் பின் கதவின் மூலம் சந்தித்து ஓர் கேவலமான அரசியலை நடாத்த வேண்டும்? அதனை செய்வதில் கௌரவ அமைச்சர் தயாபரன் அவர்கள் மிகவும் பெயர் போனவர். புதிய நண்பர்களை அணி சேர்த்தால் நானும் அவரை போற்ற தயார் ஆனால் மற்றைய அமைப்பினரால் தமிழீழ நண்பர்களாக ஆக்கப்படும் பிரமுகர்களை தம் பக்கம் இழுக்க இவர் நடாத்தும் நாடகம் அசிங்கமானது அருவருப்பானது.

### மே 18 நிகழ்வு

பிரித்தானியாவில் மே 18ம் திகதி நடைபெறும் முள்ளிவாய்க்கால் நிகழ்வை பிரித்தானியா தமிழர் பேரவையினர் நடாத்தி வருகின்றனர். அந்த நிகழ்வை இம்முறை குழப்புவதற்காக ஒரு கும்பல் முயற்சித்தது. அதன் விளைவாக லண்டன் மேயரின் அலுவலகம் அந்த நிகழ்வை மே 19ல் நடக்க அனுமதித்தனர். இவ்வாறு குழப்பத்தினை ஏற்படுத்தும் கும்பலோடு சேர்ந்து நின்று (நாடு கடந்த அரசாங்கம்) ஓர் வங்குரோத்து அரசியல் நடாத்தி வருகின்றது. தமது நிகழ்வுக்கு மக்களை வரத்தூண்டுவதற்காக பிரித்தானிய தமிழர் பேரவை துண்டுப்பிரசுரத்தினை ஒத்த துன்டுப் பிரசுரத்தை கௌரவ அமைச்சர் தயாபரன் அவர்களின் ஆதரவோடு இயங்கும் கும்பல் வெளியிட்டது. அதில் வேடிக்கை என்ன என்றால் அந்த போலி துன்டுப்பிரசுரசுரத்தினை கௌரவ அமைச்சர் தயாபரன் அவர்களின் ஆதரவுடன் இயங்கும் கும்பல் என்னிடமே தந்தது. இவ்வாறு கீழ் மட்ட அரசியல் செய்து, பின்னர் அந்த மேடையில் ஓர் கூச்சமும் இல்லாமல் எமது கௌரவ அமைச்சர் தயாபரன் அவர்கள் ஏறி நின்றதை அறிந்து வெட்கித்தலை குனிகின்றேன்.

### ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மாநாடு.

ஆபிரிக்க காங்கிரஸ் மாநாடுக்கு நாம் செல்ல வேண்டும் அங்கு சென்று எமக்கு சர்வதேச அரங்கில் அங்கிகாரம் கிடைக்க வழிவகைகளை செய்ய வேண்டும் என்ற நல்ல நோக்கோடு உலகத்தமிழர் பேரவையினரால் அங்கு செல்வதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்ட போது அதனை ஏற்றுக் கொள்ளக்கூடிய பக்குவமோ அறிவோ அற்ற ஒருவர் எமது வெளிவிவகார அமைச்சராக இருப்பது பெரிதும் வேதனைக்குரியது. உண்மையில் திரு தயாபரன் அவர்கள் தான் இப்படியான நிகழ்வுகளுக்கு தாமே முன்னின்று செல்ல வேண்டும், அனால் மற்றவர்கள் ஏற்படுத்தி தரும் வாய்ப்புக்களைக்கூட பயன்படுத்த தெரியாத ஓர் அரசியல் கறறுக்குட்டி நமது வெளிவிவகார அமைச்சராக இருப்பது எண்ணி ஆற்றொணாத் துயரும் துன்பமும் அடைகின்றேன் .

எமது கௌரவ அமைச்சர் தயாபரன் அவர்கள் எங்கே இருக்கின்றார், அவரது அமைச்சு எங்கே இருக்கின்றது? கௌரவ அமைச்சர் தயாபரன் அவர்கள் வெளிவிவகார அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் அவர் அந்த அமைச்சின் பணிகள் எவற்றை எல்லாம் செய்தார். எந்த எந்த வெளிவிவகார அமைச்சர்களோடு உறவை வளர்த்தார் என்ற விபரத்தை கௌரவ அமைச்சர் தயாபரன் அவர்கள் இந்த மாமன்றுக்கு தெரியப்படுத்த வேண்டும். ஒரு பிரமுகரைத்தானும் சந்தித்தால் உடனே ஊடகங்களுக்கு புகைப் படத்துடன் அறிக்கை விடும் அமைச்சர் இராசதந்திரக் காரணங்களுக்காக தமது பணி விடயத்தை வெளியிட முடியாது என்று அவர் சொல்வாரானால் அதனை அவை நம்புமென நான் கருதவில்லை.

### GTV இலும் குழப்பம்

நாடு கடந்த அரசுக்கு அவர் என்ன செய்தாரோ இல்லையோ அவருக்கு ஓர் முழு நேர வேலை இன்று கிடைத்து விட்டது. எமது போராட்டங்களுக்கு ஓர் ஊடகவியளாளராக துணை நின்றவர் திரு . தினேஸ். கௌரவ அமைச்சர் தயாபரன் அவர்கள் ஜீரிவியில் இணைந்த பின்னர் அனைவரையும் அணைத்துச் செல்ல நினைத்த திரு . தினேஸ் அவர்களுக்கும் தலை வலி தொடங்கியது. பின்னர் அவரும் GTV ல் இருந்து துரத்தப்பட்டு விட்டார். நாடு கடந்த அரசு முதல் மற்றைய அமைப்புக்களின் பணிகளுக்கு ஓர் ஊடக முகம் கொடுத்தவர் திரு தினேஸ் அவர்கள், அவர் ஆற்றிய பணியை நாம் நன்றியோடு பார்கின்றோம். அவர்களை எதிர்த்து விமர்சனம் செய்தவர்கள் கூட அவரின் திறமையையும் நேர்மையையும் புகழ்வார்கள். அப்படி இருக்க அவர் நடாத்திய வெளிச்சம் நிகழ்சியில் இன்று எமது கௌரவ அமைச்சர் தயாபரன் அவர்கள். அதற்கு அவர் இருட்டு என பெயரிடலாம்.

அமைச்சர் அவர்கள் தாம் ஆற்றும் பணிகள் மூலம் பிரபல்யமாக வேன்டுமே தவிர , ஊடகத்தை கையகப் படுத்தி இன்னொருவரால் பிரபலமாக நிகழ்ச்சிகளில் அமர்ந்துகொண்டு எமது மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிப்பதன் மூலம் பிரபல்யமாக முடியாதென்பதே யதார்த்தம். இதில் என்ன சோகம் என்றால் , என்ன விலை கொடுத்தாவது தயாபரன் அவர்களை நாடு கடந்த அரசில் அமர்த்தி இருக்க வேண்டுமென எமது கௌரவ பிரதமர் அவர்கள் நினைக்கிறார் போலும். நடப்பு வழக்கில் ஒப்பிடுவது என்றால் நித்தியானந்தாவின் பிடியில் சிக்கிய மதுரை ஆதீனம் போல் எமது பிரதமர் தவிக்கும் சோகத்தை நான் உணர்கின்றேன்.

# தொடரும் யூரோ நெருக்கடியும்...

தெரிவித்திருந்தனர். ஆனால் இன்று யூரோ நாணயக் கட்டமைப்பு பெரும் பிரச்சனைகளைச் சந்திக்கும் போது ஒரு திருக்குறள் ஞாபகத்திற்கு வருகிறது. 'யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்.' ஒருவன் எது எதிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கிறா னோ அவற்றால் வரும் துன்பங்களில் இருந்தும் அவன் விடுபட்டவனாகிறான் என்பது இதன் பொருள். யூரோ நாணயக் கட்டமைப்பில் இருந்து பிரித்தானியா விடுபட்டதால் அதனால் ஏற்பட்டபிரச்சனைகளிலும் இருந்து விடுபட்டு இருக்கிறது. பிரித்தானியப் பிரதமர் அவ்வப் போது யூரோ நாணயநாடுகளிற்கு கூறும் அறிவுரை பிரேஞ்சுஆட்சியாளர்களைக் கடுப்பேத்துகிறது.

### நிம்மதிப் பெருமூச்சு

கிரேக்கத்தில் நடந்த பொதுத் தேர்தல் முடிவும் புதிதாக ஆட்சியமைத்த கூட்டணிஅரசும் உலகப் பொருளாதரம் ஒரு நிம்மதிப் பெருமூச்சு விடஏதுவாகஅமைந்துள்ளன. அத்துடன் ஸ்பெயினைப் பொருளாதாரப் பிணை எடுப்பு நடவடிக்கைகள் ஒத்துக் கொள்ளப்பட்டதும் ஆனாலும் கிரேக்கமும் ஸ்பெயினும் தமது பொருளாதாரத்தை மறுசீரமைக்க நீண்ட தூரம் செல்லவேண்டியுள்ளது. கிரேக்கத்தில் புதிதாகப் பதவிஏற்றுள்ள அரசு ஐரோப்பிய ஒன்றியமும் பன்னாட்டுநாணயநிதியமும் வழங்கிய 130 பில்லியன் யூரோக்கள் பெறுமதியான பிணை எடுப்பு நடவடிக்கையை மீள் பேச்சு வார்த்தை செய்ய வேண்டும் எனஅறிவித்துள்ளது. இதனால் ஜேர்மனி சற்றுக் கடுப்படைந்துள்ளது. கிரேக்கஅரசுசெய்யவிருக்கும் சிக்கனநடவடிக்கைகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழலாம்.

### ஜி+20 மாநாட்டில் வறுத்தெடுக்கப்பட்ட ஜேர்மனி

பிரேசிலில் நடந்த 20 பொருளாதாரரீதியில் முன்னணிநாடுகளான ஜி-20 நாடுகளின் கூட்டத்தில் திரைமறைவிலும் பகிரங்கமாகவும் ஜேர்மனி யூரோ நாணய வலய நாடுகளின் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கு ஆவன செய்யவில்லை என்ற குற்றச் சாட்டுகள் பல முன்வைக்கப்பட்டன. யூரோ நாணய வலய நாடாகிய இத்தாலி பகிரங்கமாக ஜேர்மனியைக் குற்றம் சாட்டியது. 2007இற்கு முன்னர் யூரோநாணயவலய நாடுகளிடை பண வழங்கல்களை ஜேர்மனிஅதிகரித்தது. அந்தப் பணப் புழக்கம் பல யூரோ நாணய வலய நாடுகள் ஜேர்மனியில் இருந்துஅதிக இறக்குமதிகளைச் செய்ய ஏதுவாக அமைந்தன. இதனால் ஜேர்மனி தனது முன்னணி ஏற்றுமதி நாடு என்ற நிலையை உறுதி செய்து கொண்டது. இதனால் அதிக இறக்குமதி செய்த நாடுகளின் கடன் பளு அதிகரித்தது. இதுவே இப்போது யூரோ நாணய வலய நாடுகளிடைபெரும் பொருளாதாரப் பிரச்சனையாகஉருவெடுத்துஉலகப் பொருளாதாரத்தைஅச்சுறுத்துகிறது. ஆனால் ஜேர்மனையில் அடுத்த ஆண்டு பொதுத் தேர்தல் வர இருப்பதால் ஜேர்மனியால் எவ்வளவு தூரம் மற்றநாடுகளுக்குக் கை கொடுக்கமுடியும் என்றகேள்வி இருக்கிறது. ஜேர்மன் வாக்காளர்கள் தமதுவரிப்பணம் மற்றநாடுகளுக்குபோய்ச் சேருவதை விரும்புவார்களா? ஆனால் சிக்கலில் உள்ளநாடுகளிற்கு கை கொடுத்துஉதவாவிடில் தாமும் அவர்களுடன் விழவேண்டிவரும் என்பதை ஜேர்மன் ஆட்சியாளர்கள் நன்குஅறிவர்.

### ஜி+20 ஒத்துக் கொள்ளப்பட்டவை

ஒஸ்ரேலியா தொழிலாளர் திறமைகளைவளர்க்கவும் கட்டமைப்புக்களில் முதலீடு செய்யவும் ஒத்துக் கொண்டது. சீனா தனதுபெரும் வெளிநாட்டுச் செலவாணிக் கையிருப்பைக் குறைக்கவும் நாணயவீதத்தில் இறுக்கத்தை தளர்த்தவும் ஒப்புக் கொண்டது.

ஐரோப்பிய நாடுகள் தங்கள் பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள இணங்கியதுடன் பொருளாதாரவளர்ச்சி,அரசசெலவுக் கட்டுப்பாடு, நிதிநிலைமைய உறுதி செய்வதற்கும் இணக்கம் தெரிவித்தன. மேலும் பொருளாதாரப் பிரச்சனையில் உள்ள நாடுகளான கிரேக்கம், இத்தலி, ஸ்பெயின் போன்ற நாடுகளுக்கு நிதி உதவி அளிப்பதாகவும் ஐரோப்பிய நாடுகள் இணங்கின.

### நீண்டகாலம் எடுக்கும்

பொருளாதாரம் ஒரு விஞ்ஞானம் ஆனால் எலிகளில் பரீட்சித்துப் பார்க்க முடியாத விஞ்ஞானம். உலகவரலாற்றில் மிகப் பெரியபொருளாதாரப் பரீட்சார்த்த நடவடிக்கை 17 ஐரோப்பியநாடுகள் இணைந்து யூரோ நாணயத்தை உருவாக்கியமையே. இதன் வெற்றிதோல்விபற்றிஅறிய இன்னும் 10 ஆண்டுகளுக்குமேல் எடுக்கும். இப்போதுஉள்ளஉலகப் பொருளாதாரப் பிரச்சனையில் இருந்துநாம் எல்லாம் விடுபட இன்னும் குறைந்தது ஐந்து ஆண்டுகளாவது எடுக்கும். பல நாடுகளில் புதிய எரிபொருள் இருப்புக் கண்டு பிடித்துள்ளமை நம்பிக்கை அளிப்பதாக உள்ளது.






# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. 31 வயது, 5'8" PSW visa graduate தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4103

2. 30 வயது, 5'7" permanent residence Engineer working as a technician தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4098

3. 29 வயது, 5'1" permanent residence working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4097

4. 32 வயது, 5'7" Canadian citizen soft ware engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4094

5. 32 வயது, 5'7" Canadian citizen Engi neer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4090

6. 31 வயது, 5'6" British citizen graduate working in a company தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4081

7. 37 வயது, 5'6" British citizen accountant working in a bank as a finance analyst தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4077

8. 24 வயது, 5'6" work permit visa Engi neer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4076

9. 39 வயது, 5'8" permanent residence working in a supermarket தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4075

10. 28 வயது, 5'4" working in a Saudi arabia தகுந்த மணமகளை தேடுகின் றனர் Ref: 4073

11. 42 வயது, 5'10" british citizen Engineer தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 3965

12. 38 வயது, 5'10" british citi- zen working in a IT company தகுந்த மணமகளை தேடுகின் றனர் Ref: 1199

13. 46 வயது, 5'6" in Swiss with 1 year temporary visa தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 900

14. 32 வயது, 5'7" British citizen living in uk from childhood well employed civil engineer working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4071

15. 33 வயது, 5'2" working in srilanka தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4067

16. 31 வயது, 5'4", HSMP visa, gradua te தகுந்த மணமகளை தேடுகின்ற னர் Ref: 4063

17. 30 வயது, 5'4", living in uk with 5 years permanent visa தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4062

18. 35 வயது, 6'1", student visa, working in Tesco தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 4061

19. 30 வயது, 5'10", Asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்ற னர் Ref: 4059

20. 32 வயது, 5'7", graduate asylum seeker in uk தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4057

21. 38 வயது, 5'7" accountant, living in Qatar, divorced தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4053

22. 37 வயது, 5'6", british citizen, work ing as a building contractor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4043

23. 51 வயது, 5'5", british citizen, divorced, working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4041

24. 33 வயது, 5'11", work permit visa, graduate, working for a leading uk based company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4038

25. 31 வயது, 5'5", Permanent residen ce working as a sales assistant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3696

26. 35 வயது, 5'7", british citizen working in Tesco தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 3991

27. 32 வயது, 5'9", 5 years permanent visa in uk working in a shop தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3893

28. 32 வயது, 5'9", british citizen working as a manager தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 3873

29. 40 வயது, 5'6", british citizen doc- tor தகுந்த மணமகளை தேடுகின்ற னர் Ref: 3831

30. 41 வயது, 5'3", Permanent resi- dence working in a shop தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 3368

31. 38 வயது, 5'9", British citizen en gineer working in a automobile com pany தகுந்த மணமகளை தேடுகின் றனர் Ref: 1084

32. 49 வயது, 5'6", German citizen, Widowed, Working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4032

33. 43 வயது, 5'6", பிரித்தானிய பிரஜா வுரிமை, பட்டதாரி, Working as an IT consultant தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1213

34. 34 வயது, 5'3", Asylum seeker in UK, Self employed தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 3990

35. 31 வயது, 5'6", பிரித்தானிய பிரஜா வுரிமை, Working as an Engineer தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 115

36. 38 வயது, 5'9", பிரித்தானிய பிரஜா வுரிமை, PhD பட்டதாரி, Automobile Engineer, Working in a company தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 1084

37. 37 வயது, 6'1", Canadian citizen, Working as an Electrician தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4019

38. 36 வயது, 5'5", பிரித்தானிய பிரஜாவுரிமை, Working in a build- ing contract தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4022

39. 29 வயது, 5'8", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, பட்டதாரி, Working as a Manager தகுந்த மணமகளை தேடு கின்றனர் Ref: 4024

40. 54 வயது, 5'5", பிரித்தானிய பிரஜா வுரிமை, Divorced, Self employed தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4027

41. 32 வயது, 5'7", Student visa in UK, பட்டதாரி, Working in Management sector தகுந்த மணமகளை தேடுகின் றனர் Ref: 4028

42. 36 வயது, 5'5", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, Separated தகுந்த மண மகளை தேடுகின்றனர் Ref: 4030

43. 33 வயது, 6'0", பிரித்தானிய பிரஜா வுரிமை, Doctor தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref:4033

44. 27 வயது, 6'0", Student visa in UK தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 4035

45. 29 வயது, 5'5", இலங்கை, பட்டதாரி, தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3982

46. 29 வயது, 5'8", HSMP Visa in UK, MSc பட்டதாரி, working in IT sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3875

47. 27 வயது, 6'0", பிரித்தானிய நிரந் தர வதிவுரிமை, பட்டதாரி, working in private sector தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3985

48. 34 வயது, 5'8", பிரித்தானிய நிரந்தர வதிவுரிமை, Financial ana- lyst, working தகுந்த மணமகளை தேடுகின்றனர் Ref: 3993

## மணமகன் தேவை

1. 22 வயது, 5'3" student visa in uk தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4100

2. 26 வயது, 5'4" permanent residence in uk working as a accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4096

3. 27 வயது, 5'3" Canadian citizen doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4093

4. 41 வயது, 5'3" British citizen gradua te தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4091

5. 36 வயது, 6'0" British Citizen work- ing as a Teacher தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4074

6. 42 வயது, 5'2" student visa gradua te தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 899

7. 27 வயது, 5'0" graduate working in srilanka தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 4068

8. 41 வயது, 5'2" British citizen working as a Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3362

9. 39 வயது, 5'3" widow with 6 years old son in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 4031

10. 29 வயது, 5'4" French citizen work ing in a company in uk தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 3981

11. 30 வயது, 5'5" British citizen work ing as a accountant தகுந்த மணமக னை தேடுகின்றனர் Ref: 3316

12. 35 வயது, 5'6" working as a account ant in srilanka தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 826

13. 24 வயது, 5'7", Born and brought up in Switzerland, Working in a company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3933

14. 29 வயது, 5'4", இலங்கை, பட்டதாரி, ICMA qualified, Working as an Accountant தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 240

15. 29 வயது, 5'2", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, working in finance sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref:3382

16. 49வயது, 5'4", Living in UK for 2 years, பட்டதாரி, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 656

17. 39 வயது, 5'3", Born and brought up in UK, Scientist, working in Medical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3986

18. 28 வயது, 5'2", இலங்கை, பட்ட தாரி, Lecturer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref:3996

19. 38 வயது, 5'8", USA citizen, Practi- cing Lawyer தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3997

20. 39 வயது, 5'4", பிரித்தானிய பிரஜா வுரிமை, பட்டதாரி, Working in pharma ceutical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3999

21. 24 வயது, 5'2", இலங்கை, பட்ட தாரி, Lecturer தகுந்த மணமக னை தேடுகின்றனர் Ref:3942

22. 22 வயது, 4'10", இலங்கை, Student தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 3513

23. 30 வயது, 5'2", பிரித்தானிய பிரஜா வுரிமை, பட்டதாரி, working in admin- istrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1160

24. 38 வயது, 5'3", UK born, MSc பட்டதாரி, ஊடக நிறுவனமொன்றில் பணிபுரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 895

25. 40 வயது, 5'4", Work permit in UK, Doctor, தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref:1232

26. 29 வயது, 5'2", Student visa in UK பட்டதாரி, studying MSc Bio Med தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3934

27. 23வயது, 5'3", Swiss citizen, Studying Batchelor degree தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3743

28. 30 வயது, 5'7", பிரித்தானிய பிரஜா வுரிமை, Completed Masters degree in Medicine, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 722

29. 25 வயது, 5'2", Born and brought up in UK, Accountant தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3966

30. 35 வயது, 5'4", Born and brought up in UK, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3967

31. 30 வயது, 5'7", French citi- zen living in UK பட்டதாரி, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3976

32. 33 வயது, 5'8", பிரித்தானிய பிரஜாவுரிமை, divorced, பட்டதாரி working as a Teacher தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 3508

33. 34வயது, 5'8", Workpermit visa, Doctor தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 3889

34. 38 வயது, 5'5", பிரித்தானிய பிரஜா வுரிமை, Part qualified ACCA, work- ing as an assistant accountant, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 2660

35. 29 வயது, 5'1", பிரித்தானிய பிரஜாவுரிமை, பட்டதாரி, working in administrative service தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1378

36. 25 வயது, 5'3", BSc degree in Mathematics and Statistic, living in uk for the past 10 waiting for a permanent visa தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 1243

37. 22 வயது, 5'0", இலங்கை, A/L Bio Science தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 3732

38. 31 வயது, 5'2", அமெரிக்க பிரித்தா னிய பிரஜாவுரிமை, Doctor, PhD qual- ified, தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 3855

39. 35 வயது, 5'6", அமெரிக்க பிரஜாவு ரிமை, பட்டதாரி, Working in phar- maceutical company தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3865

40. 27 வயது, 5'4", கனடிய பிரஜாவுரி மை, Computer degree holder தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3881

41. 34 வயது, 5'4", பிரித்தானிய பிரஜாவு ரிமை, தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 3841

42. 31 வயது, 5'4", பிரித்தானிய பிரஜா வுரிமை, Bio Chemist, தகுந்த மணம கனை தேடுகின்றனர் Ref: 3793

43. 35 வயது, 5'5", பிரித்தானிய பிரஜா வுரிமை, Accountant, தகுந்த மணம கனை தேடுகின்றனர் Ref: 3853

44. 28 வயது, 5'6", இலங்கை, பட்ட தாரி, தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 3803

45. 26 வயது, 5'4", பிரித்தானிய பிரஜா வுரிமை, Accountant working in a company, தகுந்த மணமகனை தேடு கின்றனர் Ref: 3260

46. 28 வயது, 5'2", இலங்கை, பட்ட தாரி, Working in IT field, தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 3502

47. 22 வயது, 5'5", பிரித்தானிய பிரஜா வுரிமை, Working in medical sector, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3575

48. 29 வயது, 5'1", இலங்கை, Working for export firm in Sri Lanka, தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3791

49. 27 வயது, 5'4", கனடிய பிரஜாவு ரிமை, Doctor தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3800

50. 26 வயது, 5'3", தென்னாபிரிக்க பிரஜாவுரிமை, Engineer தகுந்த மண மகனை தேடுகின்றனர் Ref: 3569

51. 24 வயது, 5'5", Denmark பிரஜாவு ரிமை, பட்டதாரி, Working in Medical sector in UK தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3606

52. 36 வயது, 5'7", பிரித்தானிய பிரஜாவு ரிமை, Finance sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகனை தேடுகின் றனர் Ref: 3573

53. 27 வயது, 5'8", பிரித்தானிய பிரஜா வுரிமை, பட்டதாரி, Medical sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணமகனை தேடுகின்றனர் Ref: 3359

54. 32 வயது, 5'2", பிரித்தானிய பிரஜா வுரிமை, பட்டதாரி, Medical sector இல் தொழில் புரிபவர் தகுந்த மணம கனை தேடுகின்றனர் Ref: 3772

55. Age 28, 5'2", British citizen accountant looking for a suitable groom Ref: 1348

56. Age 32, 5'4", British citizen doctor looking for a suitable groom Ref: 3711

57. Age 31, 5'6", British citizen grad- uate working in a bank looking for a suitable groom Ref: 3365

58. Age 32, 5'1", graduate working as a accountant in a company in srilan ka looking for a suitable groom Ref: 3739

59. Age 33, 5'2", graduate divorced student visa in uk looking for a suit- able groom Ref: 3745

60. Age 24, 5'4", Student visa in UK, looking for a suitable groom, Ref: 3687

**இணையத்தில் மேலதிக விபரங்கள்**
**www.orumanam.com**

# கடன் பட்டார் நெஞ்சம்



கடன் பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன் என்ற கம்பராமாயண வரிகள்ஊரில்அடிக்கடிஉபயோகிக்கப்படும்உவமை. கடன் படுதல், கடமைப்படுதல் என்பன பாரம் பெரும் செயற்பாடுகள் என்ற மூத்தோரால் அடிக்கடி கூறப்படும் அறிவுரைகள். இதே வேளை காணியை ஈடுவைத்து பெண் பிள்ளைக்கு சீதனம் கொடுத்தல் அல்லது வீடு கட்டுதல், நகையை அடகுவைத்து வட்டிக்கு பணம் கடனாக பெறுதல் அவசர தேவைகளை நிறைவேற்ற இவ்வகையான கடன்களை பெறுதல் என்பன அங்குமிங்குமாக நடந்துகொண்டு தான் வந்தன.

இருப்பதைக் கொண்டு சிறப்புடன் வாழும் இலக்கணம் தெரிந்த சிக்கனம், சேமிப்பு என்ற வாழ்க்கை முறை அமைந்த ஒரு தமிழ் சமூகமாக தாயகத்தின் வாழ்வுக்காலத்தில் எமது சமூகம் இருந்தது.

கடன் என்ற ஒரு பெருஞ்சுமை எம்மவர்கள் மத்தியில் பரவலாக கனத்த ஒரு அம்சமாக அன்றைய நாட்களில் இல்லை, தேவைகள் கூடிய முதலீட்டாளர்கள் நிறைந்த ஐரோப்பிய நாடுகளுக்கு புலம் பெயர்ந்த எம்மவர்களை வங்கிகளும் கடன் நிறுவனங்களும் பெரும்பகுதிகள் பெருமளவு மாற்றிவிட்டன.

அந்த நாட்களில் 1970ஆம் ஆண்டு நடுப்பகுதிகளில் தோறா என்ற வர்த்தக நிறுவனம் யாழ்ப்பாணத்தில் மிகப்பெரும் நிறுவனமாக அமைந்திருந்தது. ஆஸ்பத்திரி வீதியில் குறிப்பிட்ட காலம் கொடி கட்டி பறந்த நிறுவனம் இது. உரங்கள், கிருமி நாசினி வகைகள் என்பனவற்றை மொத்தமாக பல நிறுவனங்களை ஈடு செய்யும் நிறுவனமாக விற்பனை செய்த ஒரு மொத்த விற்பனை நிலையம் இது. எரிபொருள் நிலையம் நடத்தும் நிலையமும் அதற்குள் இருந்தது.

உரிமையாளர் மிகவும் துடிப்பாகவும், சாந்தமான நல்ல மனிதர் எந்த நேரமும் சிரித்த முகத்துடன் காணப்படும் அவர், பசுமை புரட்சியிலும் இளைஞர்களை ஈடுபடுத்தி அவர்களுக்கு வேலை வாய்ப்பும் தரவேண்டும் என்று விரும்பினார். வங்கிகளின் உதவியுடன் கடன் பெற்று துணுக்காயில் 300 ஏக்கருடன் கூடிய குளத்தை விற்பனைக்கு இருந்ததை வாங்கி மிளகாய், நெல் செய்கைகள் என்று ஆரம்பித்தார். விஸ்வமடு பிலிமந்தலாற்றிலும் மிளகாய் செய்கைக்கு பெருநிலப்பரப்பு, சுண்டிக்குளத்தில் பெரும் நிலப்பரப்பில் தென்னந்தோட்டம் என்று வியாபார முயற்சிகளில் இறங்கினார், ஆரம்பம் சிறப்பாக தான் இருந்தது.

ஆனால், பயிர்செய்கையில் விளைவு பயனளிக்காத போது நட்டம், அவரது நிலைகுலைய வைத்தது. வருமானத்திற்கு மேலான நிதித் தேவை, அவரை வாட்டி வதைத்தது. பல இடத்திலும் கடன் பெற்றார். மீளச் செலுத்த முடியாத நிலை. கடன் கொடுத்த ஒருவர் அவரது சட்டையை பிடித்து இழுத்து பணத்தை கேட்டு விட்டார். மனமுடைந்த அந்த நல்ல மனிதர் வீட்டில் எல்லோரும் திருமண வீட்டுக்கு போயிருந்தவேளையில் தான் விற்கவிருந்த கிருமிநாசினி பவுடர் ஒன்றை கரைத்துக் குடித்து தற்கொலை செய்துகொண்டார்.

அந்த நேர்மையான நல்ல மனிதரின் உயிரை கடன் உறிஞ்சிக்குடித்து விட்டது.

ஓட்டோஸ் என்ற நிறுவனம் இன்னொரு நிறுவனம் இதே மாதிரி ஆஸ்பத்திரி வீதியில் மிக நீண்டகாலமாக இயங்கிய உதிரிப்பாக விற்பனை நிலையம். எரிபொருள் விற்பனை நிலையம், கிருமிநாசினி மொத்த விற்பனை, ஹொட்டேல் விடுதி என பல பாரிய வியாபார முயற்சிகளை கொண்ட நிறுவனம் இந்த ஓட்டோஸ்.

அதன் பொது முகாமையாளர் கூட ஓட்டோஸ் குமாரசாமி என்று அழைக்கும் அளவிற்கு அந்த வியாபார நிலையத்தில் வியாபாரம் அந்த நாட்களில் அமைந்திருந்தது. 1980 ஆம் ஆண்டுகளில் இந்த நிறுவனமும் கடன் சுமை காரணமாக மூடப்பட்டுவிட்டது.

வருமானத்தை மீறிய பகட்டு வாழ்க்கை கடனாளியாக்கி பலரை தடுமாற வைக்கின்றது. புலம் பெயர் நாட்டில் இதனால் அவலப்படும் எம்மவர் தொகை அதிகம்

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

மாதந்த சீட்டுக்கட்டி ஏமாறுவது, ஊரில் மட்டுமல்ல புலம்பெயர் நாடுகளிலும் தொடரத் தான் செய்கின்றது. கடன் பட்டு கடை தொடங்கும் எம்மவர், ஏஜென்சி மூலம் கடன் சொல்லி உறவினர்களை புலம்பெயர் நாடுகளுக்கு அழைத்து வரும் எம்மவர், வீடு, வாகனம் என வருமானத்தை கூட்டிக்காட்டி வங்கி கடன் மூலம் வசதிகளை பெற்றுக் கொண்டு மாதாந்த கடன் என கஸ்டப்படும் எம்மவர் என கடனால் கலங்கும் எம்மவர் தொகை புலம்பெயர் நாடுகளில் அதிகரித்த வண்ணமே இருக்கின்றது.

குடும்பங்கள் பிரிவை காண்பதற்கு கூட கடன் முக்கிய காரணமாக அமைகிறது. கைக்கடன்களை பல்லாயிரக்கணக்கில் அறிமுகமானவர்களிடம் பெற்று தன்னிடம் சீட்டு பிடித்தவர்களையும் ஏமாற்றி குடும்ப உறவினர்களை விட்டு பிரிந்து ஓடிஒளித்து வாழும் தமிழ் பெண்களை உருவாக்கும் அளவிற்கு கடன் பிரச்சினை புலம் பெயர் நாட்டில் எம்மவர் மத்தியில் பெரும்பிரச்சினையாக அமைந்தது. வேதனைக்குரியதொரு விடயம் தான்.

## நெருப்பிலெனது தேசம்........!!!

பகல் மறையும் பொழுதுகளில்
ஆரம்பிக்கும் எம்மக்கள் பதற்றம்...
மெல்ல இருட்ட ஆரம்பிக்கும்–எங்கள்
உவகையெல்லாவற்றையும்
உள்வாங்கி...!

குண்டு விழும், விழுந்த இடத்தைச்
சிதறடிக்கும், இடி போலச் சத்தங்கேட்கும்,
தூரத்து அவலக்குரல்கள் குண்டு
போடப்படுவதை உறுதிப்படுத்தி தொடர்ந்து
எதிரொலிக்கும் !
துப்பாக்கிகள் வீட்டுக்கதவு தட்டும்,
சகல குடும்பத்தினரதும்
கதறலுக்கப்பாற்பட்டு–இளைஞர்கள்
கடத்தப்படுவர் !

பௌர்ணமியும் பார்த்து அழும்
வதைப்படுதல் கண்டு !
தினந்தோறும் கடற்கரை,வயற்காடு,
வீதியோரம், களத்துமேடு,
பொதுமயானம், புளியந்தோப்பு,
எங்கும் கண்டிடலாம்...

எவர்க்கேனும் மகனாக, கணவனாக,
தந்தையாக, சகோதரனாக,சினேகிதனாக
வாழ்ந்து வந்தவர்களின் சடலங்களை...!
"இன்றைக்கெவர்க்குச் சாவோ..?"
பதுங்கு குழியிலிருந்தவாறே
உறவினரை எண்ணிப்பார்த்து
உயிர்துடிக்கும். மூச்சடக்கி, மூச்சடக்கி
உள்நெஞ்சுக்கேவல் எழும் !

அனைத்தும் முடிந்தநேரம்
வீட்டுச்சுவர் மேல் – சத்தமின்றி
வெயில் ஏறும் !

ரிஷான் ஷெரீப்

# பேனாவில் இருந்து..

(21ம் பக்கத் தொடர்ச்சி)

காணாமல் போன தன் தந்தையை தேடிக் கொண்டிருக்கும் அகிலாவின் முகத்தைப் பார்க்கும் தைரியம்கூட எனக்கில்லை.. ஒருகாலம் புன்னகையும்,கலகலப்பும்,உறவுகளும்நிரம்பிக் கிடந்த அவள் வாழ்க்கையில் இப்பொழுது ஆத்திரமும்,அழுகையும்,தனிமையுமேநிறைந்து கிடக்கிறது. அகிலாவைப்போல் ஆயிரம் ஆயிரம் அகிலாக்களின் புன்னகைகள் முள்ளிவாய்க்காலுடன் பறிக்கப்பட்டுவிட்டன... எம் தங்கைகளின் கண்ணீரால் எழுதப்படுகின்றன இலங்கைத்தீவின் சாபங்கள்...அணைக்கமுடியாத விடுதலை நெருப்பை அணைக்கத்துடித்த ஆக்கிரமிப்புக்கரங்கள் ஒரு இனத்தின் குரல்வளையை நெரித்துக்கொன்றுவிட்டுக் கொக்கரிக்கிறது...பேசமுடியாத ஊமையாய் ஆக்கப்படிருக்கிறது ஈழத்தில் என் இனம்...

எங்களுக்கென்றொரு தேசம் இருந்தது....எங்களுக்கென்றொரு கூடிருந்தது... படுத்துறங்க மர நிழல் இருந்தது... நிம்மதி என் தேசத்து நிழலில் படுத்துறங்கியது... இன்று வெறுமையும், களைப்பும், துயரமுமாய் என் தேசத்து வீதிகள் வெறித்துக்கிடக்கின்றன.. வன்னியின் பொட்டல் வெளிகளில் அணலாய் எரிக்கும் துயரங்களிலும், அடக்குமுறைகளிலும்....இருந்து ஆவியாகின்றன எம்மக்களின் கண்ணீர்த்துளிகள்... பள்ளி புத்தகங்களுக்குப் பதிலாக எங்கள் குழந்தைகள் வாழ்க்கைச் சுமைகளை சுமந்தபடி தள்ளாடுகிறார்கள்... அடுத்த வேளை உணவிற்கு வழி தேடுவதைத் தவிர வேறு எதைப்பற்றியும் சிந்திக்கமுடியாதபடி அவர்களின் எதிர் காலங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன எரித்துக் கொண்டிருக்கும் வேதனைகளுடனும் ஆற்றுப்படுத்தவே முடியாத குற்றவுணர்வுகளுடனும் உடல் கூட்டுக்குள் அடைந்துகிடக்கிறது என் உயிர் வாழ்க்கை...

இப்பொழுது எங்கள் குழந்தைகளுக்குத் தேவை வெறும் அரசியல்க்கோசம்களும் வெற்று வசனங்களும் அல்ல...ஏக்கத்துடன் இருக்கும் அந்தக்குழந்தைகளின் கண்களில் நம்பிக்கை ஒளியை விதைக்கும் எதிர்காலத் திட்டங்கள், தூக்கிவிட ஒரு தோளுக்காக ஏங்கும் அந்தப் பிஞ்சுகளின் கைகளைப் பிடித்து அழைத்துச் செல்லும் இதயங்களின் உதவிகள்,அவர்களின் வாழ்க்கை நேர்கோட்டில் செல்லும் வகையில் அவர்களை தாங்கிப் பிடிக்கக்கூடிய ஒரு கட்டமைப்பைக் கட்டி எழுப்புதல்,இன்னமும் போரின் எச்சங்களில் இருந்து மீளாமல் இருக்கும் எங்கள் பிஞ்சுகளின் விழிகளில் இருக்கும் அச்சத்தைப் போக்கி அவர்களை ஆற்றுப்படுத்தி மீண்டும் கல்வியில் இணைத்து எல்லாக்குழந்தைகளைப் போலவும் ஒரு அமைதியான வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும் திட்டங்கள், ஏற்கனவே இவற்றைச் செய்துகொண்டிருக்கும் நேர்மையான அமைப்புகளை இனங்கண்டு தனிப்பட்ட வகையில் இவற்றைச் செய்து கொண்டிருக்கும் நல்ல உள்ளங்களையும் ஒன்றாக்கி தாயகத்துக்கு உதவும் ஒரு வலிமையான அமைப்பாக புலம்பெயர்ந்தவர்கள் உருவாகுதல் போன்றனவே தற்போது எங்கள் குழந்தைகளைக் காப்பாற்ற முக்கியமாகவும், உடனடியாகவும் நாம் செய்ய வேண்டியவைகளாக இருக்கிறது...

எனதருமை உறவுகளே..! எங்கள் குழந்தைகள் பசியால் வாடியபோது, பாலுக்கு ஏங்கிய போது,பங்கர்களின் இருட்டுக்குள் இருந்து வெளிச்சத்தைதேடியபோது,பிணங்களின் நடுவே அனாதையாக நின்றுகொண்டு மனங்களைத் தேடியபோது மனச்சாட்சியே இல்லாத உங்கள் சிலரின் இதயங்கள் காட்சி ஊடகங்களின் முன்னே கால்களை நீட்டியவாறு உணவுக் கோப்பைகளை ருசி பார்த்துக் கொண்டிருந்தன..எந்தவித சலனமுமின்றி உங்கள் உலகம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.... எந்தக்காரணமும் இன்றிக் கொல்லப்பட்ட எம்மக்களைக் காக்க மறந்து எப்படித்தான் வீழ்ந்துகிடந்தீர்களோ..? உறவுகளே...! செத்துப்போவர்கள் உங்கள் ரத்தம்கள் என்ற சுயநினைவுகூட இன்றி எப்படி இயங்குகிறது உங்கள் உலகம்... இரக்கமில்லாதவர்களே...! சினிமாக்கதாநாயகர்களின் அழுகை ஒலி விழுந்த உங்கள் காதுகளில் எங்கள் பிஞ்சுக்குழந்தைகளின் இதயத்துடிப்பு கடைசிவரை விழவே இல்லையே...ஏன் என்று கேட்கக்கூட விருப்பமில்லாது உங்கள் கண்களையும்,காதுகளையும் இறுக மூடிவைத்திருந்தீர்கள்...இன்றுவரை திறக்கவிலையே உங்கள் பலரின் இரும்பு இதயங்கள்..

எங்கள் குழந்தைகளின் கண்ணீரை கைகளில் ஏந்தியபடி வீதிகளில் நீதிகேட்க இன்னும் சில இளைஞர்கள் இருக்கிறார்கள்...நீறுபூத்த நெருப்பாக கணன்றுகொண்டிருக்கும் இதயத்துடன் நீதிக்காக போராடும் ஓர்மத்துடன் அவர்கள் என்றும் இருப்பார்கள்...அவர்களில் ஒருவனாய்நானுமிருப்பேன்.மலர்விழியினது அண்ணா எனும் மெல்லிய அதிர்வு,அகிலாவின் கதறல், சர்மிளாவின் ஏக்கம், ப்ரியாவின் பசியால் வாடிச் சோர்ந்த முகம் இவை எவையும் எம்மைத்தூங்க விடாது... எங்கள் வீடுகள் முழுவதும் நிறைந்து கிடக்கும் இந்தப்பிஞ்சுகளின் ஏக்கம்களும், புன்னகைகளும்,கதறல்களும் எங்களை வீதிகளில் நிக்கவைத்துக்கொண்டே இருக்கும்.... மரணம் வரைக்கும் எங்களை அது ஓயவிடாது... நாங்கள் கைகளில் ஏந்திவைத்திருப்பது வெறும் பதாதைகளும் கொடிகளும் அல்ல...அவை எங்கள் ஆன்மாவின் வெளிப்படுத்தமுடியாத பெரும் வலி,கதறல்..எப்படியாவது உலகின் காதுகளுக்கு கொண்டுசேர்த்துவிடவேண்டும் என்ற பெரும் துடிப்பு...

செத்துப்போன எங்கள் தங்கைகளின் ஆன்மாக்கள் எங்கள் உடலை கடைசிவரை வழி நடத்தும்...மரணம் வரைக்கும் எம் இனத்தின் விடிவிற்கு உழைத்துக்கொண்டே இருப்போம்... என் இனத்தின் துயரங்களை தீர்க்க முடியாத ஏக்கத்துடனேயே என் உயிர் ஒரு நாள் நின்றுபோகலாம்...அப்பொழுதும் தூங்காத என் ஆன்மா என் தாய்மண்ணில் அலைந்து கொண்டிருக்கும்.... என் கல்லறையைத் தாண்டிச் செல்லும் காற்று ஒரு நாள் என் காதில் என் இனத்துக்கு நீதிகிடைத்த சேதி உரைத்துச் செல்லும்... அகிலாவின் அழுகை ஒலி ஓய்ந்ததாகவும், எம் குழந்தைகள் மரணத்தின் வாடையைச் சுவாசிக்காமல் வாழும் ஒரு புதிய தேசம் உருவாகி இருப்பதாகவும் அது உரத்துச் சொல்லிவிட்டுப் போகும்... அப்பொழுது நான் நிம்மதியாகத் தூங்கிப்போவேன்...

## தமிழரின் தாகம்.....!!!

சட்டென்று ஒரு வெடிச்சத்தம்...!
பட்டென்று போனது ஓருயிர்!
சிட்டென்று பறந்த சின்னக் குருவி...
வேட்டொன்றில் வீழ்ந்தது வீணாய்!
கார்கொண்ட மேகம் கண்ணீர்
அஞ்சலி செலுத்த,
பேர் கொண்ட அவர் முகம்
தணலாய் மறைக்க,
வீறுகொண்ட நாலுபேர்
இருக்குமிடம் விலகினார்!
போர்கொண்ட உள்ளங்களின்
காரியக் குணம் போல..!

காரணம் தெரியாது...! காரியம் புரியாது...!
ஆழங்கள் தாண்டி... தோண்டும் நேரம்
இதுவோ? காரிருள் ஊடே ஒரு
விடிவெள்ளி..
வெளிச்சம் காட்டிச் சிரிக்கிறது!

விடைதெரியாத வினாக்களுக்கும்,
விடைகொடுக்கும் நேரமிது!
கடைந்தெடுத்த சிலபேர் மட்டும்...
சிதறிப்போய்...... மீண்டு வருவார்!!!

கண்ணீர் விட்டு அழுத இனம்,
மீண்டும் சிரிக்கும் கேளீர்!
செந்நீர் சிதறி செத்த மானம்,
மாண்டு மீண்டும்.... துளிர்க்கும் பாரீர்!
எந்தனைக்கு தெரியாது... எதுவும் புரியாது!
மனதில் பட்டது... இந்த நல்லது கெட்டது!
இதுவரை தோன்றியது நடந்தது
துன்பியலாய்!
இனிமேல் நடக்கும் எல்லாமே இனிதாய்!
தமிழரின் தாகம்............!

இருபாலை ஊரான்



# சதையை நம்பி நடுத் தெருவில் நிற்கும் தமிழ் சினிமா!

சினிமாவும், அரசியலும் தமிழ் மக்கள் வாழ்வோடு இன்றைய கால கட்டத்தில் இரண்டறக் கலந்து விட்டன. சினிமாவில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கும் நட்சத்திரங்கள் தமக்குரிய ஆதரவு சினிமாவில் பல்கிப் பெருகியவுடன், தம்மைச் சூழ்ந்திருக்கும் ரசிகர்களின் பலம் தமக்கும் அரசியலில் காலூன்றப் பின்னணியாக இருக்கும் எனும் நம்பிக்கையுடன் களமிறங்கி தம் வசமுள்ள பணத்தையெல்லாம் வாரியிறைத்து மண் கவ்வுகின்றார்கள். மக்கள் திலகத்திற்குப் பின்னர் அரசியலில் ஆதிக்கம் செலுத்த வேண்டும் எனும் ஆசையோடு களமிறங்கிய பல நட்சத்திரங்கள் இறுதியில் மண் கவ்விய வரலாற்றினைத் தான் நாம் அனைவரும் கண்டு வருகின்றோம்.

மக்களுக்கான சினிமா என்று நாம் நோக்குகின்ற போது மக்களின் ரசனையினைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகத் தான் தமிழ்த் திரைப்படங்கள் செயற்படுகின்றன. குத்துப் பாட்டினை ரசிக்க வேண்டும்! கதா நாயகன் கூட்டமாக வரும் கும்பலை எதிர்த்து நின்று தனித்துச் சண்டை போட வேண்டும்! பிரபல நடிகர்களை அவர்களின் ரசிகர்களின் தலைவனாக காண்பித்து திரைப்படம் வெளி வர வேண்டும் எனும் நோக்கில் மக்களின் ரசனை என்பது இருக்கும் போது நல்ல சினிமாவினைத் தமிழ்த் திரையுலகம் தரவில்லையே என்று நாம் ஆதங்கப்படுவது நியாயமில்லைத் தானே.

வரலாற்றுத் திரைப்படத்திலும் நடிகையின் குத்துப் பாடல் வைத்தல் தான் வரமாகும் எனும் நிலையினை தமிழ் சினிமாவினை ரசிக்கும் ரசிகர்கள் தாமாக விரும்பி ஏற்படுத்தியிருக்கின்றார்கள். பெரும்பாலான படங்களில் நடிகைகளின் உடற் சதையினை வைத்துப் பணமீட்டும் நோக்கிலான காட்சிகள் வலிந்து திணிக்கப்படுகின்றன.மக்களுக்கான யதார்த்தம் நிறைந்த வாழ்வியலைப் பற்றிப் பேசுகின்ற திரைப்படங்களின் வருகை என்பது இத்தகைய இழி நிலைகளின் காரணத்தினால் காலப் போக்கில் குறைந்து கொண்டே போகின்றது. பொக்கிஷம், அங்காடித் தெரு, மைனா போன்ற படங்கள் ஆண்டுக்கொரு முறை வருமா என்பதே இன்றைய தமிழ் சினிமாவின் நிலையினைப் பார்க்கையில் சந்தேகமாத் தான் இருக்கின்றது.

மசாலாத் திரைப்படங்கள் தான் இன்று அதிகளவில் மக்களின் ரசனையினை மையமாக வைத்து எடுக்கப் படுகின்றன. நடிகைகளுள் யார் தொடையினை நன்றாக காட்டுகிறார்? யார் அதிகம் கவர்ச்சி காட்டுகின்றார் எனப் பல போட்டிகளை ரசிகர்கள் ஏற்படுத்தி விடுகின்றார்கள்.

அதிகம் கவர்ச்சி காட்டும் நடிகையின் மார்க்கட் மாத்திரம் தமிழ் சினிமாவில் நின்று நிலைக்கும் சந்தர்ப்பங்களையும் நாம் கண்டு கடந்து வந்திருக்கிறோம். மக்களின் உணர்வுகளை மையப்படுத்திய கலாரசனை நிறைந்த படங்களின் வருகை என்பது அண்மைக் காலத்தில் குறைந்து கொண்டே போகின்றது. நல்ல சம்பவங்களை, வரலாற்றுக் கதைகளை, மக்களின் பிரச்சினைகளை மையப்படுத்திப் படமெடுக்கவும் முதலிடவும் இயக்குனர்களும், முதலீட்டாளர்களும் தயக்கம் காட்டுகின்றார்கள்.

இதே வேளை ஐந்து அல்லது ஆறு பாடல்களுடன் வரும் ஒரு திரைப்படத்தில் ஒரு சில நிமிடங்கள் வரும் நடிகையின் கசாமுசா காட்சிகளை மாத்திரம் ரசிக்கும் வகையில் மசாலாப் படங்களுக்குள் உட்புகுத்திப் படமெடுப்பதற்குப் பலரும் விரும்புகின்றார்கள். தமிழ் சினிமாவில் முழுதாக காட்டுகின்றார்களா என்று நாம் கேள்வியெழுப்பினால் இல்லை என்றே பதில் கூற முடியும்!

ஆனாலும் அரை குறையாக காட்டப்படும் கவர்ச்சிக் காட்சிகளை கண்டு களிக்கப் பல ரசிகர்கள் வெறி பிடித்தவர்களாக அலைகின்றார்கள். தமிழில் ஆங்கிலத் திரையுலகிற்கு நிகராக நீலப் படங்கள் இல்லாமை தான் நடிகைகளின் வாளிப்பான உடல்வாகினை நாம் ரசிக்க ஒரு காரணம் என்றும், நீலப் படங்களை எம் சமூகத்தினுள் திணித்தால் கலாச்சாரம் சீரழியும் என்றும் கூறலாம்!

ஆனாலும் நடிகையின் சதையினை நம்பித் தமிழ் சினிமாவின் போக்கினை அல்லது பாதையினை மாற்றுவதிலும் பார்க்க, நல்லதோர் கதையினை நம்பி மக்களின் பேரபிமானத்தினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் ஒரு படத்தினை எடுக்க எம் தமிழ் இயக்குனர்கள் ஏன் முன்வரக் கூடாது? நல்ல படம் அல்லது மசாலத் தன்மையற்ற வாழ்வியலைப் பேசுகின்ற படங்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்புக் கிடைக்கும் நிலையினை தமிழ் சினிமா இயக்குனர்கள் நினைத்தால் உருவாக்க முடியாதா?

நாமும் எத்தனை நாளைக்குத் தான் மசாலாத் திரைப் படங்களைப் பார்த்து எம் மனதினுள் புகைந்து கொண்டிருப்பது. கொஞ்சமாவது வித்தியாசமாக அரைத்த மாவினை அரைப்பதனை நிறுத்தி விட்டு மேலைத் தேய சினிமாவினைப் போன்று ஜனரஞ்சக அந்தஸ்தினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் நல்ல படங்களைத் தருவதற்கு எம் தமிழ் சினிமா இயக்குனர்கள் முயற்சி செய்யலாம் அல்லவா?

ஐந்து பாடல்களை ஒரு படத்தினுள் சொருகி படத்தின் நேரத்தினை அதிகரிப்பதனை விடுத்து பாடல்கள் அல்லது தமிழ் இசைக்கென்று தனியான ஆல்பங்களை உருவாக்கித் தமிழ் சினிமா பயணிப்பதற்கு யாராவது ஒரு இயக்குனர் அடியெடுத்து வைக்க கூடாதா?

நடிகையின் சதையினை நம்பித் தம் படங்களில் காட்சிகளை அமைப்பதனை விடுத்து மக்களின் ரசனையினை வெல்லும் வகையில் நல்ல கதைகளை நம்பித் திரைப்படங்களைத் தயாரிக்கலாம் அல்லவா?

வரலாற்றுக் கதைகள், தமிழ் நாட்டு மக்களின் வாழ்வியலைப் பேசும் சம்பவங்கள் எனப் பல விடயங்கள் புதைந்து போயிருக்க அவற்றையெல்லாம் விட்டு விட்டு மொழி மாற்றி ரீமேக் படங்களை எடுப்பதில் எம் கவனத்தினைச் செலுத்தலாமா?

*எழுத்து-செ.நிரூபன்.*

திரை விமர்சனம்

# Prometheus



என்றோ ஆதிகாலத்தில் ரிட்லி ஸ்காட் என்ற இளைஞர், Alien என்று ஒரு பிரமாண்ட வெற்றிப்படத்தை எடுக்க, அவருக்கே இப்போது முப்பத்திரண்டு ஆண்டுகள் கழித்து கிழடுதட்டியபின், அந்தப் படத்துக்கு ஒரு prequel - முதல் பாகம் - எடுக்க ஆசை வந்தால் என்ன ஆகும்?

நமது முன்னோர்கள் ஏலியன்கள் என்ற இந்த வசீகரமான கற்பனை, உலகின் பல பண்டைய மதங்களிலும் உண்டு. மெசபடோமியா, கிரேக்கம், மாயன்கள் போன்ற பல கலாச்சாரங்களிலும் பண்டையகால ஓவியங்கள் பலவற்றை நாம் பார்த்திருக்கிறோம். இந்த ஓவியங்கள் சிலவற்றில், சில மனிதர்கள் வானில் ஒரு குறிப்பிட்ட வடிவத்திலும் எண்ணிக்கையிலும் அமைந்த நட்சத்திரங்களைக் காட்டுவதுபோல இருக்கும் ஒற்றுமையை வைத்து, அந்த இடம் தொலைவில் உள்ள ஒரு பால்வீதியில் இருப்பதாகவும், அந்தப் பால்வீதியில் ஒரு சூரியன் இருப்பதாகவும், அங்கே பூமியைப் போன்ற ஒரு கிரகம் இருப்பதாகவும், அந்த கிரகத்தில் உள்ள மனிதர்கள்தான் நமது பூமியில் உள்ள உயிர்களைப் படைத்திருப்பதாகவும் ‘சில’ உண்மைகளைக் கண்டறியும் ஒரு குழு, பெரும் செல்வந்தர் வழங்கும் ஒரு விண்வெளிப் பிரயாணத்தில் பங்கேற்கிறது. வருடம்-2089. இது எப்படி சாத்தியமாகிறது? சுவற்றில் வரைந்துள்ள சில மொக்கை ஓவியங்களிலிருந்து, பால்வெளியில் அமைந்துள்ள நட்சத்திரக் கூட்டமைப்பை எப்படிக் கண்டறிந்தார்கள்? சுவர்களில் பண்டையகாலத்தில் வரையப்பட்டுள்ள ஓவியங்களில் உள்ள சில உருண்டைகளை மட்டுமே வைத்துக்கொண்டு அதே patter உள்ளஒரு தனி சூரிய மண்டலத்தையே கண்டுபிடிப்பது என்ன ஜிலேபி சாப்பிடுவது போன்ற வேலையா? என்னாங்கடா இது? உடனேயே தெருவில் அங்குமிங்கும் நடக்கும் பிச்சைக்காரர்களை சத்யராஜும் வடிவேலுவும் கவ்விக் கொண்டு கிரிக்கெட் மாட்சுக்கு ஆள் சேர்ப்பார்களே அப்படி ஒரு கும்பலை விண்கலத்துக்குள் போட்டுவிடுகிறார்கள். இந்த விண்கலத்தின் பெயர் - ப்ராமிதியஸ் (அய்யா ஜாலி... டைட்டிலை எப்படியோ படத்துக்குள் கொண்டு வந்துவிட்டார்கள்). அந்த புதிய கிரகத்தில் (அந்த கிரகத்தின் சந்திரன் இது) என்ன நடக்கிறது... நம்மை வடிவமைத்தவர்களை கண்டு பிடித்தாகளா? இல்லையா? என்பதை பொறுமை இருந்தால் வெண் திரையில் பாத்துக் கொள்ளுங்கள்... இதுவரை ஆங்கிலப்படங்களே பார்த்திராத மனிதர்கள் கூட சொல்லி விடலாம். அவ்வளவு கொடுமையான ஒரு கதை இது.

ஆல்ரெடி ஆயிரத்தெட்டு ஏலியன் படங்களில் நாம் பார்த்திருக்கும் அதே களம். புதிய கிரகத்தில் மனிதர்கள் போய் இறங்கியதும், அங்கிருக்கும் ஜந்துகள் இவர்களை தாக்குதல் செய்வது. இந்த தாக்குதல்களுக்குப் பயந்து அவர்கள் ஓடுவது. அந்த ஜந்து எப்படியோ இவர்களின் விண்கலத்துக்குள் வந்துவிடுவது. அங்கிருக்கும் அத்தனை பேரும் சாவது.

இந்தப் படத்தின் ஒரே வித்தியாசமான அம்சம் என்ன என்றால் (அல்லது, அது என்ன என்று நான் நினைத்தேன் என்றால்), படத்தின் ஆரம்பத்தில், புல் பூண்டு இல்லாத பூமியில், ஒரு ஏலியன் மனிதன் வந்து இறங்கி, அவனது DNAக்களை கடலில் கலக்கவிட்டு, ஒரு செல் உயிரினத்தை உருவாக்குவது. இதைப் பார்த்ததும், அடடே - ரிட்லி ஸ்காட் இன்னமும் இருக்கிறார் - என்று நினைத்துக்கொண்டுவிட்டேன். அந்தப் பாவத்துக்காக, அதன்பின் படத்தின் அத்தனை சாவடிக்கும் ஸீன்களையும் பார்த்துத் தொலையவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளானேன்.

Ridley scottஐ எனக்கு (இந்தப் படத்துக்கு முன்னர்) பிடிக்கும். மனிதர் பல்லாண்டுகளுக்குப் பிறகு அவருக்குப் பிடித்தமான ஏலியன் கதைக்குள் பிரவேசிக்கிறார் என்பதால், இந்தப் படத்தை நம்பித்தொலைத்துவிட்டேன்.

*- கிறுக்கல்கள் இணையம்*




- ✓ Accountancy & Auditing
- ✓ Business Start up Advice
- ✓ Business Plans & Cash Flow Forecasts
- ✓ Personal tax Affairs & Self Assesment
- ✓ Company Tax Affairs & Company Tax Return (CT 600)
- ✓ Preparing VAT, Payroll for the Sole Trader, Patrnership & Limited Companies
- ✓ Company Formation
- ✓ Attending VAT & PAYE visits
- ✓ Tax Investigations
- ✓ Solicitors Accounts & Accounts Reports

TAMSONS
Accounting & Tax Consultancy Ltd.
65 Southlands Road, Bromley, Kent, BR2 9QR
Tel: 020 8313 0800

# சினிமா

## திரை விமர்சனம்

# முரட்டுக்காளை



*நடிகர்: சுந்தர்.சி, சுமன், விவேக்.*

*நடிகை: சினேகா, சிந்து துலானி.*

*இயக்குனர்: செல்வபாரதி.*

*இசை: சிறீகாந்த் தேவா.*

முதலில் இதுபோன்ற பழைய மசாலா படங்களையெல்லாம் ரீமேக் செய்வதைத் தடை செய்ய வேண்டும். பழைய திரைப்படங்களின் வெற்றிக்கு அக்காலத்திய சமூகச் சூழலும், ரசிகர்களின் மனப்பான்மையும் ஒரு காரணமாக இருக்கும். அதே போன்ற சூழல்தான் இப்போதும் இருக்கும் என்று நினைத்து அவலை நினைத்து உரலை இடித்த கதையாக இப்படத்தை எவ்வளவுக்கு எவ்வளவு சுமாராக எடுக்க முடியுமோ அவ்வளவுக்கு எடுத்துத் தள்ளியிருக்கிறார்கள்.

ரஜினியாக சுந்தர்.சி. ஜெய்சங்கர் வேடத்தில் சுமன். சுமலதா வேடத்தில் சிந்து துலானி. ரதி வேடத்தில் சிநேகா. சுருளிராஜன் கேரக்டரில் விவேக். அசோகன் வேடத்தில் தேவன்.. என்று நடிகர்களை மாற்றியிருக்கிறார்கள்.

அதே கதைதான்.. கொஞ்சம், கொஞ்சம் மாற்றியிருக்கிறார்கள். தனது 4 தம்பிகளுடன் நிலபுலன்களுடன் வசதியாக வாழ்ந்துவரும் காளையன், பக்கத்து ஊரில் நடக்கும் ரேக்ளா ரேஸில் கலந்து கொண்டு ஜெயிக்கிறான். அந்த ஊரின் பெரும் பணக்காரரான சுமனின் தங்கை சிந்து துலானி காளையனை விரட்டி, விரட்டி காதலிக்கிறாள்.

சுமனின் தோட்டத்தில் வேலை செய்பவரின் சொந்தமான சிநேகாவை பார்த்த மாத்திரத்தில் திருமணம் செய்து கொள்ள நினைக்கிறார் சுமன். சிநேகா இதற்கு மறுப்புத் தெரிவிக்க சிநேகாவின் அக்கா கொல்லப்படுகிறாள். தன்னைத் தேடி வரும் சுமனின் அடியாட்களிடம் இருந்து தப்பிக்க காளையனின் வீட்டில் அடைக்கலமாகிறார் சிநேகா.

இதற்கிடையில் காளையன் சும்மாவே வைத்திருக்கும் நிலத்தில் கனிமம் இருப்பதை அறிந்து அதனை விலைக்கு கேட்கிறார் சுமன். காளையன் தர மறுக்கிறார். இடையில் தனது தங்கை காளையனை காதலிப்பதை அறிந்து, மச்சான் உறவுக்குள் வந்துவிட்டால் சொத்துக்களை ஆட்டைய போட்டுவிடலாம் என்று நினைத்து சிந்துவுக்கும், காளையனுக்கும் திருமண ஏற்பாடு செய்கிறார் சுமன். நிச்சயத்தார்த்த தினத்தன்று இந்த உண்மை தெரிந்து காளையன் திருமணத்திற்கு மறுத்துவிடுகிறார்.

சில, பல மோதல்கள், சவால்களுக்குப் பிறகு சிநேகாவை சுந்தர் திருமணம் நடக்கும் தினத்தன்று சுமனின் அடியாளை கொலை செய்த்தாகச் சொல்லி சுந்தரை கைது செய்கிறது போலீஸ். சுமனே கொலை செய்து தன்னை மாட்ட வைத்திருப்பது அறிந்து பாதி வழியிலேயே சுந்தர் போலீஸிடமிருந்து தப்பித்து ஓடுகிறார். அவரைத் தேடி மாவட்ட எஸ்.பி.யே காட்டுக்குள் வருகிறார். அங்கு எஸ்.பி.யை இன்ஸ்பெக்டர் சுட்டுவிட்டு சுந்தர் எஸ்.பி.யை போட்டுத் தள்ளிவிட்டதாகச் சொல்லி போலீஸ் படையை காட்டுக்குள் அனுப்புகிறார். காயமடைந்த எஸ்.பி.யை சுந்தர் காப்பாற்றி அழைத்துச் செல்ல.. சுமன் தனது அடியாட்களுடன் வந்து இவர்களைக் கொலை செய்ய முயல.. முடிவு முன்பே பார்த்ததுதான்..!

சுந்தர் சி. வழக்கம்போலத்தான். அவர் ஒரு நல்ல இயக்குநர் நடிப்பு இனிமேல் வேண்டாம் என்பதை இந்தப் படத்திலும் நிரூபித்துவிட்டார்..! அப்படி, இப்படியெல்லாம் இல்லாமல் நேரடியாக சரோஜா கேரக்டரில் சுருளிராஜன் வேடத்தில், வாய்ஸில் கலாய்த்திருக்கிறார் விவேக். அதே போல் டபுள், டிரிபுள் மீனிங் டயலாக்குகளை அள்ளித் தெளித்திருக்கிறார் விவேக். கொஞ்சம் உன்னிப்பாக கவனித்தால்தான் புரியும் என்றாலும், இதெல்லாம் பெரிசுகளுக்கு ஓகே.. சிறிசுகளுக்கு மனக்குழப்பத்தைத்தான் கொடுக்கும். அதுவும் விவேக் ஏற்றுள்ள திருநங்கை கேரக்டர் அவ்வப்போது அவர்களது கஷ்டங்களை வெளிப்படுத்தினாலும், திருநங்கைகள் என்றாலே இப்படித்தான் பேசுவார்களோ என்ற எண்ணத்தையும் தோற்றுவிக்கிறது. இது எதிர்மறை விபத்தாக போய்விட்டது என்பதை விவேக் உணர வேண்டும்..! தனது தேவையில்லாப் பேச்சுக்களைக் கொஞ்சம் குறைத்து, காட்சியின் விரசங்களையும் நீக்கச் செய்திருந்தால் இன்னும் நன்றாகவே இருந்திருக்கும். இவருக்கும் செல் முருகனுக்கும் இடையில் நடக்கும் அந்த 16 வயதினிலே காதலும். அதைத் தொடர்ந்த காட்சிகளும் கலகலப்பு.

என்னதான் ஹிரோ, ஹிரோயின்களுக்கு மாற்று ஆட்கள் கிடைத்தாலும் இசைக்கு.. ம்.. நோ சான்ஸ்.. இசைஞானி இசைஞானிதான்..! இளையராஜா இசையில் அத்தனை பாடல்களும் கேட்டுக் கொண்டே இருக்கலாம் போலிருக்கும். ஆனால் இதில் ஒன்றுமில்லை பொதுவாக எம் மனசு தங்கம் பாடலை மட்டும் ரீமிக்ஸ் செய்து கொலை செய்திருக்கிறார்கள்.

இந்தப் படத்தின் ஒவ்வொரு காட்சியையும் பழைய படத்தில் உள்ளது போலவே எடுக்க முயன்றுள்ளனர். அட, இறுதிக்காட்சியில் போலீசாக வரும் அசோகனுக்கு எப்படி கட்டு போட்டிருப்பார்களோ, அதே மாதிரிதான் இந்த புதிய படத்தில் வரும் போலீசுக்கும் போட்டிருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். ஆனால், ஒரு காட்சி கூட ரசிக்கும்படி இல்லை என்பது தான் கொடுமை. காட்சிக்குக் காட்சி ரீமேக் செய்ததில் தப்பில்லை? ஆனால் பொருத்த மற்ற நடிகர்கள், குறிப்பாக ஆபாசத்தை அள்ளித் தெளிக்கும் விவேக்கின் பாத்திரம்? ஆரம்பத்திலிருந்து கடும் எரிச்சலைத் தருகிறது .

ஏற்கெனவே பல முறை பார்த்து, பார்த்து திளைத்துப் போன படம் ரஜினியின் முரட்டுக்காளை என்பதால் ஒப்பிட்டு பார்ப்பதை தவிர்க்கவே முடியவில்லை.ரஜினி வேடத்தை ரஜினி மட்டுமே செய்ய முடியும் என்பதை எப்போதுதான் கோடம்பாக்கத்தின் சில்லுண்டுகள் புரிந்து கொள்வார்கள் என்று தெரியவில்லை..! இப்போது என்னுடைய கவலையெல்லாம், பழைய படத்தில் நடித்தவர்கள் இந்தப் படத்தை பார்க்காமல் இருக்க வேண்டும் என்பதுதான்..! அவ்வளவு கொடுமை !!!!

*- மாப்ளே (இணையம்)*

# சினித்துளி

## ஒலிம்பிக்கில் தமிழரின் பாடல்கள்!



தொடங்கவிருக்கும் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுத் திருவிழாவின் தொடக்கவிழா நிகழ்வில், இசைஞானி இளையராஜாவின் பாடல் ஒன்றும் மாயாவின் பாடல் ஒன்றும் இடம் பெற இருப்பதாக செய்தி வெளியிட்டுள்ளன. ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழாவில் நடக்கும் பல்வேறு கலை கலாச்சார நிகழ்வுகளில், இடம்பெறும் 86 பாடல்களில் இந்த முறை தமிழ்த் திரைப்படப் பாடலும் மாயாவின் Paper Planes பாடலும் இடம் பெறுகிறது.

உலக அளவில் பல லட்சக்கணக்கானோர் பார்த்து ரசிக்க இருக்கும் ஒலிம்பிக் தொடக்கவிழாவில் இரண்டு தமிழர்களின் இசை இடம்பெறுவது தமிழர்களை பெருமையடையச் செய்திருக்கிறது என்று சொல்லலாமா?.

## சீமானை விட்டு ஓடிய விஜய்!



பகலவன் படத்தில் நடிக்க ஒப்புக்கொண்ட விஜய் காரணமின்றி பின் வாங்கிவிட்டார். ஆனால் பின் ஒரு நாளில் கண்டிப்பாக ஏன் இந்தப்படத்தில் நடிக்காமல் பின் வாங்கிவிட்டோம் என்று வருத்தப்படுவார் என்று இயக்குநரும் தமிழர் கட்சித் தலைமை ஒங்கிணைப்பாளருமான சீமான் கூறியிருக்கிறார். பகலவன் என தலைப் பிடப்பட்ட அந்தப் படத்தில் பல அரசியல் சம்பந்தப்பட்ட விடயங்கள் இருக்கும் என்றார் சீமான். இதனால் அந்த வாய்ப்பு ஜீவாவுக்குக் கிடைத்துள்ளது.

## திரும்பி வந்த 'சகலகலா வல்லவன்'!!



நடிக்கிற எல்லா ஹிரோக்களுமே கமலை நினைக்காமல் தனது பேட்டிகளை முடிப்பதில்லை. அந்த ஆண்டவருக்கு ரொம்ப வேண்டப்பட்டவரான சூர்யா, அதே கமல் நடித்த 'சகலகலா வல்லவன்' ரீமேக்கில் நடிக்க இருக்கிறார். இப்படத்தை தனது குடும்ப நிறுவனமான க்ரீன் ஸ்டுடியோஸ் சார்பில் தயாரிக்க நினைத்தாராம் சூர்யா. உரிமம் கேட்டுபோன இடத்தில் 'நாங்களே தயாரிக்கிறோம். என்ன சொல்றீங்க' என்று பழைய படத்தினை தயாரித்த ஏ.வி.எம் தரப்பால் பதிலளிக்கப்பட்டதாம்.

அதனால் கெஞ்சமல்ல நிறையவே குழப்பத்தில் இருக்கிறார் சூர்யா! ஏனென்றால் தான் நினைத்த படி படத்தில் மாற்றம் செய்ய முடியாதல்லவா?

## புத்தரை உடைக்கும் கமல்!!



பொதுவாகவே கமல் படங்களில் காதல் இருக்கிற அளவுக்கு நாட்டை பற்றிய அக்கறையும் இருப்பதாகக் காட்டப்பட்டிருக்கும். ஈழம், கொடூர கொலைகள், அகங்காரம், அட்டூழியம் என்று அனைத்துக்கும் சொந்தமான ராஜபக்சேவுக்கு புத்தி சொல்லிக் கொடுப்பது போல் கமல் தனது விஸ்வரூபம் படத்தில் சில விஷயங்களை அடக்கமாக சொல்லி, அதிர வைக்கப் போகிறாராம் இப்படத்திற்காக புத்தர் சிலைகளை உருவாக்கி முற்றிலுமாகத் தகர்க்கிறார்களாம் படத்தில்

புத்தர் சிலைகளை தகர்த்தெறிகிற காட்சி போன்ற உசார் மடையர்கள் செய்கின்ற காட்சிகள் வைக்காது அடுத்த படத்திலாவது ஒழுங்கான நேர்த்தியாகக் கதையை உருவாக்குமாறு கேட்கின்றனராம் ரசிகர்கள்.

பசித்திடும்போதே புசித்திட நாடுங்கள்.

SPICELAND
FOR THE ASIAN TASTE OF
SPICE CURRY

Tamil food Restuarant and Takeaway
Fully Licenced & Air Conditioned

தாயகத்து உணவு வகைகளை தரமாகவும் சுவையாகவும்
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.....

212 London Road, Croydon, Surrey CRO 2TE
020 8667 1700 / 07984 038 757
020 8667 1700 / 020 8649 8895 / 07984 038 757
e-mail : spicelandcroydon@hotmail.com • web : spicelanduk.com

Discover the world with....
Serendib Lanka Travels Ltd

COLOMBO SPECIAL
Emirates.......£485 Jet Airways........£490
Gulf.............£500 Qatar...............£570
Kuwait.........£450 Etihad..............£587

SRILANKAN SPECIAL
Colombo.......£545 Chennai............£500
Tirchi...........£500 Kualalumpur......£590
Singapore.....£590

INDIA SPECIAL
Chennai.....£460 Chennai......£580
(Direct on British Airways)
Tirchi.................................£500

CANADA SPECIAL
Toronto.....£510 Montreal......£545
Ottawa................................£590

WORLD WIDE SPECIAL
Sydney.......................£795
Melbourne..................£680
Oslo...........................£155
Zurich.........................£135
Geneva........................£125
New York....................£410
Washington DC............£420

பாடசாலை விடுமுறையின் போது இலங்கை செல்வோருக்கு விசேட சலுகைகள்

Oman Air : £740.00
Emirates : £797.00
(21 July - 07 Sep)
Srilankan : £810.00
(06 Aug -27 Aug)
Emirates : £527.00
(04 July - 10 Sep)

All fares mentioned are low seasons including taxes

இலங்கை, இந்தியா, கனடா மற்றும் அனைத்து உலக விமான பயணத்தையும் குறைந்த செலவில் மேற்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்.

LEWISHAM : 020 8318 7775 Mob : 07983437835
15 Marischal Road, Lewisham, London SE13 5LE
(லூசியம் சிவன் கோயிலுக்கு அண்மையில்)
E.Mail : info@serendib-lanka.co.uk
9667 ATOL PROTECTED
IATA

# Lycamobile

Call the world for less

# Sri Lanka

Monthly value pack

# 4p /min

## Landline & Mobile

**Get 500 minutes to Sri Lanka Landline & Mobile for just a one off £20 with Monthly value pack**

To buy 'the 500 minutes monthly value pack' **DIAL *139*200500#**

Get up to **£15 FREE* CREDIT**

**when you bring your existing mobile number to Lycamobile**

Rates are calculated based on full usage of minutes to Sri Lanka during the validity period and subscription to the monthly Value Pack

**For your FREE Lycamobile SIM visit www.lycamobile.co.uk or call 020 7132 0322**

Buy and top up online or in over 115,000 stores

Customers may not be able to use Electronic Top-Up at all locations where the top-up logo appears

* This promotion gives up to £15 free mobile top-up credit when you bring your mobile phone number from a different UK mobile phone network to Lycamobile UK between 01/06/2012 and 30/06/ 2012. Free credit is given when the customer number is ported and live on Lycamobile UK and the first top-up is made. The amount of free credit given is dependent on the value of the first top-up: If the first top-up is up to £10, £5 free credit is awarded; if the first top-up is £20, £10 free credit is awarded; and if the first top-up is £30+, £15 free credit is awarded. Customers can bring their mobile phone number from any UK network apart from GT Mobile, Toggle Mobile or Lycamobile. By taking part in the Promotion customers will be deemed to have accepted and agree to be bound by these terms and conditions. The benefits given in this Promotion cannot be transferred. The Monthly Value Pack costs £20 and gives 250 or 500 or 1000 minutes to calls selected International Landline or mobile destinations and it is valid for 30days from the day activated. You may only have one type of value pack active during the appropriate subscription period. Once the value pack been activated a one-off payment, taken from the customers' top-up credit balance. This Promotion is valid from 02/05/2012 to 30/06/2012,See the leaflet overleaf for more details or visit www.lycamobile.co.uk or call customer service on 0207 132 0322 for more information and participating counties. This offer can't be used inconjunction with existing Lyca bundle offer.

Lyca mobile

Call the world for less

# Southall Travel

*Redefining Travel*

*Why travel with*
## Southall Travel?

- ✓ Great value flights to Sri Lanka
- ✓ Number One Travel Agent to India, *with over 20 years experience*
- ✓ Open 24 hours a day, seven days a week. *Call us anytime*
- ✓ Price guarantee *will not be beaten on price*
- ✓ Specialists for worldwide flights and holidays with any airline, anywhere, anytime
- ✓ Fast and reliable service
- ✓ Multilingual staff *offering impartial advice*
- ✓ Trusted household brand *for total peace of mind*

ஏன்
## சவுத்ஹோல் டிராவல்
மூலம் பிரயாணம் செய்ய வேண்டும்?

- ✓ சிறிலங்கா செல்லவிருக்கும் பயணிகளே நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியாக சொகுசாகவும், மனநிம்மதியாகவும் பிரயாணம் செய்லாம்.
- ✓ 20 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள இந்தியாவிற்கான முதன்மைவாய்ந்த பிரயானமுகவர்.
- ✓ வாரத்தில் 7 நாட்களும் 24மணிநேரம் சேவை. எந்நேரமும் தொடர்பு கொள்ளலாம்.
- ✓ விலைகளுக்கு உத்தரவாதம். விலையில் எங்களை ஒருவரும் வெல்ல முடியாது்.
- ✓ உலக விமான விடுமுறைப் பயணங்களையும் எங்கேயும் எப்போதும் எந்நேரத்திலும் எந்த விமானத்திலும் மேற்கொள்ள பிரசித்திபெற்ற நிறுவனம்.
- ✓ நம்பிக்கையான துரித சேவை
- ✓ பலமொழிகளிலும் தேர்ச்சிபெற் ஊழியர்கள். பாரபட்சமற்ற சேவை செய்யக் காத்திருக்கிறர்கள்.
- ✓ நிறைந்த நிம்மதியுடன் பயணம் செய்ய நம்பிக்கையான எல்லோருக்கும் தெரிந்த ஓர் நிறுவனம்

*Call Centre open 24 hours* **0844 855 8017**

ABTA 80626

*Think Travel, Think Southall Travel*

www.southalltravel.co.uk

5553 ATOL PROTECTED